

அதிவேக மனிதனை முந்திய யுவராஜ்

பக்கம் 18


# உதயன்

சுடர்: 29 கதிர்: 282 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 19, வியாழன் 04.09.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

பக்கங்கள்

யாழ். - 20/=
வன்னி - 20/=


04 SEP 2014

தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04



## ஈழத்தமிழர் பிரச்சினைக்கு வேண்டும் நிரந்தரத் தீர்வு

### கருணாநிதி தலைமையில நேற்றுச் சென்னையில் பெரும் போராட்டம்

சென்னை, செப்.4
ஈழத் தமிழர் பிரச்சினைக்கு உடன் தீர்வு காணப்பட வேண்டும் என்று வலியுறுத்தி தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில் சென்னையில் நேற்று மாபெரும் போராட்டம் நடத்தப்பட்டது.

அந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய கருணாநிதி, "ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண அனைவரும் ஒன்றாகப் போராட வேண்டும்" என்று அழைப்புவிடுத்ததுடன், "இந்தியப் பிரதமர் இலங்கைத் தமிழருக்கு விடிவு பெற்றுத் தரும் வரை நாம் தொடர்ந்து போராடுவோம்" என்றும் குறிப்பிட்டார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில் கடந்த மாதம் 26ஆம் திகதி டெசோ அமைப்பின் கூட்டம் நடைபெற்றது.

22 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். கோட்டையில் நேற்று வாள்வெட்டு



யாழ்ப்பாணம், செப்.4
யாழ். கோட்டையின் வாயிலில் வைத்து இருவர் மீது இனந்தெரியாதோர் நேற்றிரவு வாள் வெட்டு நடத்தியுள்ளனர். அதில் குறித்த இருவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா

22 ஆம் பக்கம் பார்க்க

# பேச்சுக்கு முன் வேண்டும் தீர்வுத் திட்டத்தின் வரைவு

### அரசை வலியுறுத்துகின்றது முஸ்லிம் காங்கிரஸ் தமிழ்க் கூட்டமைப்புடன் பேசுவதற்கும் முடிவு

கொழும்பு, செப்.4
"தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு பேச்சை ஆரம்பிப்பதற்கு முன்னதாக, தீர்வுத் திட்டம் குறித்த வரைவை இதய சுத்தியுடன் முன்வைக்க வேண்டும். பேச்சு நடத்த வேண்டும் என்பதற்காக பேச்சை நடத்தாது, பிரச்சினைக்கு விரைந்து தீர்வைக் காணும் நோக்கத்துடன் அரசு பேச்சு நடத்த வேண்டும்." - இவ்வாறு வலியுறுத்தியுள்ளது அரசின் பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்.

"ஊவா மாகாண சபைத் தேர்தல் முடிந்ததும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளோம். அந்தப் பேச்சைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு அதி உயர்பீடக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது."- என்றும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹசன் அலி தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத் திட்ட விவகாரம் தொடர்பில் அவரிடம் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் கூறும்போது,

22 ஆம் பக்கம் பார்க்க



## கிளிநொச்சியில் நேற்று அடுத்தடுத்து 3 விபத்து

### இருவர் சாவு; ஒருவர் படுகாயம்

கிளிநொச்சி, செப்.4
நேற்று நடந்த வெவ்வேறு விபத்துக்களில் பாடசாலை மாணவன் உட்பட இருவர் உயிரிழந்துள்ளனர். ஒருவர் காயங்களுடன் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் கன்ரர் வாகனம் மோதியதில் 7 வயதுடைய சு.தமிழ்மாறன் என்ற மாணவன் உயிரிழந்துள்ளான்.

இயக்கச்சிப் பகுதியில் நேற்று அதிகாலை ரோந்தில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய் மீது வானொன்று மோதியதில் குருநாகலைச் சேர்ந்த ஆர்.டி.சுமிந்தகுமார் (வயது-32) என்பவர் உயிரிழந்துள்ளார். (விரிவான தகவல் 12 ஆம் பக்கத்தில்)



நேற்று மாலை கிளிநொச்சி, கரடிப்போக்குச் சந்தியில் இராணுவத்தினரின் சொகுசு வாகனம் மோதியதில் பு.பவிதா


22 ஆம் பக்கம் பார்க்க

## மாகாண அதிகாரங்களை பிடுங்க மஹிந்த முயற்சி

### சொன்னவை எதையுமே அவர் செய்யவில்லை என வடமாகாண முதலமைச்சர் விக்கி காட்டம்

முல்லைத்தீவு, செப் 4
எமக்கு உறுதிமொழி கொடுத்த எதையுமே செய்யாமல் வடக்கு மாகாணத்தில் மத்திய அரசின் அதிகாரத்தை நிலை நாட்டுவதுடன் மாகாண சபை அதிகாரத்தைப் பிடுங்குவதற்கும் மஹிந்த அரசு முயற்சிக்கின்றது என்று குற்

22 ஆம் பக்கம் பார்க்க



## இறுதிப்போர் நடந்த இடத்துக்கு மீண்டும் அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், செப். 4
பொதுமக்கள் பாவனைக்கு விடப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் கிழக்கில் இறுதிக் கட்டப் போர் இடம்பெற்ற பகுதிகளுக்கு தற்போது, மிதிவெடி அகற்றல் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன என்று தெரிவிக்கப்பட்டு மக்கள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டில் இறுதிக் கட்டப் போர் மிக உக்கிரமாக முள்ளிவாய்க்கால் பகுதியில் இடம்பெற்றிருந்தது. அதிலும் முள்ளிவாய்க்கால் கிழக்கில், விடத்தல் காடு மற்றும் நந்திக் கடல் காட்டுப் பகுதியில் கடும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இந்தப் பகுதிகளில் இடம்பெற்ற மோதல் காரணமாக ஆயிரக் கணக்கான பொதுமக்கள் உயிரிழந்திருந்தனர்.

2012 ஆம் ஆண்டு குறித்த

22 ஆம் பக்கம் பார்க்க

குழம்பிய குட்டையாக தமிழக கட்சிகள்

பக்கம் 14

## தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதிபெற ஐ.நா. முன்பாக சாட்சியமளிக்கத் தவறாதீர்கள்

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.4
தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்ற - நடைபெற்றுவரும் அநீதிகளை ஐ.நா. விசாரணைக் குழுவுக்கு முழுமையாகச் சமர்ப்பிப்பதன் மூலம், தமிழ் மக்கள் சர்வதேச அனுசரணையுடன் நீதியைப் பெற

22 ஆம் பக்கம் பார்க்க




### சாட்சியமளிப்பது எவ்வாறு?

யாழ்ப்பாணம், செப்.4
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் இலங்கை தொடர்பில் நடத்தப்படும் விசாரணைகளில் எவ்வாறு சாட்சியங்களை வழங்க முடியும் என்பது குறித்து விளக்கமளித்துள்ளது தமிழ்த் தேசிய

22 ஆம் பக்கம் பார்க்க

# ஊவா மாகாணத் தேர்தல் எதிர்கால அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்தும்

## அரசின் வீழ்ச்சிப் பயணம் ஆரம்பம் என்கிறது ஐ.தே.க.

கொழும்பு, செப்.3

இந்த மாதம் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள ஊவா மாகாண சபைத் தேர்தல் எதிர்கால அரசியலில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்துள்ளார். இந்தத் தேர்தலோடு அரசின் வீழ்ச்சிப் பயணம் ஆரம்பமாகும். அந்த அச்சத்தின் காரணமாகவே ஊவாவிலுள்ள ஐ.தே.கவின் காரியாலயங்கள் அரசால் தாக்கப்படுகின்றன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இந்தத் தேர்தலோடு அரசின் வீழ்ச்சிப் பாதை ஆரம்பிக்கப் போகின்றது. அதற்கான நடவடிக் கைகளை தமது கட்சி தற்போது முன்னெடுத்துள்ளது. ஊவா வன்முறைகள் குறித்து முறைப்பாடு செய்யவுள்ளோம்"- என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# தார்மீக உரிமை இல்லை போட்டியிட ஜனாதிபதிக்கு

## ஜே.வி.பி. தலைவர் கூறுகிறார்

கொழும்பு,செப்.4

இப்போதைய அரசு எந்த விதத்திலாவது பதவியிலிருந்து இறக்கப்பட வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். நாட்டின் சொத்துக்கள் தொடர்ந்து சூறையாடப்படுவதைச் சட்டம் ஒழுங்கு சீரழிந்து போவதை, ஊழல்கள் மலிந்து வருவதை போதைவஸ்து கடத்தல் தொடர்வதை, சர்வதேசத்துடனான எமது உறவுகள் விலகிப் போவதை நாம் சகித்துக் கொண்டிருக்க முடியாது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனதா விமுக்தி பெரமுனையின் தலைவர் அனுர குமார திசாநாயக்க. கொழும்பு ஆங்கில பத்திரிகையொன்றுக்கு அவர் அளித்துள்ள நேர்காணலில் தெரிவித்துள்ள மேலும் சில முக்கிய கருத்துக்கள் வருமாறு:-

எந்த ஒரு ஆட்சியாளரும் தொடர்ந்து 18 ஆண்டுகள் பதவியிலிருக்கலாகாது. இப்போதைய ஜனாதிபதி இதுவரை 12 ஆண்டுகள் பதவியில் இருந்துவிட்டார். இது போதும் என்பதற்கும் அதிகமாகும்.

இந்த ஜனாதிபதியானவருக்கு மூன்றாவது தடவையும் போட்டியிடுவதற்கு தார்மீக உரிமை கிடையாது. அரசமைப்பு அதற்கு வழி வகுக்கவில்லை. ஜே.வி.பி.இது தொடர்பாக ஒரு உபாயத்தை வகுக்கவிருக்கின்றது. இந்த அரசை பதவி நீக்கம் செய்வதே எமது பிரதான நோக்கம். அரசமைப்பை மாற்றி அமைப்பதற்கு ஒரு கட்சி பிரதிநிதிகள் சபையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்றிருக்க வேண்டும். அது ஒரு பெரிய மக்கள் ஆணையாகும்.

இருந்தாலும் இந்த அரசும் சபையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கொண்டுதான் இருக்கிறது. இது அரசியல் தில்லுமுல்லுகளால் உருவாக்கப்பட்ட பெரும்பான்மை தேர்தலில் அது மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ளவில்லை. பல்வேறு வசதி வாய்ப்புக்களைக் காட்டி எதிர்க்கட்சியிலிருந்து சில உறுப்பினர்களை தம் பக்கம் இழுத்துக் கொண்டதால் வந்த பெரும்பான்மை அரசுடன் சேர்ந்து கொண்டமையால் சில உறுப்பினர்கள் மீது இருந்த சில சட்ட நடவடிக்கைகள் திரும்பப் பெறப்பட்டுவிட்டன. எனவே அரசமைப்பில் அவ்வாறான பெரும்பான்மையைக்கொண்டு 18 ஆவது திருத்தம் சேர்த்துக் கொள்ளப்பட்டமை தார்மீக ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்று.

ஊவா மாகாண தேர்தல் தொடர்பாக ஜே.வி.பி. தலைவர் கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை:-

தேர்தல் ஆணையாளர் தமக்கு இருக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்த வேண்டும். இருக்கும் அதிகாரங்களை பயன்படுத்தாதவர்களால் இன்னும் அதிகாரங்கள் அதிகரித்தாலும் ஒன்றும் செய்ய முடியாது. தேர்தல் தினத்தில் ஊர்வலங்கள் தடை செய்யப்பட்டிருந்தன. ஆனால் அரசுத் தரப்பு வேட்பாளர் ஒருவர் ஒரு வாகன ஊர்வலத்தை நடத்தினார். அதைத் தடுக்க முயன்ற உதவி ஆணையாளர் ஒருவருக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது.

ஊர்வலத்தைப் படம் பிடித்தவரின் வீடியோ கமரா நிலத்தில் அடித்து நொருக்கப்பட்டது. இப்போதைய தேர்தல் சட்டம் வலுவானதாக இல்லை என்பதை நாம் அறிவோம். ஆனால் இருக்கும் அதிகாரத்தை ஆணையாளர் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

வாக்காளர்களுக்கு பல்வேறு முறைகளில் லஞ்சம் வழங்கப்படுவதை நிறுத்தலாம். சட்ட விரோத ஊர்வலங்கள் சட்ட விரோத அரசியல் கட்சி காரியாலயங்கள் ஆகியவற்றை தடை செய்யலாம். இப்போதைய சட்டத்தில் இதற்கெல்லாம் இடம் இருக்கிறது என்றார் அவர். (ப)

# அனுமதியின்றி மிருகப்பலி பூசை நடத்த முடியாது

கொழும்பு, செப்.4

தகுந்த அனுமதிப் பத்திரமின்றி சிலாபம் முன்னேஸ்வர ஸ்ரீ பத்திர காளி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மிருகபலி யாகத்தை நடத்த முடியாது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தேசிய சங்க சம்மேளனம் சமர்ப்பித்த மனுவொன்றை ஆராய்ந்த மேன்முறையீட்டு நீதிமன்றம், சம்பந்தப்பட்ட மிருக பலி யாகம் சட்ட விரோதமானது என்றும், மிருகங்களைக் கொல்வது சம்பந்தமான அனுமதிப் பத்திரங்களைப் பெறாமல் அவற்றை நடத்த முடியாது என்றும் தீர்ப்பளித்துள்ளது.

தடை வழங்கக்கூடாது என்று கோரி முன்னேஸ்வர ஆலயம் சார்பில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மனுவை தள்ளுபடி செய்த பின்னர் தலைமை நீதிபதி மொஹான் பீரிஸ் உட்பட மூவர் அடங்கிய உயர் நீதிமன்ற தீர்ப்பாயம் இந்த தீர்ப்பை வழங்கியுள்ளது. இந்த தீர்ப்பை ஆதரிப்பதாக தேசிய சங்க சம்மேளனத்தின் பாஹியன்கல ஆனந்த சாகர தேரர் தெரிவித்தார்.

மிருக வதை தொடர்பான நூறு வருடங்கள் பழமையான சட்டங்களை புதுப்பிக்க வேண்டும் என்று வன விலங்குகள் பாதுகாப்பு அமைப்பின் தலைவி ஆயிராங்கனி சில்வா கூறினார். இந்த தீர்ப்பு சம்பந்தமாக கருத்து கூற பத்திரகாளியம்மன் தேவாலயம் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் மறுத்து விட்டனர்.

இந்த தீர்ப்பை ஆராய்ந்து சட்ட ஆலோசனைகள் பெற்ற பின்னர்தான், அடுத்தவாரம் நடக்கவுள்ள மிருக பலி யாகம் தொடர்பாக முடிவு எடுக்கப்படுமென தேவாலய நிர்வாக தரப்பில் ஒருவர் தெரிவித்துள்ளார். (ற)



# சுப்பிரமணிய சுவாமிக்கு எதிராக இராமேஸ்வரம் மீனவர் போராட்டம்

## அவரது உருவப் பொம்மையையும் தீயிட்டு எரித்தனர்



இராமநாதபுரம், செப்.4

தமிழக மீனவர்களின் படகுகளைப் பறிமுதல் செய்து, மீனவர்களை மட்டும் விடுவிக்குமாறு இலங்கை அரசுக்கு ஆலோசனை வழங்கிய பா.ஜ.க. தலைவர் சுப்பிரமணிய சுவாமியின் செயற்பாட்டைக் கண்டித்து இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தின்போது அவர்கள் சுப்பிரமணிய சுவாமியின் உருவப்பொம்மையைஎரித்துத்தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ச்சியாகக் கைது செய்யப்பட்டு வருகின்றனர். கைது செய்யப்படும் மீனவர்கள் பின்னர் விடுவிக்கப்பட்டு வந்தபோதும், அவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட படகுகள் இலங்கையிலேயே தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றை விடுவிக்க வேண்டும் என்று கோரி தமிழக மீனவர்கள் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தநிலையில், மீனவர்களை மட்டும் விடுவித்து விட்டு, அவர்களது படகுகளைத் தடுத்து வைக்குமாறு நானே இலங்கை அரசுக்கு ஆலோசனை வழங்கினேன் என்று பா.ஜ.கவின் மூத்த தலைவர் சுப்பிரமணிய சுவாமி தனியார் தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றுக்கு வழங்கிய நேர் காணலில் அண்மையில் கூறியிருந்தார். அவரின் செயற்பாடு தமிழக மீனவர்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அவரின் செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்விதமாகவே இராமேஸ்வரம் மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இராமேஸ்வரம் மீன்வளத்துறை அனுமதி வழங்கும் டோக்கன் அலுவலகம் முன்பு சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கூடி, சுப்பிரமணிய சுவாமியின் உருவப் பொம்மையை எரித்துத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். (ற-14)

# குடிதண்ணீர் தட்டுப்பாட்டில் புங்குடுதீவு வைத்தியசாலை

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

> கடந்த சில மாதங்களாக நிலவிவரும் வறட்சியான காலநிலையால் வடக்கு மாகாணம் வெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. தீவகப் பகுதிகளில் பெரும் குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அதனால் மக்கள் பெரும் இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர்.

யாழ்ப்பாணம்,செப் 4

புங்குடுதீவு பிரதேச வைத்தியசாலையில் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்றும் பிரதேச சபை, பிரதேச செயலகத்தினூடாக வழங்கப்படும் நீர் விநியோக சேவை வைத்திய சாலைக்குக் கிடைப்பதில்லை எனவும் வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வைத்தியசாலையில் உள்ள கிணறு முன்னர் ஓரளவு நீர்த் தேவையைச் சமாளிக்க உதவியது. ஆயினும் தற்போது அந்த கிணற்றில் இருந்து நீரைப் பெறக் கூடியதாக இல்லை. வைத்தியசாலைக்கான நீர் விநியோகம் தனியார் பஸ் உரிமையாளர் ஒருவராலும், அங்குள்ள கத்தோலிக்க குருவின் உதவியுடனும் தற்போது கிடைக்கின்றது. வைத்தியசாலைக்கு நீர் வழங்க பிரதேச செயலகம், பிரதேச சபை என்பன நடவடிக்கை எடுக்க வேண்டும்"- என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

அதேவேளை, புங்குடுதீவு, வேலணை, மண்டைதீவு, ஊர்காவற்றுறை வைத்திய சாலைகளுக்கு குடிதண்ணீர் விநியோகிக்கக் கூடியதாக பவுஸர் ஒன்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அங்கு சென்றிருந்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே.விந்தன் கனகரத்தினம் தெரிவித்துள்ளார். (ற-7)

# இந்திய வீட்டுத் திட்டத்தின் மூன்று வீடுகள் கையளிப்பு

## முல்லைத்தீவில் பயனாளிகளுக்கு இந்தியப் பிரதித் தூதுவர் வழங்கினார்



யாழ்ப்பாணம், செப்.4

முல்லைத்தீவில் இந்திய வீட்டுத் திட்டத்தின் ஊடாக அமைக்கப்பட்ட 3 வீடுகள் பயனாளிகளிடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டன. அவற்றை இந்தியப் பிரதித் தூதுவர் எஸ்.டி.மூர்த்தி கையளித்தார்.

வண்ணான்குளம், கொக்குத்தொடுவாய் மத்தி, கருநாட்டுக்கேணி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட வீடுகளே இவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளன. கையளிப்பு நிகழ்வின் பின்னர், இந்தியப் பிரதித் தூதுவர் பயனாளிகளின் குழந்தைகளுக்கு எழுது பொருள்களை வழங்கியதுடன், பயனாளிகளின் வீடுகளில் மரக் கன்றுகளையும் நட்டார்.

இந்த நிகழ்வில் முல்லைதீவு கச்சேரியில் பணிபுரியும் திரு. ஸ்ரீரங்கன், திட்டமிடல் அதிகாரி திரு. ஸ்ரீகாந்த், தூதரக வீட்டுத்திட்ட அதிகாரி, திட்ட செயலாக்க அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தநிகழ்வின் பின்னர் இந்தியப் பிரதித் தூதுவர் இந்திய வீட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளும் பிற இடங்களையும் பார்வையிட்டார். அத்துடன் முல்லைத்தீவு அரச அதிபர் திரு. வேதநாயகனையும் சந்தித்தும் கலந்துரையாடினார். (ற)

# 15 கிலோ கஞ்சா மாதகலில் மீட்பு

யாழ்ப்பாணம், செப் 4

மாதகல் பகுதியில் 15 கிலோ எடையுடைய கஞ்சா பைக்கற்றுக்களாகச் சுற்றப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது என்று இளவாலைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த கஞ்சாவை கடற்படையினர் மீட்டுத் தம்மிடம் ஒப்படைத்தனர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் குறித்த கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. அது யாரால் அங்கு கொண்டுவரப்பட்டது என்பது குறித்தோ, எங்கு கொண்டு செல்லப்படவிருந்தது என்பது குறித்தோ எதுவும் தெரியவரவில்லை என்றும், இதுகுறித்து மேலதிக விசாரணை நடைபெற்று வருகின்றது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அண்மைக் காலமாக குடாநாட்டில் கஞ்சா கைப்பற்றப் படுவது அதிகரித்த வண்ணம் உள்ளது. (ற-4)

பக்கங்கள்: இருபத்திநான்கு

Registered as a Newspaper

# உதயன்


விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 19 வியாழன் (04.09.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 282

# வட மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட பெரும் தொகையை அரசு ஏப்பம்

## வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு



முல்லைத்தீவு, செப்ரெம்பர் 4

**5ஆயிரத்து 831 மில்லியன் ரூபாவை வடக்கு மாகாண விருத்திக்குத் தாம் ஒதுக்கியுள்ளோம் என்று அரசு கூறியுள்ளது. வடக்கு மாகாண சபைக்குக் கிடைத்திருக்கும் மொத்தத் தொகையே 1876 மில்லியன் ரூபா மட்டுமே. மிகுதி 3ஆயிரத்து 955 மில்லியனை அரசு வைத்திருந்து ஏப்பம் விடுகின்றது.**

**இவ்வாறு குற்றம் சாட்டினார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.**

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று மாலை இடம்பெற்றது. இதில் இணைத் தலைமை வகித்து உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தனது உரையில் மேலும் கூறியதாவது:-

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் இணைத் தலைவராக தலைமை தாங்க வேண்டும் என்று ஜனாதிபதியின் 18-11-2013 கடிதத்தால் நான் கேட்கப்பட்டிருந்தேன். அந்தக் கடிதத்தின் படி வருங்காலம் சம்பந்தமான மஹிந்த சிந்தனையை நடைமுறைப் படுத்தவே மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவானது உருவாக்கப்பட்டுள்ளது என்று கூறி என்னை அதனை நடைமுறைப்படுத்த உதவும் வகையில் இணைத் தலைவராக வேண்டும் என்று கேட்கப்பட்டிருந்தேன். மஹிந்த சிந்தனையை நடைமுறைப்படுத்த வேண்டிய கடப்பாடு எதுவும் எமக்கில்லை. அந்தச் சிந்தனையை முன் வைத்த கட்சிகளைத் தான் நாங்கள் தேர்தலில் முறியடித்திருந்தோம். எம்மைப் பொறுத்த வரையில் எமது மக்களுக்கு ஏற்ற புதிய சிந்தனைகளையே நாம் உருவாக்க வேண்டிய ஒரு கடப்பாடு எம் எல்லோரையும் சார்ந்துள்ளது என்பதை நாம் மறுத்தலாகாது. அப்படியிருந்தும் கூட அரசுடன் இணைந்து ஒத்துழைக் கலாம் என்ற எண்ணத்தில் இந்த வருடம் ஜனவரி மாதம் 2ஆம் திகதி ஜனாதிபதியைச் சென்று சந்தித்தேன். பல உறுதிப்பாடுகளை அவர் அந்தத் தருணத்தில் தந்திருப்பினும் எதனையும் அவர் இன்று வரை நடைமுறைப் படுத்தவில்லை. அதற்குப் பதிலாக மக்களின் ஜனநாயக உரிமைகளை மதியாமல் தொடர்ந்து மத்திய அரச கட்டமைப்புக்களே வடமாகாண நிர்வாகப் பரிபாலனத்தைக் கொண்டு நடத்தி வருகின்றன. இங்கு ஒன்றை நினைவுபடுத்த விரும்

(19ஆம் பக்கம் பார்க்க)

## மாகாண சபைச் சுதந்திரத்தில் கை வைப்பதற்கே திவிநெகும

முல்லைத்தீவு, செப் 4

மத்திய அரசின் கீழ் சகல அதிகாரங்களையும் உள்ளிழுக்கவே நடவடிக்கைகள் மத்திய அரசால் தற்பொழுது முடுக்கி விடப்பட்டுள்ளன.

இதற்குத் திவிநெகும சட்டம் ஒரு உதாரணம். மாகாண சபைகளின் சுதந்திரத்திலும் அதிகாரங்களிலும் கை வைப்பதாகவே மேற்படிச் சட்டம் அமைந்துள்ளது என்று வடக்கு முதலமைச்சர் நேற்றுக் கூறினார்.

முல்லைத்தீவில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

எல்லா மாகாணங்களையும் ஒரேவாறாக நடத்துவோம், ஒரேவாறான நிதிகளையே வழங்குவோம் என்று அரசு கூறுவது கேலிக்கிடமாக அமைகின்றது. கிழக்கையும் எங்க

(19ஆம் பக்கம் பார்க்க)

## உயர் அழுத்த மின்சாரத்தால் நாசமாகின மின் சாதனங்கள்

### சாவகச்சேரி வைத்தியசாலையில்

தென்மராட்சி, செப். 4

உயர் அழுத்த மின்சாரம் திடீரென வந்ததால் சாவகச்சேரி மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவில் உள்ள 4 ஈ.சி.ஜீ இயந்திரங்கள், 4 செயற்கை சுவாசம் வழங்கும் சாதனங்கள், 10இற்கு மேற்பட்ட மின் ஆழிகள், 25க்கும்மேற்பட்ட மின் குமிழ்கள் என்பன எரிந்து நாசமாகின.

இந்தச் சம்பவம் நேற்று பகல் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பாக இலங்கை மின்சார சபைக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அங்கிருந்து வந்த பணியாளர்கள் மருததுவமனையில் காணப்பட்ட மரத்திலான மின் கம்பத்திற்குப் பதிலாக கொங்கிறீற்றிலான கம்பங்களை நாட்டிவிட்டு மின்சாரத்தைச் சீர் செய்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு சாவகச்சேரி நகரையண்டிய கல்லடிமூட்டு ஒழுங்கை, பழைய பொலிஸ் நிலைய வீதி, சிவன் கோவில் பகுதி, இராசதோப்பு வளவடி போன்ற இடங்களில் உயர் அழுத்த மின் வரவினால் 15க்கும் மேற்பட்ட வீடுகளில் மின் சாதனங்கள் எரிந்து சேதமடைந்தன.

இந்த வீடுகளில் இயங்கிக் கொண்டிருந்த தொலைக் காட்சிகள், கணினிகள், மின் குமிழ்கள் உட்பட பல்வேறு மின் சாதனங்கள் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## ஊவா பிரசாரப் போர் உக்கிரம் கட்சித் தலைவர்கள் களத்தில்

கொழும்பு, செப்.4

ஊவா தேர்தல் களத்தில் இறுதிக் கட்டப் பரப்புரைகளை முன்னெடுப் பதில் பிரதான அரசியல் கட்சிகள் தீவிரம் காட்டி வருகின்றன. இன்னும் ஓரிரு நாட்களில் பரப்புரைப் போர் உக்கிரமடையுமென கள நிலவரங்களிலிருந்து அறியமுடிகின்றது. ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர், ஜே.வி.பி. தலைவர் உட்பட அரசியல் கட்சிகளின் தலைவர்கள் நேரடியாகக் களமிறங்கி வேட்பாளர்களை ஆதரித்து சூறாவளிப் பிரசாரத்தில் ஈடுபடவுள்ளனர்.

இவ்வாறு ஊவாத் தேர்தல் களம் நாளுக்கு நாள் சூடுபிடித்துவரும் நிலையில், ஒரு புறத்தில் வாக்குவேட்டைக்கான போட்டியும் மறுபுறத்தில் தேர்தல் வன்முறைகளும் அதிகரித்து வருகின்றன. இது தொடர்பில் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளும் அறிக்கை விடுத்துள்ளன.

குறிப்பாக ஊவா மாகாணத்தில் கடந்த நாள்களில் கடும் வறட்சி நில வியது. இதனால் தோட்டத் தொழிலாளர்களுக்கு குறிப்பாக பதுளை மாவட்டத்தில் வாழும் தொழிலாளர்களுக்கு வேலைநாட்கள் குறைக்கப்பட்டன. வாரத்துக்கு 3 அல்லது 4 நாள்களே தோட்ட நிர்வாகத்தால் வேலை வழங்கப்பட்டுள்ளது. இதனால் அவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டது. இந்நிலையில், அவர்கள் தற்போது பலவந்தமாக பிரசாரக் கூட்டங்களுக்கு அழைக்கப்படுவதாகவும் கூறப்பட்டது. (த-சி)

## பிணை உறுதிப்படுத்தலுக்காக கமலின் விடுதலை தாமதம்

யாழ்ப்பாணம்,செப். 4

நெடுந்தீவுப் பிரதேச சபைத் தவிசாளர் றெக்ஷயனின் கொலைக் குற்றச்சாட்டில் 9 மாதங்களாக விளக்கமறியலில் இருந்து பிணையில் விடுவிக்கப்பட்ட கமலை பிணை எடுப்பதற்கு விதிக்கப்பட்ட நிபந்தனையை உறுதிப்படுத்துவதற்கான பணிகளுக்காக அவர் பிணையில் வெளிவருவது தாமதமாகிறது. நாளை முற்பகல் அவர் பிணையில் வெளிவருவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஈ.பி.டி.பியின் முன்னாள் அமைப்பாளரும் வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சியின் முன்னாள் உறுப்பினருமான கந்தசாமி கமலேந்திரன் (கமல்) மற்றும் றெக் ஷயனின் மனைவியான அனித்தா ஆகிய இருவரும் யாழ்.மேல் நீதிமன்றினால் கடந்த வெள்ளிக்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

வழக்கு நடவடிக்கைக்காக அன்றி வேறு எந்தக் காரணத்துக்காகவும் யாழ்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## தனியார் பஸ் பிரச்சினை நேற்றும் தீர்வு இல்லை

### அரசு மீது சாரதிகள் கடும் விசனம்

யாழ்ப்பாணம், செப். 4

யாழ். - கொழும்பு சேவையில் ஈடுபடும் வழி அனுமதிப் பத்திரம் இல்லாத தனியார் பஸ்களுக்கு அதனை வழங்க மறுத்து முரண்டு பிடிக்கும் தேசிய போக்குவரத்து ஆணைக் குழு அந்த அனுமதிப் பத்திரத்தை கேள்வி கோரலில் விடவுள்ளதாகக் கூறியுள்ளதனால் தாம் கடுமையாகப் பாதிக்கப் படவுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

வடக்குக்கு மாத்திரம் ஏன் அதிக கட்டணம் என்பதற்கோ, 2 பஸ்கள் வைத்திருக்கும் ஒருவருக்கு ஏன் 10 வழித்தட அனுமதி வழங்கினீர்கள் என்பதற்கோ, வழித்தட அனுமதியைப் பெறுவதற்கு ஏன் கேள்வி கோரல் என்ற புதிய நடைமுறை என்பதற்கோ உரிய பதில்களைத் தேசிய போக்குவரத்து அதிகாரிகள் வழங்க மறுத்துள்ளனர் எனவும், அவர்களின் இந்தச் செயற்பாடு அந்த அதிகாரிகள் கையூட்டுப் பெறுவதற்கா எனவும் தனியார் பஸ் உரிமையாளர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

வடக்கிலுள்ள பஸ் சாரதிகளைக் கொழும்புக்கு நேற்று அழைத்த தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினர், அவர்களது பிரச்சினை தொடர்பில் உரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்கவில்லை.

வழித்தட அனுமதி இல்லாத

(19ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்துக்கு பிரிட்டன் தூதுவர் ரங்கீன் நேரில் பயணம்

கொழும்பு, செப். 4

வடபகுதிக்கான பயணத்தின்போது இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஜோன் ரங்கீன் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்துக்குப் பயணம் மேற்கொண்டு பிரிட்டனின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படும் சமூக பொலிஸ் திட்டம் குறித்து ஆராய்ந்தார்.

ஆசியா பவுண்டேசனின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் இந்த திட்டம் பொலிஸாருக்கும் உள்ளூர் மக்களுக்கும் இடையில் நல்லுறவை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டது.

இந்தத் திட்டத்தில் இணைந்துள்ள பொலிஸாருடனும் பொது மக்களுடனும் உரையாடியது மகிழ்ச்சியளிக்கின்றது. அவர்கள் குறிப்பிட்ட திட்டம் காரணமாக தமது கிராமத்தில் நிகழ்ந்துள்ள மாற்றம் குறித்தும், பொலிஸாருடனான நம்பிக்கை அதிகரித்துள்ளது குறித்தும், குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதில் தாங்கள் ஆற்றக்கூடிய பங்களிப்பு குறித்தும் வெளிப்படையாக உரையாடினர். பொது மக்கள் மற்றும் சிவில் நிர்வாகம் மத்தியிலான நம்பிக்கையை வளர்ப்பதே நல்லிணக்கத்திற்கான முக்கிய விடயம் என தெரிவித்துள்ளார். (த)

## யாழில் 2 பஸ்கள் மீது நேற்றிரவும் தாக்குதல்

யாழ்ப்பாணம், செப். 4

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற இரண்டு பஸ்கள் மீது யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்றிரவு 8.30 அளவில் கல்வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். கச்சேரியடியில் வைத்து ஒரு பஸ் மீதும் யாழ். அரியாலையில் வைத்து மற்றொரு பஸ் மீதும் கல்வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதல் நடத்தியவர்கள் தப்பிச் சென்றுள்ளனர். நேற்று

(19ஆம் பக்கம் பார்க்க)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி புஸ்பமலர் தம்பிராஜா (Retd Teacher)

(Uduvil Girls College, Uduvil Jaffna & Kingston College International Mutuwal)



நவாலி கிழக்கு யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் 65/278, விஸ்டவைக் வீதி, கொழும்பு 15ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஷ்பமலர் தம்பிராஜா (02.09.2014) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் யோசுவா ஐசாக் தம்பிராஜாவின் பிரிய மனைவியும், நீற்றா (மெல்போன்), சரண்ஜிற் (கன்பெரா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜேம்ஸ் ஜெயசீலன் (ஆஸ்திரேலியா), சஜினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும், ஜெரோம், யூலியன், ஜெறூசா, ஜெசிக்கா, நவீன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான ஞானரத்தினம், சற்குணம், சுகந்தசீலன் (Suganth International), பத்மினிதேவி மற்றும் புஷ்பராஜா (Retd.Consultant FAO, Canada), சரோஜினிதேவி (கனடா), ஞானதேவி, நிர்மலாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காந்திமதி, யோகாம்பிகை, Dr. சத்தியவாணி (கனடா), வாகீஸ்வரி (Retd.Teacher கொழும்பு), காலஞ்சென்ற சிவபாலன் மற்றும் அன்புராஜா (Retd.YMCA Navaly) நாகையா (Retd.Principal), அருட்திரு சாம் ஞானராஜா (மெதடிஸ்த திருச்சபை), காலஞ்சென்றவர்களான சின்னண்ணன் யேசுசகாயம், பொன்னுத்துரை, நல்லம்மா, அருளையா, ஞானப்பிரகாசம் மற்றும் இன்பமலர், இராசமணி, வண.ஐசாக் செல்வரட்ணம், காந்தி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரது இல்லத்தில் நாளை (05.09.2014) வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்துக்காக மாதம்பிட்டிய சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொழும்பு - 15.
T.P : 011 252 4450, 077 774 7137

தகவல்: (51638)(7.6)
J.I.தம்பிராஜா (கணவர்)

## செல்லத்துரை சிவலிங்கம்



வேலணைத்துறையூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சிவலிங்கம் நேற்றுமுன்தினம் (02.09.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் செல்லத்துரை - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், திலகவதியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான நாகராசா - பூரணம் தம்பதியரின் மருமகனும், ரேவதி (லண்டன்), லவன் (லண்டன்), ஜெயமலர், சிவமலர் (பிரான்ஸ்), எழில்வேந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற நாகலிங்கம், கனகலிங்கம், செல்வலிங்கம் மற்றும் காசிலிங்கம் (பிரான்ஸ்), திருவாசலிங்கம் (கட்டட ஒப்பந்தகாரர்), சுந்தரலிங்கம் (பிரான்ஸ்), இராமலிங்கம் (பிரான்ஸ்), அருந்தவமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், இராமமூர்த்தி (லண்டன்), கஜந்திகா (லண்டன்), ஜேஜேந்திரன், ஆனந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கனகசபாபதி, துரைச்சாமி, கிருஸ்ணமூர்த்தி, சிவராஜா, பகவதி, பேரின்பம், சரஸ்வதி, பத்மினி, காலஞ்சென்ற ஆனந்தராசா மற்றும் இரத்தினம், ரஞ்சினி, செல்வராணி, வசந்தகுமாரி, தேன்மொழி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், செல்வராசா, கந்தசாமி, நவரத்தினம், குலமணி, பத்மினி, யோகரட்ணேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.09.2014) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப.11.00 மணியளவில் தாழையம்பதி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேலணை தெற்கு,
துறையூர்.

(51630) (12.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி சிவனேஸ்வரி (பேபி) ஜெயரட்னம் (உரும்பிராய்)

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவனேஸ்வரி ஜெயரட்னம் நேற்றுமுன்தினம் (02.09.2014) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.



அன்னார் காலஞ்சென்றவர்களான அரிய நாயகம் - சின்னம்மா தம்பதியரின் புதல்வியும், ஜெயரட்னத்தின் அன்பு மனைவியும், சிவஜெயந்தன், ஜெயந்தினி, சர்மிளா, காா்த்திகா, சிவபிரியா ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருஸ்ணவேனன், சுதாகரன், ராசினி, வருணன், ரிசோகரன் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற பொன்மலர், ஞானமணி, சிவநாயகம், நவரத்தினம் (தலைவர், உரும்பிராய் முருகன் கோயில்) ஆகியோரின் சகோதரியும், நாகம்மா, செல்வரத்தினம், இராசரத்தினம், புண்ணிய மூர்த்தி, சரஸ்வதி, நவரத்தினம், புஸ்பராணி ஆகியோரின் மைத்துனியும், கீரன், லதுசன், கரினா, பிரணவி, பிரித்திகா, பிரஸ்ரிகா, காவியன், தேனுகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், உதயசுதர்சினி (ஆசிரியை புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை), குணநேசன் (மகா சில்க்ஸ்) ஆகியோரின் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.09.2014) வியாழக்கிழமை பி.ப.3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஒஸ்கா லேன்,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

(C15672) (12.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## யோகாசன பயிற்சியில் புதிய பிரிவு ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 4

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் யோகாசன தியானப் பயிற்சியில் புதிய பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது.

நாளை மறுதினம் சனிக்கிழமை நாவலர் மணி மண்டபத்தில் காலை 6.30 மணி முதல் 8.30 மணி வரை புதிய வகுப்பு ஆரம்பித்து நடத்தப்படவுள்ளது.

இந்துகலாசாரதிணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் மகிந்தினி விஜயகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த வகுப்பில் கலந்து கொள்வோர் நல்லூர் நாவலர் கலாசார மணி மண்டபத்தில் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்றும் பயிற்சி வகுப்புகள் ஆண்கள், பெண்கள் என இரு பிரிவாக நடத்தப்படும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஆண்களுக்கான வகுப்புகள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 6.30 மணி முதல் 7.30 வரை நடைபெறவுள்ளன. பெண்களுக்கான வகுப்புக்கள் 7.30 முதல் 8.30 மணி வரை நடைபெறவுள்ளன. 6 மாத கால பயிற்சிநெறியாக இந்த வகுப்புகளில் நோயாளர்கள் தொடர்பில் விசேடகவனம் செலுத்தப்படும் என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (வ-10)

## 31ஆம் நாள் நினைவுகள்

தோற்றம்
21.11.1927



மறைவு
05.08.2014

### கணபதிப்பிள்ளை மகேசன்

காரைநகரைப் பிறப்பிடமாகவும் கனடாவில் வசித்தவருமான கணபதிப்பிள்ளை மகேசன் காலமானார். இவர் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் போர்மன் ஆகப் பணிபுரிந்தவரும் ஆவர்.

அன்னாரின் 31ஆம் நாள் நினைவுகள் கனடா ரோறன்ரோவில் நடைபெறும் என்பதை அறியத் தருவதோடு, அன்னாரின் மரணச் செய்தி தொடர்பாக தொலைபேசி மூலமும், நேரிலும் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ரொறன்ரோ
கனடா

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஓம் மங்களேஸ்வரி அம்மா துணை

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

பூலோகம்
20 . 05 . 1943



கைலாயம்
06 . 08 . 2014

### திருமதி மங்களேஸ்வரி நடராசா

கடந்த 06.08.2014 புதன்கிழமை முத்தி அடைந்த எமது அன்புத்தெய்வம் மங்களேஸ்வரி நடராசாவின் அந்தியேட்டிக் கிரியைகள் 05.09.2014 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் தெணியம்மன் ஆலய அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அந்த நிகழ்விலும் அன்றைய தினம் முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் கலந்துகொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்)

சிவப்பிரகாசம்,
அல்வாய் வடமத்தி, அல்வாய்.
தொ.பே. 077 248 7330

(40761) (45.6)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி யுஸ்ரீன யோசேப்பின் றொசாய்றோ



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், இல.09, அச்சுக்கூட வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யுஸ்ரீன யோசேப்பின் றொசாய்றோ நேற்று (03.09.2014) புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிளிக்கர் பேதுருப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற றொசாய்றோவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான P.L.பற்றிக், P.C.அன்ரனி செபஸ்ரியன் (குட்டி) மற்றும் லூட்ஸ்மலர் (லண்டன்), பெலிசிற்றஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெறோம் ரட்ணராஜா (Nations Trust Bank, கொழும்பு), யூலியன் தெய்வீகதாசன் (முன்னாள் பொறியியலாளர் - லங்காசிமெந்துக் கூட்டுத்தாபனம், கனடா), கிறிஸ்சாந்தி, லங்காதரன் றொசாய்றோ (Central Finance - Jaffna) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆனந்தராணி (ஆசிரியர் - கொழும்பு), யூடித் செறின் (கனடா), சத்தியசீலன் (ஓய்வுபெற்ற பொறியியலாளர் - கல்வித்திணைக்களம் - யாழ்ப்பாணம்), லங்காதரன் மீரா (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், டிலானி, மிரானி, ஜெறான், றோகான், நெகான், தர்மினி, யூடினா, தர்சன், கிறிஷானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (04.09.2014) வியாழக்கிழமை பி.ப.3.00 மணியளவில் யாழ்.புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

9, அச்சுக்கூட வீதி,
யாழ்ப்பாணம்.

(51639) (12.6)

தகவல்: குடும்பத்தினர்.
077 361 8100, 077 711 1162
077 722 4001

## யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் போட்டிகள்

யாழ்ப்பாணம், செப்.4

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் விசேட கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டு 10 வருடங்கள் நிறைவையொட்டி வடமாகாண ஆசிரியர்கள், மாணவர்கள் இடையே போட்டிகள் நடத்தப் படவுள்ளன.

கற்பித்தல் சாதன உருவாக்கப் போட்டியில் ஆசிரியர்கள் பங்கு பற்ற முடியும். விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்றல் கற்பித்தல் சாதனங்களை உருவாக்கி சமர்ப்பிக்க வேண்டும். பங்கு பற்ற விரும்பும் ஆசிரியர்கள் தமது சுயவிவரங்களோடு கூடிய விண்ணப்பங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பொறுப்பு விரிவுரையாளர் விசேட கல்வித்துறை, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

சித்திரப் போட்டியில் மாணவர்கள் பங்கு பற்ற முடியும் உட்படுத்தல் கல்வி, விசேட தேவையுடையோர் வாழ்வுக்கு ஒளியூட்டுவோம், விசேட தேவையுடைய மாணவர்களின் சாதனைகள் போன்ற தலைப்புகளில் ஒன்றை தெரிவு செய்து வரையப்பட்ட சித்திரத்தை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் மேற்குறித்த முகவரிக்கு அனுப்பிவைக்க முடியும். (வ)

## யாழ். மருத்துவ சங்க புதிய நிர்வாகம் தெரிவு

யாழ்ப்பாண மருத்துவ சங்கத்தின் புதிய தலைவராக வைத்திய கலாநிதி முரளி வல்லிபுரநாதன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 29 ஆம் திகதி நடைபெற்ற வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் 2014 - 2015 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

சிரேஷ்ட உப தலைவராக மருத்துவர் ரி.பேரானந்தராஜாவும் கனிஷ்ட உப தலைவராக மருத்துவர் நளாயினியும் வரும் ஆண்டுக்காக முன்மொழியப்பட்ட தலைவராக மருத்துவர் சந்திரகுமாரும் தெரிவு செய்யப்பட்டனர்.

பொருளாளராக மருத்துவர் சிவபாதமூர்த்தியும் செயலாளராக மருத்துவர் சுரேந்திரகுமாரனும் பத்திராதிபராக மருத்துவர் அஜந்தாவும் நூலகராக மருத்துவர் எஸ். நிமலனும் உதவி நூலகராக மருத்துவர் பிரியதர்சனும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக உறுப்பினர்களாக மருத்துவர் சத்தியதாஸ், மருத்துவர் ஸ்ரீதரன், மருத் துவர் ஸ்ரீபவானந்தராஜா, மருத்துவர் அம்பலவாணர், மருத்துவர் கோபிசங்கர், மருத்துவர் மலரவன் ஆகியோர் தெரிவாகினர். (வ)

## அதிபர் நியமனம்

அச்சுவேலி, செப்.4

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் அதிபராக கு.ரவீச்சந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். அத்தியார் இந்துக் கல்லூரியின் அதிபர் எஸ்.பத்மநாதன் சேவையில் இருந்து ஓய்வு பெறுவதால் புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி வந்த கு.ரவீச்சந்திரன் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். (வ-11)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப்.4

யாழ். முகாமையாளர் சம்மேளனத்தால் 'மனித இருப்பை அச்சுறுத்தும் அசாதாரண காலநிலை மாற்றம்' குறித்த கலந்துரையாடல் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (வ)

## எழுத்தறிவு தினத்தை முன்னிட்டு போட்டிகள்

கரணவாய், செப்.4

சர்வதேச எழுத்தறிவு தினத்தை முன்னிட்டு வடமராட்சி வலயப் பாடசாலை தரம் 6, 7, 8, 9 மாணவர்களுக்கு இடையே பல்வேறு போட்டிகள் இடம் பெறவுள்ளன.

'எழுத்தறிவும், மனிதமேம்பாடும்' என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டியும் 'இன்றைய உலகில் தொடர்பாடலின் அவசியம்' என்ற தலைப்பில் பேச்சுப் போட்டியும், 'எழுத்தறிவோம்' என்ற தலைப்பில் கவிதைப் போட்டியும் நடத்தப்படவுள்ளன.

வடமராட்சி வலய பாடசாலைகளுக்கு இடையிலான இந்தப் போட்டிகள் எதிர்வரும் 11 ஆம் திகதி பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இடம்பெறவுள்ளன. எனவே இந்தப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலை அதிபர்கள் பாடசாலை மட்டத்தில் போட்டிகளை நடக்கி முதலாமிடம் பெறும் மாணவர்களின் விவரங்களை இன்று வியாழக்கிழமைக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-108)

## செப்.10-16வரை நுளம்பு கட்டுப்பாட்டு வாரம்

யாழ்ப்பாணம், செப்.4

எதிர்வரும் 10 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரையான ஒரு வார காலத்தை நுளம்புக் கட்டுப்பாட்டு வாரமாக அனுட்டிக்குமாறு சுகாதார அமைச்சால் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரத் திணைக்களத்தினர் தமது பிரதேசத்தில் உள்ள பிரதேச செயலகம், உள்ளூராட்சி சபைகள், பொலிஸார் மற்றும் படையினர் ஆகியோருடன் இணைந்து நுளம்புக் கட்டுப்பாட்டு வார செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## குளவி தாக்கி இருவர் மருத்துவமனையில்

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தின் கட்டடத்தில் இருந்த குளவிகள் தாக்கி 2 பேர் மல்லாவி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தின் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரு மாடிக் கட்டடத்தில் மேற் பகுதியில் குளவிக்கூடு ஒன்று காணப்பட்டது. நேற்று முன் தினம் பகல் வீசிய காற்றின் காரணமாக குளவிகள் கூடு கலைந்து இரண்டு பேரைத் தாக்கியுள்ளது. மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தின் பணி யாள ரான சுஜிவன் மற்றும் துணுக்காய் பிரதேச வாகனச் சாரதி வரதலிங்கம் ஆகியோரே குளவிக்கொட்டுக்கு இலக்காகியோராவர். (வ-55)

## நவநாள் வழிபாடுகள்

யாழ். அடைக்கல அன்னை ஆலய வருடாந்த திருவிழா நவநாள் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

நற்கருணைப் பெருவிழா எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.45 மணிக்கு திருவிழாத் திருப்பலி மறுநாள் திங்கட்கிழமை காலை 5.30 மணிக்கு முதல் திருப்பலியும் 6.45 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் நடைபெறும். திருச்சொரூப பவனி மாலை 5 மணிக்கும் நடைபெறும். (வ-135)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். குருநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் குருநகர் சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவரும் யா/பூம்புகார் அ.த.க.பாடசாலையின் ஆசிரியரும் குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்க அங்கத்தவரும் ஆகிய

**ஸ்ரீபன் நியூட்டன்** (J.P)

B.A,Sp.Tri(W.R)Dip.in Fishers PGDE,MA(Tamil)

அவர்கள் 02.09.2014 அன்று

யாழ். மாவட்ட நீதிபதி திரு. A.A.ஆனந்தராஜா முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமையைப் பாராட்டுவதுடன் அவர் மேலும் பல பட்டங்கள் பெற்று சீரும்சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: நண்பர்கள்-

R.சத்ஸ், எடிசன், றெஜனஸ், சுரேன், கமில்ரன்.

குருநகர், யாழ்ப்பாணம்.

Best wishes





Apply Now for Feb '15 intake

ஆஸ்திரேலிய பல்கலைக்கழக பிரதிநிதிகளை யாழ்ப்பாணத்தில் சந்தியுங்கள்

Date : 8th September

Venue : IIS City Campus

Time : 10am - 2pm

You have the opportunity to meet University & Edlocate representatives for 15 minutes together with Tamil speaking counselors to learn about:

- Studying in Australia in one of the 21 Universities
- Studying in UK, New Zealand, Malaysia & Singapore
- Post Study Work Visa and PR possibilities in Australia

Students with good A/L results are eligible for scholarships

You can lodge applications with pending A/L results

நாம் வழங்கும் ஒரு சிறப்பு சலுகை, உங்களை IELTS பரீட்சையில் சித்தி பெற வழிகாட்டுவது

மாணவர்களையும் பெற்றோர்களையும் அன்புடன் அழைக்கின்றோம் இந்த நேரடி இலவச கலந்துரையாடல் அமர்வுக்கு

edlocate www.edlocate.lk

FOLLOW US ON

IIS CITY CAMPUS

IIS Study Abroad Centre 100, Clock Tower Road, Jaffna

Call 021 222 8060 / 021 222 2831 for appointments



60ஆவது பிறந்த நாளும் 35ஆவது ஆண்டு திருமண நல்வாழ்த்துக்களும்

மகாலிங்கம் சகுந்தலா



Wish your a Happy Birthday

இன்று 04.09.2014 தனது 60ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் மகாலிங்கம் அவர்களையும் தமது 35ஆவது ஆண்டு திருமண நிறைவைக் கொண்டாடும் மகாலிங்கம் சகுந்தலா தம்பதியினரையும் இந்நாளில் மனமகிழ்ந்து வாழ்த்துவதோடு இருவரும் பல்லாண்டு காலம் வாழ துர்க்கை அம்மனை வேண்டி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

கட்டுவன் வீதி, மல்லாகம்.

(51611)(7.63)



சீமெட் வைத்திய பரிசோதனை ஆய்வுகூடசேவை

CEYMED HOSPITAL SERVICES (Pvt) Ltd.

CEYMED

தற்போது உங்களுக்கான வைத்திய ஆலோசனை சேவை ஆரம்பம்

மருத்துவ சேவை / ஆய்வுக்கூட சேவை / E.C.G / மருந்து விநியோகம்

| | |
|---|---|
| கொழும்பிலிருந்து எங்களிடம் வருகை தரும் விசேட கண் வைத்திய நிபுணர் (Eye Surgeon) | வியாழன் மட்டும் பி.ப 4.00 |
| பொது வைத்திய நிபுணர்கள் (PHYSICIANS) | திங்கள் முதல் வெள்ளி பி.ப 4.00 மணி சனி ஞாயிறு மதியம் 12.00 மணி |
| இருதய வைத்திய நிபுணர் (CARDIOLOGIST) | சனி பி.ப 1.30 மணி |
| தோல் வைத்திய நிபுணர் (DERMATOLOGY) சத்திரசிகிச்சை நிபுணர்கள் (GENARAL SURGEONS) | திங்கள் முதல் வெள்ளி பி.ப 4.00 மணி சனி ஞாயிறு மதியம் 12.00 மணி |
| காது வைத்திய நிபுணர் (ENT SURGEON) | சனி மாலை 4.00 மணி |
| மூட்டு வாதவியல் வைத்திய நிபுணர் (RHEUMATOLOGYS) | புதன் வியாழன் மாலை 4.00 மணி |

உங்கள் பதிவுகளுக்கு: 021 221 9777

550, HOSPITAL ROAD, JAFFNA.

(C/16198)(10.6.3)

# முல்லைத்தீவில் சிறுகடல் மீன்பிடி கடுமையான வறட்சியால் பாதிப்பு

## ஆயிரத்துக்கும் அதிகமானோர் பொருளாதாரக் கஷ்டத்தில்

கிளிநொச்சி, செப்.4

தற்போது நிலவும் கடுமையான வறட்சி காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் சிறுகடல் தொழிலில் ஈடுபட்டு வரும் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடல்தொழிலாளர்களின் தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் குடும்ப வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

> சிறுகடல் பகுதிகளில் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களின் தொழில் நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்போது நிலவுகின்ற கடுமையான வறட்சி காரணமாக விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ள அதே நேரம், சிறுகடல் பகுதிகளில் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களின் தொழில் நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

அதாவது நந்திக்கடல், இரட்டைவாய்க்கால், புதுமாத்தளன் ஆறு, சாளைக்கடல், கொக்கிளாய் ஆறு ஆகியவற்றின் நீர் வற்றிக் காணப்படுவதுடன் இப்பகுதிகளில் கடற்தொழிலில் ஈடுபட்டு வந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட வறிய குடும்பங்களின் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் அவர்களது வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (த-55)

# கடும் காற்றின் தாக்கத்தால் பல தற்காலிக வீடுகள் சேதம்

கிளிநொச்சி, செப் 4

கடந்த ஒரு சில தினங்களாக வீசும் கடும் காற்றின் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வரும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ந்து வீசும் கடும் காற்றினால் வீட்டின் கூரைகள் சேதமடைந்து வருகின்றன.

பன்னங்கண்டிப்பகுதியில் சரஸ்வதி கமம், பசுவதி கமம் ஆகிய பகுதிகளில் வாழ்ந்து வரும் சுமார் 290 வரையான குடும்பங்கள் தற்காலிக வீடுகளிலேயே வாழ்ந்து வருகின்றன. இதே போன்று சிவபுரம், கோரக்கன்கட்டு ஆகிய பகுதிகளிலும் 400இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வருகின்றன.

தற்போது வீசும் கடுமையான காற்றினால் இந்தத் தற்காலிக வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்படுகின்றன. நேற்றுமுன்தினம் சிவபுரம் பகுதியில் காற்றின் காரணமாக நான்கு வீடுகளின் கூரைகள் சேதமடைந்தன. நேற்று பன்னங் கண்டிப் பகுதியில் இரண்டு வீடுகளின் கூரைகள் காற்றினால் சேதமடைந்துள்ளன. (த-55)

# ஊக்கி நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், செப்.4

செல்வி ம.கனிந்தினி எழுதிய மழலைகளுக்கான 'ஊக்கி' நூல் வெளியீடு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.புனித சாள்ஸ் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

யாழ்.சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை ஆசிரியர் வெ.யூடா சதீஸ்குமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலய ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக் கல்வி) பூ.குகதாஸ் கலந்து கொள்வார். பங்குத் தந்தை வணபிதாஅன்ரனி வின்சன் சில்வெஸ்ரர்தாஸ் மற்றும் யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை அதிபர் ந.மகேந்திரராசா ஆகியோர் முதற்பிரதியை பெற்றுக் கொள்வர். (வ-9)

# இந்திராபுரம் கிராமத்தில் மீளக்குடியமர்த்துங்கள்

## அப்பகுதி மக்கள் அரச அதிபரிடம் கோரிக்கை

கிளிநொச்சி, செப்.4

பச்சிலைப்பள்ளியின் வேம்பொடு கேணி கிராம அலுவலர் பிரிவில் உள்ள இந்திராபுரம் கிராமத்தில் தம்மை மீளக் குடியமர்த்துமாறு கோரிக் கிராம மக்கள் கிளிநொச்சி அரச அதிபரிடம் நேற்று மனுக் கையளித்துள்ளனர்.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வேம்பொடு கேணி கிராம அலுவலர் பிரிவில் இத்தாவிலுக்கும் முகமாலைக்குமிடையில் ஏ-9 வீதியுடன் இணைந்த நிலையில் இந்திராபுரம் கிராமம் உள்ளது. இந்தக் கிராமத்தில் 1990 ஆம் ஆண்டு 130 குடும்பங்கள் வாழ்ந்தன.

1996ஆம் ஆண்டு மற்றும் 2000 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாக இடம்பெயர்ந்த குடும்பங்கள் பல பகுதிகளில் சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்துவருகின்றனர். போர் முடிந்து அமைதி வழி திரும்பியபோதும் எமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்ப முடியாமல் பொருளாதார சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்துவருகின்றோம்.

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் எமது கிராமம் உட்பட சிறிய இடப்பரப்பு இன்னமும் மீளக் குடியமர அனுமதிக்கப்படாமலுள்ளது.

இப்பகுதியில் வெடிப்பொருள்கள் அகற்றப்படாததால் மீள் குடியமர்வு இடம்பெறாமலுள்ளது. எமது கிராமத்தில் வசித்த பெரும்பாலான குடும்பங்கள் வறுமைக்கோட்டின்கீழ் வாழ்ந்தவர்கள் என்பதனால் இடம்பெயர்ந்து வசிக்கும் இடங்களில் சொல்லொணா துன்பங்களை எதிர்நோக்கிய போதிலும் விரைவில் எமது சொந்த மண்ணுக்கு குடியமர்ந்துவிடுவோம் என்ற நம்பிக்கையில் துன்பங்களைத் தாங்கி வாழ்ந்து வருகின்றோம்.

தமது சொந்த இருப்பிடங்களில்மீளக்குடியமர அனைத்து குடும்பங்களும் தயார் நிலையில் இருப்பதால் இந்திராபுரம் கிராமத்திலுள்ள குடியிருப்பு பகுதிகளின் வெடிப்பொருள்களை அகற்றி விரைவில் எம்மை மீளக்குடியமர்த்த நடவடிக்கையெடுக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்- என்றுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக கிளிநொச்சி அரச அதிபர் திருமதி. றூபவதி கேதீஸ்வரனிடம் கேட்டபோது, மனுக்கொண்டு வந்த மக்களிடம் கண்ணிவெடி அகற்றும்வரை பொறுமையாக இருக்குமாறு கூறியதாகவும், இதேவேளை கண்ணிவெடி அகற்றிக்கொண்டிருப்பவர்களிடம் தொடர்புகொண்டு மிதிவெடியகற்றலை துரிதப்படுத்தமுடியுமா என்று கேட்கவுள்ளதாகவும் எனினும் கண்ணிவெடி அகற்றல் தொடர்பாக எதிர்வு கூறமுடியாதுள்ளதாகவும் தெரிவித்தார். (த-18)

# இலவச மருத்துவ சேவையினால் 700க்கும் மேற்பட்டோருக்கு பயன்

முல்லைத்தீவு, செப் 4

முல்லைத்தீவு நட்டாங்கண்டல் வைத்தியசாலையில் நேற்று முன் தினம் நடைபெற்ற நடமாடும்சேவையில் 700க்கும்மேற்பட்டோர் பயன் பெற்றனர்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு, சுகாதார திணைக்களம் ஆகியன இணைந்து முல்லைத்தீவு மாவட்டத்தின் பின் தங்கிய பிரதேசமான நட்டாங்கண்டல் வைத்தியசாலையில் ஏற்பாடு செய்திருந்த நடமாடும் மருத்துவ சேவை நேற்று முன் தினம் காலை தொடக்கம் மாலை வரை நடைபெற்றது.

இதில் கண் பரிசோதனை, தோல் சம்பந்தமான நோய்கள் ஏனைய நோய்கள், ஜெய்ப்பூர் செயற்கை உறுப்புப் பொருத்துதல் போன்ற சேவைகள் உட்பட பல இலவச மருத்துவ சேவைகள் நடைபெற்றன.

இதில் 700 க்கும் மேற்பட் டோர் பயன்பெற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-55)

# நாய்களுக்குத் தடுப்பூசி

வவுனியா, செப் 4

வவுனியா மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியால், நாய்களுக்கு நீர் வெறுப்பு நோய் வராமல் தடுப்பதற்காகத் தடுப்பூசி ஏற்றும் செயற்பாட்டை சுகாதார திணைக்களம் முன்னெடுத்து வருகின்றது.

வவுனியாவின் பல பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்தச் செயற்பாட்டின் முதற்கட்டமாக வீட்டு வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு வருகின்றன.



இதன் ஒரு கட்டமாக கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா வடக்கிலுள்ள வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டன.

அடுத்த கட்டமாக வீதியோர நாய்களுக்கும் தடுப்பூசியை ஏற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (த-421)

# விஞ்ஞானபாட ஆசிரியர்களுக்கு தரவட்டம் இன்று

கரணவாய், செப்.4

வடமராட்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில்தரம்10,11வகுப்புக்களில் விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான தரவட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புலோலி ஆசிரியவள நிலையத்தில் இடம்பெற வுள்ளது.

இந்தத் தரவட்டத்தில் குறித்த வகுப்புக்களில் கல்வி கற்பிக்கும்சகல விஞ்ஞான பாட ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறும் தரம் 10, 11 மாணவர்கள் தவணைப் பரீட்சைகளில் பெற்ற உயர் புள்ளி, தாழ் புள்ளி, தரம் 11 வகுப்புக்கான விஞ்ஞானபாட விசேட செயற்றிட்டம், விஞ்ஞானக் கண்காட்சி மற்றும் நடைபெற வுள்ள விஞ்ஞான செய்முறைப் பயிற்சி தொடர்பான கால அட்டவணை தயாரித்தல் என்பவை பற்றி கலந்துரையாடப்படவுள்ளன. எனவும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் அறிவித்துள்ளார். (வ-108)


தற்போது யாழ் நகரில்... edexcel | UNIVERSITY OF WOLVERHAMPTON

சவால்களை வெல்லும் சர்வதேச கல்வித் தகைமைகள்

BTEC HND in Computing & Systems Development

- நவீன உலகின் தொழிற்சந்தை வாய்ப்பு மற்றும் மாற்றங்களை கருத்திற்கொண்டு வடிவமைக்கப்பட்ட பாடநெறிக் கட்டமைப்பு
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் வாய்ப்பினை (Job Oriented) உறுதிப்படுத்தும் முழு நேர தீவிர பயிற்சி நெறியுடன் கூடிய கற்கை நெறி
- நவீன மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூட வசதிகளுடன் கூடிய வகுப்பறைகள்
- BCAS Campus இன் Colombo தலைமையகத்திலிருந்து வருகை தரும் முழு நேர விரிவுரையாளர்கள்

பதிவு செய்யும் முதல் 25 மாணவர்களுக்கு ஆரம்பக்-கட்டணம் இலவசம்

www.bcas.lk | ISO 9001:2008 CERTIFIED | 14 Years of Trust & Excellence in Higher Education

BCAS CAMPUS BRITISH COLLEGE OF APPLIED STUDIES

16, Point Pedro Road, Jaffna. 021 221 9910 / 077 710 2131

Building Careers - Transforming Lives

Macro Ads

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar

**பணிப்பெண் தேவை**

வீட்டில் தங்கியிருந்து இரண்டு பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை.

தொடர்பு:076 544 0511 (31632) (12.6)

**அதிரடி தள்ளுபடி விற்பனை**

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலய விழாக் கால சலுகையாக, ஓலைச்சுவடி, ஒளிவிளக்கு, இறை... பகவத்கீதை இன்னும் பல ஆன்மீக ரகசிய புத்தகங்கள் 25% - 50% வரை விலைக் கழிவுடன் ஆலய முன்றிலில் பெற்றுக் கொள்ளலாம். இத்துடன் காயத்திரி மந்திர பேழை, வலம்புரி சங்கும், ஐஸ்வரியம் தரும் லஷ்மி இயந்திரம் (பூஜைக்குரியது) என்பன கிடைக்கும்.

(07.09.2014 வரை மட்டும்)

சுபராணி - மதுரை (51841)(7.6)

T.P : 077 711 9942, 077 908 0333

**அறை வாடகைக்கு**

கொக்குவில் கிழக்கு, ஆடியபாதம் வீதியில் மருத்துவ பீடத்துக்கு அருகில் அறை வாடகைக் குண்டு. வெளி மாவட்டத்தை சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 021 205 2392 (51635) (45.6.3)

**தேவை**

நிறுவனமொன்றுக்கு வாகன சாரதி வேலையாள்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் தேவை.

தொடர்பு: 076 669 5559 (51837) (45.6.3)

**காணி, வீடு விற்பனைக்கு**

22, காட்டுக்கந்தோர் ஒழுங்கையில் இருக்கும் 1¼ பரப்பு காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு. குழாய்க் கிணறு, நன்னீர் சகல வசதிகளுடன்.

எதிர்பார்க்கப்படும் விலை

ரூபா 38 00000/= (51807)(7.6.3)

தொடர்பு : 021 320 2785

## எபோலாவால் கொங்கோவில் 31 பேர் சாவு

மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோவில் ஏபோலா வைரஸ் தாக்கத்தால் 31 பேர் உயிரிழந்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.


இதுகுறித்து கொங்கோவில் உள்ள அந்த அமைப்பின் செய்தித் தொடர்பாளர், ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில், கொங்கோவின் தலைநகர் கின்ஷசாவில் இருந்து 800 கிலோ மீற்றர் சுற்றளவுக்கு எபோலா வைரஸின் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. முன்னதாக அங்கு 13 பேர் இந்த வைரஸ் தொற்று காரணமாக இறந்தனர். தற்போது 31 உயிரிழந்துள்ளனர் என்று தெரிவித்துள்ளனர்.

வேகமாகப் பரவி வரும் எபோலா வைரஸ் தொற்று கிருமியால் ஏற்படும் நோயைக் குணப்படுத்த இதுவரை மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (வ)



இரண்டாம் உலகப்போர் முடிவுக்கு வந்ததன் 69 ஆவது ஆண்டு நிறைவு தினமான நேற்று முன்தினம் ரஷ்யாவின் விளாடிவோஸ்ரோக் நகரில் நிகழ்வுகள் இடம்பெற்றன. அங்குள்ள ஏரி ஒன்றில் காகித ஓடங்களை விட்டு மக்கள் நினைவு கூர்ந்தனர். (வ)

## ஐஸ்லாந்தில் எரிமலை சீற்றம் சிவப்பு நிற அபாய எச்சரிக்கை



ஐஸ்லாந்தின் மிகப்பெரிய எரிமலையான பார்டர்புங்கா எரிமலைத் தொகுதி ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் வெடித்துச் சிதறியுள்ளதுடன் இதனால் வானத்தில் 190 கி.மீ. உயரத்துக்கும் 25 கி.மீ. அகலத்துக்கும் கடும் கரும் புகை சூழ்ந்துள்ளது.

கடந்த இரு வாரங்களாக வட அத்திலாந்திக் தீவான ஐஸ்லாந்தில் ஆயிரக்கணக்கான சிறிய பூமி அதிர்வுகள் உணரப்பட்டதை அடுத்து பார்டர் புங்கா எரிமலை வெடித்துச் சிதறலாம் என்று முன்னரே எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்ததுடன் தற்போது அதிகபட்ச அபாய அறிவிப்பான சிவப்பு நிற சமிக்ஞை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு ஐஸ்லாந்தின் அஜோடுல் எரிமலை வெடித்துச் சிதறிய போது ஐரோப்பா விமானப்பாதையின் மிகப் பெரிய பகுதி கடும் புகையால் சூழப்பட்டு தொடர்ந்து 6 தினங்களுக்கு சர்வதேச விமானப் பயணங்கள் தடைப்பட்டிருந்தன. (வ)

# பட்டினிச் சாவை எதிர்நோக்கும் அபாயத்தில் சோமாலிய மக்கள்

### ஐ.நா. நிபுணர்கள் தெரிவிப்பு



சோமாலியாவில் பல வருடங்களாகத் தொடர்ந்து நீடிக்கும் போரால் மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டு பட்டினிச் சாவை எதிர்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படவுள்ளனர் என்று ஐ.நா. நிபுணர்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அறிவித்துள்ளனர்.

ஏற்கனவே கடந்த 3 வருடங்களில் மில்லியனில் கால் பங்கு மக்கள் பஞ்சத்தால் கொல்லப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தற்போது 10,25 000 மக்கள் பஞ்சத்துக்கு இடைப்பட்ட அவசர நிலையில் முக்கிய மனிதாபிமானத் தேவைகளை எதிர்பார்த்திருப்பதாக ஐ.நாவின் உணவு மற்றும் போஷாக்குக்கான பிரிவான FSNAU இன் குறித்த அறிக்கை கூறுகின்றது. இதேவேளை- ஞாயிற்றுக்கிழமை 7 ஆயுதம் தாங்கிய போராளிகள் தலைநகரில் உள்ள அதி பாதுகாப்பு மிக்க சிறைச்சாலை மீது தாக்குதல் தொடுத்திருந்தனர்.

எனினும் சோமாலியாவின் அரச படைகள் அந்தச் சிறைச்சாலையை மறுபடி கைப்பற்றியதை அடுத்து சோமாலியாவிலுள்ள அல் ஷபாப் போராளிகள்மீது திங்கட்கிழமை தொடக்கம் அமெரிக்கப் படைகள் டிரோன் தாக்குதலைத் மேற்கொண்டன. இது குறித்து சோமாலியாவின் மூத்த புலனாய்வு அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்; அமெரிக்க டிரோன் விமானங்களின் தாக்குதல் இலக்காக அல் ஷெபாப் தலைவர் அஹ்மெட் அப்டி கொடானே விளங்கியதாகவும் இதில் அவர் கொல்லப்பட்டாரா? அல்லது தப்பித்து விட்டாரா? என்று உறுதிப்படுத்த முடிய வில்லை என்றும் கூறியுள்ளார்.

அல் ஷெபாப் போராளிகளை அமெரிக்கா தீவிரவாதிகள் பட்டியலில் சேர்த்திருப்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## ஒற்றைக் கண்ணுடன் பிறந்த ஆட்டுக் குட்டி



அங்காரா, செப்.4

துருக்கி நாட்டில் இஸ்மிர் நகரத்துக்கு அருகே விவசாயி ஒருவர் ஆட்டு பண்ணை நடத்தி வருகிறார். அவரது ஆட்டு மந்தையில் திங்கட்கிழமை அதிசய ஆட்டுக் குட்டி பிறந்தது. அந்த ஆட்டுக் குட்டியின் நெற்றியின் நடுவே ஒரே ஒரு கண் தான் உள்ளது. அந்த ஆட்டுக் குட்டி ஒரு கண்ணை வைத்து தன்னிச்சையாக நடப்பதற்கு சிரமப்படுகிறது. இதனால் அந்த ஆட்டுக்குட்டியை கம்பளிப் போர்வையால் சுற்றி கையில் வைத்தபடியே விவசாயி உணவூட்டி வருகிறார். அது குறித்த தகவல் அறிந்து சுற்றியுள்ள ஏராளமான மக்கள் அங்கு சென்று அதனைப் பார்த்துச் செல்கின்றனர்.

ஒற்றைக் கண்ணுடன் குட்டி பிறந்தது குறித்து கிரம்பி கிராபோ என்ற விலங்குகள் நல மருத்துவர்கள் கூறுகையில்: அந்த ஆட்டின் மூளை மற்றும் மண்டையில் பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம். அதனால்தான் ஒற்றை கண்ணுடன் பிறந்துள்ளது. அத்துடன் நாக்கை வெளியே நீட்டியபடி காணப்படுகிறது. (வ)

# மற்றொரு அமெ.பத்திரிகையாளர் தலை துண்டிக்கப்பட்டுக் கொலை

டமஸ்கஸ், செப்.4

ஐ.எஸ்.ஐ.எஸ். என்று சுருக்கமாக அழைக்கப்படும் இஸ்லாமிய அரசு அமைப்பு, தான் கடத்தி பணயக் கைதியாக பிடித்து வைத்திருந்த அமெரிக்க பத்திரிகையாளர் ஸ்டீவன் சட் லாபின் தலையை வெட்டிக் கொல்லும் காட்சியைக் காட்டும் காணொலி ஒன்று இணையத்தில் வெளியாகியுள்ளது.



ஸ்டீவன் சட் லா

அந்த காணொலியில் சட்லாப் நீளமான முழு உடலுக்குமான ஆடை அணிந்த நிலையில் முட்டிக்கால் போட்டு இருப்பது போலவும், அவருக்கு அருகில் இஸ்லாமிய அரச அமைப்பைச் சேர்ந்தவர் கத்தியுடன் இருப்பது போல வும் காட்டப்படுகிறது.

முகமூடி அணிந்த நபர் ஒருவர் தாம் பிடித்துவைத்திருக்கும் மற்றும் ஒரு பணயக் கைதி குறித்து எச்சரிக்கை விடுவதோடு இஸ்லாமிய அரசுக்கு எதிராக கூட்டணி அமைத்திருக்கும் நாடுகளின் அரசுகள் தங்களின் கூட்டணியை முடிவுக்குக் கொண்டு வரும்படியும் கூறுகிறார்.

ஊடகவியலாளர் சட்லாப் கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் சிரியாவில் கடத்தப்பட்டார். அவரைப்போலவே பணயக் கைதியாக பிடித்து வைக்கப்பட்டிருந்த ஜேம்ஸ் பாலியை கடந்த மாதம் தான் இஸ்லாமிய அரசு அமைப்பு தலையை வெட்டிக் கொன்றிருந்தது. கடந்தமாதம் ஜேம்ஸ் பாலி கொல்லப்படுவதைக் காட்டும் காணொலியில் சட்லாப்பும் காட்டப்பட்டிருந்தார்.

நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டிருக்கும் இந்த குறிப்பிட்ட காணொலியின் நம்பகத்தன்மையை உறுதி செய்ய அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகை மறுத்துவிட்டது. இந்தக் கொலையானது மிகவும் அருவருக்கத்தக்க, வக்கிரமான செயல் என்று பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் கடுமையாகக் கண்டித் திருக்கிறார். (வ)

## எகிப்தில் பொலிஸ் வாகனம் மீது தாக்குதல்

### 11 பேர் சாவு

எகிப்தில் பொலிஸ் வாகனம் மீது நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட வெடிகுண்டுத் தாக்குதலில் 11 காவலர்கள் உயிரிழந்துள்ளனர்.

எகிப்தின் வடக்கு சினாய் பகுதியில் உள்ள ஷேக் ஸவாயித் என்ற இடத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

பொலிஸாரின் வாகனத்தைக் குறிவைத்து நடைபெற்ற வெடிகுண்டுத் தாக்குதலில் அதிகாரி ஒருவரும், 10, காவலர்களும் கொல்லப்பட்டனர். நால்வர் பலத்த காயமடைந்தனர் எனக் காவல் துறையினர் தெரிவித்தனர். (வ)




பிரதமர் நரேந்திர மோடி 5 நாள் சுற்றுப் பயணமாக ஜப்பான் நாட்டுக்கு சென்றுள்ளார். அங்கு முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்வையிட்டு வருகின்றார். நேற்றுக் காலை டி.சி.எஸ். ஜப்பான் தொழில்நுட்பம் மற்றும் கலாசார அக்கடமி திறப்பு விழாவில் கலந்து கொண்ட பிரதமர் மோடி மேளம் வாசித்தார். (வ)

## இந்தியாவின் முதலாவது பவளப் பூங்கா குஜராத்தில்

பவளங்களைப் பாதுகாக்கும் முயற்சியாகவும், சுற்றுலாவை மேம்படுத்தும் விதமாகவும் இந்தியாவின் முதலாவது பவளப் பூங்கா குஜராத்தில் அமைக்கப்பட்டவுள்ளது. இதுகுறித்து இந்திய வனவிலங்கு அறக்கட்டளையின் மூத்த ஆலோசகர் பி.சி. சௌத்திரி கூறியதாவது:-

குஜராத்தின் தேவ்பூமி துவாரகா மாவட்டத்தின் கடற்பகுதியான மிதாபூரில் இந்தப் பவளப் பூங்கா அமைக்கப்படவுள்ளது. இந்தப் பூங்காவில் பலவகையான பவளப் பாறைகள் இடம்பெறவுள்ளன. இதற்கான நிதியை குஜராத் வனத்துறை வழங்கவுள்ளது. இந்தப் பூங்கா அமைப்பதற்காக டாடா இரசாயன நிறுவனத்துடன், இந்திய வன விலங்கு அறக்கட்டளைப் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. சுற்றுலாப் பயணிகளுக்காக இந்தப் பூங்காவில் நீர்சக்கு, நீச்சல் குளம் போன்ற பொழுது போக்கு அம்சங்களைச் செயற்படுத்தவும் அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர் என்று சௌத்திரி தெரிவித்தார். (வ)

## நித்திக்கு ஆண்மை பரிசோதனைக்கு உத்தரவு



டில்லி, செப்.4

ஆண்மைப் பரிசோதனை நடத்துவதற்கு கர்நாடக உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு தடை விதிக்கக் கோரி நித்தியானந்தா சார்பில் தாக்கல் செய்த மனுவை உச்ச நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

கர்நாடக மாநிலம் பெங்களூர் அருகே பிடதியிலுள்ள ஆசிரமத்தில் பெண் சீடராக இருந்த ஆர்த்தி ராவைப் பாலியல் துன்புறுத்தல் செய்ததாகக் கூறி தொடரப்பட்ட வழக்கில் நித்தியானந்தா கைதாகி பிணையில் வெளியே வந்துள்ளார்.

இந்தநிலையில், நித்யானந்தாவுக்கு ஆண்மை பரிசோதனை நடத்த கர்நாடக உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அதனை எதிர்த்து நித்தியானந்தா தாக்கல் செய்த மனுவை நிராகரிப்புச் செய்த உச்ச நீதிமன்றம், நித்தியானந்தா ஆண்மை பரிசோதனைக்கு உட்பட வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது. (வ)

# ஆயுத விற்பனையில் இறங்கும் இந்தியா

டில்லி, செப்.4

பாதுகாப்பு துறையின் சார்பில் தயாரிக்கப்படும் பிரமோஸ் ஏவுகணை உள்ளிட்ட ஆயுதங்களை நட்பு நாடுகளுக்கு விற்பனை செய்ய மத்திய அரசு முடிவெடுத்துள்ளது. இதன்படி, வியட்நாம், இந்தோனேஷியா உள்ளிட்ட ஆசிய நாடுகளுக்கும், தென் அமெரிக்க நாடுகளுக்கும் இந்திய ஆயுதங்கள் ஏற்றுமதி செய்யப்பட உள்ளன.




இந்தியாவின் பாதுகாப்பு துறை சார்பில் சிறிய ரக போர் விமானங்கள், ஏவுகணைகள், துப்பாக்கி, குண்டுகள் உள்ளிட்ட ஆயுதங்கள் தயார் செய்யப்படுகின்றன. இந்தியா, அதிநவீன ஏவுகணைகளை தயாரிப்பதில் தெற்கு ஆசியாவில் ஒரு முன்னோடி நாடாக உள்ளது. பிரமோஸ், ஆகாஷ், பிரகார் போன்ற ஏவுகணைகள், எதிரிகளின் இலக்குகளை துல்லியமாகத் தாக்கி அழிக்கவல்லவை.

மேலும், அதிநவீன திறன் கொண்ட தேஜஸ் எனப் பெயரிடப்பட்டுள்ள சிறிய ரக போர் விமானங்களும் தயாரிக்கப்படுகின்றன. தற்போது, உள்நாட்டு தேவைக்குப்போக ஏற்றுமதி செய்யும் அளவுக்கு இந்தியஏவுகணைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

### வியட்நாமுடன் ஒப்பந்தம்

ஆசியா மற்றும் தென் அமெரிக்காவில் உள்ள சில நட்பு நாடுகளுக்கு ஏவுகணைகள் உள்ளிட்ட சில ஆயுதங்களை ஏற்றுமதி செய்ய பிரதமர் நரேந்திரமோடி தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது. இந்தப் பட்டியலில் இந்தோனேஷியா, வெனிசூலா, வியட்நாம், மியன்மார் உள்ளிட்ட நாடுகள் இடம்பெற்றுள்ளன.

முதற் கட்டமாக, இந்திய-வியட்நாம் பாதுகாப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில், இந்திய ஏவுகணைகளை வாங்க வியட்நாம் அதிக ஆர்வம் காட்டி வருகிறது. கடந்த பல ஆண்டுகளாக இது குறித்து வியட்நாம் அரசு கேட்டும், முந்தைய அரசு அதில் ஆர்வமில்லாததால், ஏவுகணை ஏற்றுமதி தடைபட்டு வந்தது. எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி வியட்நாமில் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார். அப்போது, இதற்கான ஒப்பந்தம் கையெழுத்திடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### துப்பாக்கிகள் ஏற்றுமதி

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள், ரேடார்கள் போன்றன நேபாளம், ஓமான், மியன்மார், மாலை தீவுகள், மொரீஷியஸ், வியட்நாம் உள்ளிட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட நிலை யில் தற்போது அதிநவீன ஏவுகணைகளும் ஏற்றுமதி செய்யப்பட உள்ளன. மேலும், பெங்களூரில் தயார் செய்யப்படும் தேஜஸ் சிறிய ரக போர் விமானங்களும் மிக விரைவில் நட்பு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் என்று கூறப்படுகிறது.

ஆசியாவைப் பொறுத்த வரையில் தற்போது சீனா ஆயுத ஏற்றுமதியில் கொடி கட்டிப் பறக்கிறது. இந்திய ஆயுதங்கள் சந்தைப்படுத்தும் போது, அதன் ஆதிக்கம் குறையும் என்று கூறப்படுகிறது. ஏனெனில் சீன ஆயுதங்கள் ஏவுகணைகளைக் காட்டிலும் இந்திய தயாரிப்புக்கள் அதி நவீனமானதும், மலிவானதும் ஆகும் என்பது தான். (வ)

## 15 மீனவரையும் விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்

### தமிழக முதல்வர் மோடிக்கு கடிதம்

சென்னை, செப்.4

இலங்கை கடற்படையால் சிறைப்பிடிக்கப்பட்ட 15 மீனவர்களையும், 63 படகுகளையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா கடிதம் எழுதியுள்ளார்.

முதல்வர் ஜெயலலிதா கடிதத்தில் கூறியிருப்பதாவது:-

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்துவதும், அவர்களை சிறைப்பிடித்துச் செல்வதும் தொடர்கிறது. இதனை தங்கள் கவனத்துக்கு கொண்டு வருகிறேன். கடந்த முதலாம் திகதி இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 9 மீனவர்கள் 2 படகுகளில் மீன்பிடிக்கச் சென்றனர். அதில் ஒரு விசைப்படகு இயந்திரக் கோளாறு காரணமாக மூழ்கியது. அதிலிருந்த மீனவர்கள் தப்பி மற்றொரு படகில் ஏறினர். ஆனால், அப்போது அங்குவந்த இலங்கைக் கடற்படையினர் 9 மீனவர்களையும் சிறைபிடித்துச் சென்றனர். காங்கேசன் துறை துறைமுகத்துக்கு கொண்டு செல்லப்பட்ட அவர்கள் 9 பேரையும் எதிர்வரும் 16 திகதிவரை சிறையில் அடைக்க இலங்கை நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதேபோல், நேற்று முன்தினம் இராமநாதபுரம் மீனவர்கள் 6 பேரை இலங்கை கடற்படையினர் சிறைப் பிடித்துள்ளனர்.

கடந்த இரண்டு மாதங்களில், பாரம்பரிய கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் 319 பேர், இலங்கைக் கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டனர். அவர்களது 62 விசைப்படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இந்திய அரசின் முயற்சியால் 319 மீனவர்களும் விடுவிக்கப்பட்டனர். ஆனால், அவர்களது படகுகள் இன்னும் விடுவிக்கப்படவில்லை. இந்த நிலையில், தற்போது தமிழக மீனவர்கள் மேலும் 15 பேர் சிறைப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைக் கடற்படையால் சிறைப்பிடிக்கப்பட்ட 15 மீனவர்களையும், 63 படகுகளையும் உடனடியாக விடுவிக்க பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு முதல்வர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (வ)

# கடற்படையில் இணைகிறது ஐ.என்.எஸ்.சுமித்திரா

கண்காணிப்பு, கடற்கொள்ளைத் தடுப்பு மற்றும் பாதுகாப்பு பணிக்காக ஐ.என்.எஸ். சுமித்திரா என்ற புதிய போர்க் கப்பல் சென்னை துறைமுகத்தில் இன்று நாட்டுக்கு அர்ப்பணிக்கப்படுகிறது.

இதுகுறித்து பாதுகாப்பு துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:-

ஐ.என்.எஸ். சுமித்திரா சென்னையில் உள்ள கிழக்குப் பிராந்திய கடற்படை பகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் கண்காணிப்பு, பாதுகாப்பு மற்றும் கடற்கொள்ளைத் தடுப்பு பணிக்காகப் புதிதாக ஐ.என். எஸ். சுமித்திரா என்ற போர்க் கப்பல் இன்று காலை 9 மணி அளவில் சென்னைத் துறை முகத்தில் நடைபெறும் விழாவில், இந்திய கடற்படை தளபதி அட்மிரல் ஆர். கே. தோவான், கொடியசைத்து நாட்டுக்காக அர்ப்பணிக்கிறார்.



டீசல் இயந்திரத்தில் இயங்கும் இந்த போர்க் கப்பல் 25 கடல் மைல் வேகத்தில் செல்லக் கூடியது. ஒரு முறை பயணம் மேற்கொண்டால் 6 ஆயிரம் கடல் மைல் தூரம் செல்லும் வசதி கொண்டது. எதிரிகளுடன் போர் செய்வதற்காக சூப்பர் ரேபிட் கன் மவுண்ட் 76.2 எம்.எம். சக்தி கொண்ட நவீன ரக துப்பாக்கிகள், 30 எம்.எம். சக்தி கொண்ட நவீன ரக துப்பாக்கிகள், நவீன தீ தடுப்பு கருவிகள், சிறிய ரக ஹெலி கையாளும் வசதி மற்றும் கணினி வசதிகள், நவீன தொழில்நுட்பத்துடன் தகவல் தொடர்பு சாதனங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த போர்க்கப்பலுக்கு கப்டனாக மிலண்ட் மோகூஷியும், 8 கடற்படை அதிகாரிகளும், 105 கடற்படை வீரர்களும் பணியில் இருப்பார்கள். (வ)

# நாட்டை என்னிடம் கொடுங்கள் அபிவிருத்தி செய்து காட்டுகிறேன்

## சவால் விடுகின்றார் சரத் பொன்சேகா

கொழும்பு, செப்.4

நாட்டை தன்னிடம் ஒப்படைத்தால், மூன்று வருடங்களில் சகல துறைகளிலும் அபிவிருத்தி செய்து காட்டுகின்றேன் என்று சவால் விட்டுள்ளார் ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா.

தனமல்வில பிரதேசத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"மஹிந்த ராஜபக்ஷவின் ஊழல் அரசுக்கு எதிராக மக்கள், கடந்த மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தலில் ஜனநாயகக் கட்சிக்கு இரண்டு லட்சத்து 75 ஆயிரம் வாக்குகளை வழங்கி ஆசீர்வாதம் செய்தனர். அந்த மாகாணங்களில் தமது ஆசீர்வாதத்தை ஆரம்பித்த மக்கள் ஊவா மாகாண சபைத் தேர்தலில் அதனை இரண்டு முதல் மூன்று மடங்காக அதிகரிக்கவுள்ளனர்.



நாட்டை அபிவிருத்தி செய்ய ஏழெட்டு வருடங்கள் தேவையில்லை, மூன்று வருடங்களில் மக்களின் வாழ்க்கையை கட்டியெழுப்ப முடியும்.

30 வருடங்கள் நடைபெற்ற போரை 33 மாதங்களில் முடிவுக்கு கொண்டு வந்தது போல், நாட்டில் சட்டத்தையும், நியாயத்தை ஏற்படுத்தி, நாட்டு மக்களின் பொருளாதாரத்தை அதிகரிக்க எமக்கு மூன்று வருடங்கள் போதுமானது. ஹம்பாந்தோட்டை மீட்கப் படாத பிரதேசம் போன்றது. அந்த பிரதேசத்தை குண்டர்களே ஆட்சி செய்து வருகின்றனர்.

கசினோ, சூதாட்டம், எதனோல், ஹெரோயின் போதைப் பொருள்களை அமைச்சர் களே கொண்டு வருகின்றனர். கோதுமை மா இறக்குமதி செய்யப்படுவது போல் இலங்கைக்குள் ஹெரோயின் கொண்டு வரப்படுகிறது. சமூகம் சீரழிந்து, குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன"- என்று தெரிவித்துள்ளார். (ற)



உல்லாசப் பயணிகளுக்காகப் புதிதாக 50,000 'ஹோட்டல்' அறைகளை நிர்மாணிக்கும் திட்டத்தின் கீழ் கொழும்பில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 'சினமன் ரெட் ஹோட்டல்' பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவினால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. 3.5 பில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த புதிய ஹோட்டல் 243 அறைகளைக் கொண்டது. அத்துடன் மாநாட்டு மண்டபம், நீச்சல் தடாகம் உட்பட சகல வசதிகளையும் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

## புகலிடக் கோரிக்கையாளர் உறவினர்களிடம் ஒப்படைப்பு

இலங்கையில் தங்கியிருந்து அகதிகளுக்கான ஐ.நா.வின் ஆணையகத்தின் ஊடாக புகலிடம் கோரிய நிலையில் கடந்த ஜூன் மாதம் 9 ஆம் திகதி முதல் கைது செய்யப்பட்டுப் பூஸாவிலுள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவு தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்ட 56 பாகிஸ்தானியர்கள் நேற்று அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

குடிவரவு குடியகல்வு அதிகாரிகள், மற்றும் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள், நீர்கொழும்பு பெரியமுல்லையில் அமைந்துள்ள அஹ்மதியா முஸ்லிம் பள்ளிவாசல் பூமியில் வைத்து 56 பாகிஸ்தானியர்களையும் அவர்களது உறவினர்களிடம் ஒப்படைத்துள்ளனர். இவர்களில் 43 பேர் அஹ்மதி முஸ்லிம்களாவர், 13 பேர் பாகிஸ்தானைச் சேர்ந்த கிறிஸ்தவர்களாவர். (ற)

## ஊசி விவகாரம்; மருத்துவருக்கு பிணை அனுமதி

கொழும்பு, செப்.4

நாவலையைச் சேர்ந்த 47 வயதான பெண் வைத்தியர் ரி.ஏ.பிரியங்கவின் உயிரிழப்புத் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஆண் வைத்தியரான நிமல் கமகே நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.



பம்பலப்பிட்டி பகுதியிலுள்ள அழகு சத்திர சிகிச்சை நிலையத்தில் கடந்த 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஊசி ஏற்றிக்கொண்ட நிலையில், பெண் வைத்தியர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் குறித்த வைத்தியர் கைதுசெய்யப்பட்டிருந்தார். (ற)

## இராவணா பலய மனு

கொழும்பு, செப்.4

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் போரோ புதூர் பௌத்த விகாரையை பாதுகாக்கக் கூடிய அக்கறையை செலுத்துமாறு இராவணா பலய அமைப்பு இலங்கையில் உள்ள இந்தோனேஷியத் தூதரகத்திடம் நேற்றுக் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தோனேஷிய தூதரகம் வரை பேரணியாக சென்ற இராவணா பலய அமைப்பு தூதரக அதிகாரி ஒருவரிடம் இது சம்பந்தமான மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளது. (ற)

## சாட்சியம் கூறுபவர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் சட்டம்

### 9 ஆம் திகதி நாடாளுமன்றில்

கொழும்பு,செப்.4

வெகு காலமாக எதிர்பார்க்கப்பட்டு வந்த சாட்சிகளுக்கு பாதுகாப்பு அளிப்பது தொடர்பான சட்ட வரைவு ஒன்று இந்த மாதம் 9ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமால் தாக்கல் செய்யப் படவிருக்கின்றது. நீதி அமைச்சின் செயலாளர் கமிலினி டி சில்வா இந்தத் தகவலை செய்தியாளர்களிடம் வெளியிட்டுள்ளார்.



குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் சாட்சியமளிப்பவர்களுக்கும் உதவி அளித்தல் என்று தலைப்பிடப்பட்டுள்ள இந்த வரைவு சட்டமானது குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கான நிதியம் ஒன்றை நிறுவுவதற்கும் வகை செய்கின்றது. மற்றும் இந்தச் சட்டத்தில் விதிகளை நடைமுறைப் படுத்துவதற்கான அதிகார சபையொன்றை நிறுவுவதற்கும் இதில் வகை செய்யப்பட்டுள்ளது.

குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளை மற்றும் சாட்சிகளின் உரித்துக்களை அங்கீகரிப்பது இந்தச் சட்டத்தில் உள்ள முக்கிய சில அம்சங்களாகும். பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் உரிமைகள் மீறப்படுவதாக செய்யப்படும் முறைப்பாடுகளை விசாரிப்பதற்கான பொறி அமைப் பொன்றும் நிறுவப்படவிருக்கின்றது. குற்றப் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு உதவுவதற்கென பொலிஸ் மா அதிபரால் விசேடப் பிரிவொன்றை நிறுவச் செய்வதற்கும் சட்டத்தில் வகை செய்யப்படுகின்றது.

இதற்கென இருக்கும் தேசிய அதிகார சபையானது குற்றப் பாதிப்புக்குள்ளானவர்கள் மற்றும் சாட்சிகளின் உரிமைகள் மீறப்பட்டமை தொடர்பான புகார்களை விசாரணை செய்யும், அதன் பின் அதனுடன் சம்பந்தப்பட்ட நீதிமன்றம், ஆணைக்குழு அல்லது ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும், அதன் பேரில் குற்றமிழைத்தவர்களுக்கு உரிய தண்டனை விதிக்கப்படுவதாய் இருக்கும்.

இந்தச் சட்டத்தை செயற்படுத்துவதற்கான தேசிய அதிகார சபையில் 12 உறுப்பினர்கள் இருப்பார்கள். இவர்களில் நீதியமைச்சு சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகாரம், பாதுகாப்பு, சட்டமா அதிபர் திணைக்களம், மனித உரிமை ஆணையம், பொலிஸ் திணைக்களம், சிறுவர் நன்னடத்தை மற்றும் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை சீர்திருத்தம் ஆகியவற்றின் செயலகங்களின் பிரதிநிதிகள் 7 பேரும், ஜனாதிபதியால் நியமிக்கப்படும் 5 பேருடன் உறுப்பினர்களாக இருப்பர்.

பொலிஸ் மா அதிபரால் நிறுவப்படும் பிரிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் சாட்சியமளிப்பவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கப்படும். நீதிமன்றங்கள் விசாரணையின் பின்னர் குற்றவாளிகளின் மீது விதிக்கப்படும் தண்டப் பணத்திலிருந்தும் அதற்கென உருவாக்கப்பட்டுள்ள நிதியிலிருந்தும் இழப்பீடுகளை வழங்கும். பாதிக்கப்பட்டவர் காலமானார் என்றால் இழப்பீட்டு தொகை அவரது நெருங்கிய உறவினருக்கு வழங்கப்படும்.

குற்றப் பாதிப்புக்குள்ளானவர் மற்றும் சாட்சிகள் அச்சுறுத்தலுக்குள்ளாவதாக தெரிவித்து வசிப்பிடங்களை மாற்ற விரும்பின் அதற்கு தேசிய அதிகாரசபை உதவியளிக்கும்.

வீடியோ தொடர்புகள் மூலம் சாட்சிய மளிக்கவும் ஏற்பாடு செய்யப்படும் என்றார்- கமலினி டி சில்வா. (ப)

## ஐ.நா. விசாரணை குறித்து இலங்கை அரசு கேள்வி

### ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அடுத்த அமர்வில் எழுப்பப்படவுள்ளதாம்

கொழும்பு, செப்.4

ஜெனீவாவில் எதிர்வரும் 8 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 27 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பாக ஐ.நா. விசாரணைக்குழு முன்வைக்கவுள்ள வாய்மூல அறிக்கையின் நம்பகத்தன்மைப் பற்றி அரசு கேள்வியெழுப்பவுள்ளது என்று தெரிய வருகின்றது.

விசாரணை முறைமை, சாட்சியங்கள் திரட்டப்பட்ட விதம் உட்பட மேலும் சில விடயங்கள் தொடர்பிலேயே கேள்விகள் எழுப்பப்படவுள்ளன என்றும், வெளிவிவகார அமைச்சர் அல்லது ஜெனிவாவிலுள்ள இலங்கைப் பிரதிநிதி ஆகிய இருவருள் ஒருவரே இவ் வாறு வினா தொடுக்கவுள்ளனர் என்றும் அறியமுடிகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் விசாரணையை இலங்கை அரசு நிராகரித்திருந்தாலும், செப்ரெம்பர் மாத அமர்வில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்க வேண்டிய கடப்பாடு அதற்கு உண்டு. அத்துடன், குற்றச்சாட்டுகளுக்கு விளக்கமளிக்க வேண்டிய தேவையும் இருக்கின்றது. அதற்கமையவே அரச பிரதிநிதிகள் ஜெனிவாவில், ஐ.நா. குழுவின் விசாரணைப் பற்றி விளக்கம்கோர உள்ளனர்.

அதேவேளை, உள்ளக விசாரணையின் முன்னேற்றம் குறித்தும் இதன்போது இலங்கை அரச பிரதிநி திகள் சுட்டிக்காட்டுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 26 ஆவதுக் கூட்டத்தொடரில் 24 நாடுகளின் ஒப்புதலுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை மீது விசாரணைகளை முன்னெடுத்து வரும் ஐ.நா. குழு தனது விசாரணைப் பற்றி வாய்மூல அறிக்கையை சபையில் வழங்கவுள்ளது. அடுத்த ஆண்டு மார்ச் மாத அமர்வின் போதே விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. (ற)

## பலாங்கொடையில் 2000 ஆண்டுகளுக்கு முந்திய மனிதர்களின் இருப்பிடம்

### தொல்பொருள் ஆய்வுகளின்போது தெரிய வந்தது

கொழும்பு,செப்.4

சரித்திர காலத்துக்கு முந்திய பலாங்கொடையின் வரலாற்றில் 2000 ஆண்டுகளுக்கு முன்பே மிகவும் மேம்பட்ட வகையில் அமைக்கப்பட்ட மனிதர்கள் வாழ்ந்த இருப்பிடம் ஒன்று தொல்பொருள் ஆய்வாளர்களால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

களனிப் பல்கலைக் கழகத்தின் தொல்பொருள் பீடத்தில் பேராசிரியராகப் பணி புரியும் பேராசிரியர் ராஜ்சோமதேவ தலைமையில் இங்கு அகழ்வு வேலைகள் இடம்பெற்றன. அரசுக்குச் சொந்தமான தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த காணியில் சுமார் இரண்டு வாரங்கள் இடம் பெற்ற வேலைகளின் போதே இவை கண்டு பிடிக்கப்பட்டது. இது தொடர்பாக பேராசிரியர் சோமதேவ தெரிவிக்கையில்;

மகிந்தரின் வருகைக்கு முன்பே பௌத்தமதம் இங்கு அனுஷ்டிக்கப்பட்டு வந்தமை தெரிய வந்துள்ளது. மேலும் அங்கு வாழ்ந்தவர்களால் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களும் உபகரணங்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. மேலும் இது ஒரு வணக்கத்தலம் அமைந்த இடமாகவே தெரிய வருகின்றது. மேலும், இங்கு காணப்பட்ட பாறைகளால் ஆன குகையில் 'யக்க' என்ற வார்த்தை காணப்பட்டது. இது இந்த இடத்தில் இயக்கர் இன மக்கள் வாழ்ந்ததை எடுத்துக் காட்டுகின்றது. விஜயன் இங்கு வருவதற்கு முன்பே நாகரிக வளர்ச்சி கண்ட மக்கள் இங்கு வாழ்ந்ததும், மகிந்தரின் வருகைக்கு முன்பே பௌத்த மதம் அனுஷ்டிக்கப்பட்டு வந்துள்ளது என்பதும் தெரிய வந்துள்ளது- என்றார். (க)



## நச்சின்னு கடி



"முனியாண்டி! நீ அடிச்ச கொள்ளை நிரூபிக்கப்பட்டு விட்டது. அதனால் ஐம்பதாயிரம் ரூபாய் அபராதம் கட்ட வேண்டும்!" எஜமான்! கண்ணைக் கட்டி வாயைக் கட்டி அடிச்ச பணம். கொஞ்சம் கருணை காட்டுங்க!'

"பாடம் எல்லாம் முடிந்து விட்டது. ஏதாவது சந்தேகம் இருந்தால் கேளுங்கள். எதுவாக இருந்தாலும் தயங்காமக் கேளுங்கள்"
"சேர், உங்க பொண்ணு பெயரு என்ன சேர்?"


'தலைவருக்கு எத்தனை மனைவி?'
'சட்டப்படி ஒன்று, 'செட்டப்'படி ஏழு!'

கலா: இரண்டு கண்ணிருந்தும், அரிசியில ஒழுங்கா கல்லைப் பொறுக்க முடியாதா ?
மாலா: முப்பத்திரண்டு பல்லு இருக்கே மெல்ல முடியாதா?




## சலீம் சறுக்கலா?

நான் படத்தின் வெற்றியைத் தொடர்ந்து அதன் இரண்டாம் பாகமாக விஜய் அண்டனி நடித்த படம் சலீம். இந்தப் படம் கடந்த வாரம் திரைக்கு வந்தது.
வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் இந்தத் திரைப்படம் கொரிய மொழி படமான 'பிக் பேங்க்' படத்தின் தழுவல் என்று தகவல் கசிந்துள்ளது. வைத்தியராக பணியாற்றும் சலீமை, மன உளைச்சலுக்கு உள்ளாக்கி, அவரை வேலை நீக்கமும் செய்கிறது வைத்தியசாலை நிர்வாகம். அவருக்கு நிச்சயிக்கப்பட்ட பெண்ணும் சலீமை தொடர்ந்து அவமானப்படுத்தி ஒருகட்டத்தில் திருமணம் செய்து கொள்ள விருப்பமில்லை என்று சொல்லி திருமணத்தையே நிறுத்திவிடுகிறார். இதைக்கண்டு கொதிக்கும் நாயகன் என்ன செய்கிறார் என்பதே படத்தின் கதை.
'பிக் பேங்க்' என்ற கொரிய படத்தில் நாயகனான பார்க் மேன் சூ அலுவலகத்தில் வேலை செய்யும் சாதாரண சிப்பந்தி. அவனுடன் வாழ மனைவிக்கு பிடிக்காமல் விவாகரத்து கேட்கிறாள். மறுபக்கம், அவனது ஊழல் செய்யும் முதலாளி. இவர்களுக்கிடையில் சிக்கி மன உளைச்சலுக்குள்ளாகும் பார்க் மேன் சூ வெகுண்டெழுந்து என்ன செய்கிறான் என்பதே கதை.
இரண்டு படங்களிலும் கதைக் களம், காட்சியமைப்பு மற்றும் பாத்திரங்கள் கூட ஒரே மாதிரியாக இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.





## புட்டிப் பால்

பிறந்து மூன்று நாள்களிலிருந்து குழந்தையொன்று கைகளில் புட்டிப்பாலை பிடித்து தானாக பால்குடிக்கும் வினோத சம்பவம் பலரை வியப்புக்குள்ளாக்கியுள்ளது. அமெரிக்காவின், எசெக்ஸ் மாகாணத்தில் வசித்துவரும் ஒனி சியாடோசியா என்ற 20 வயது பெண்ணுக்கு அமரா என்ற பெண் குழந்தை அண்மையில் பிறந்தது. இந்தக் குழந்தைக்குதற்போது வயது மூன்று நாள்களே ஆகின்றன. இந்த நிலையில் குழந்தை யாருடைய உதவியுமின்றி தானாக புட்டிப்பாலை அருந்துகின்றது. 'நாங்கள் பாலூட்டும்போது அமரா அழத்தொடங்கினாள். உடனடியாக புட்டிப்பாலை கைகளில் பிடித்துகொண்டாள்' என்று குழந்தையின் தயார் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.
'எங்களால் இதனை நம்பமுடியவில்லை. ஏனெனில் அமராவின் வயதுடைய ஏனைய குழந்தைகள் இவ்வாறு செய்வதில்லை. எனக்கும் உண்மையில் வியப்பாக இருந்தது. இதனால் அமராவின் செயற்பாடுகளை புகைப்படங்களாக பிடித்து வருகின்றேன்' என்றும் அவர் தெரிவித்துள்ளார். சுமார் 6 இறாத்தல் நிறையுடைய அமரா, ரம்போர்ட் குயின்ஸ் வைத்தியசாலையில் பிறந்தார். இந்த நிலையில் அமராவின் வளர்ச்சியானது வைத்தியர்களையும் மருத்துவ தாதிகளையும் அதர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. ஆனால், குழந்தைகளுக்கு தாய்ப் பாலூட்டுவதுதான் சிறந்தது என என்.சி.டி எனும் தொண்டர் நிறுவனம் தெரிவித்துள்ளது. புட்டிப் பாலை அருந்தும்போது குழந்தை பல்வேறு பிரச்சினைகளை எதிர் கொள்ளக்கூடும். இது குழந்தையின் உயிருக்கு ஆபத்தாகவும் அமையும், என்று அந்த நிறுவனம் எச்சரிக்கை செய்துள்ளது.



## சாயி சிந்தனை

### இறைவனிடம் உண்மையான சரணாகதியடைதல் என்றால் என்ன?

உண்மையான சரணாகதியடைதலானது துயரம் இருக்கிறதோ இல்லையோ துன்பம் கஷ்டம் இப்படியானவற்றையெல்லாம், கருத்தில் கொள்ளாது.
'நான் என்னை முழுமையாகவே சுவாமிக்கு அர்ப்பணித்து விட்டேன். ஆனால் எனது பிரச்சினைகளுக்கோ, துயருக்கோ, ஒரு முடிவுமில்லை' என ஒருவன் முறையிடுவாராயின் இது சரணாகதியாகாது. உண்மையான சரணாகதி என்றால் என்ன என்று விளங்கிக் கொள்ளாமையையே இது சுட்டிக்காட்டுகிறது.

## இன்றைய பேஸ்புக் தத்துவம்

காதல் பற்றிக் கொண்டால், பொங்கலில் இருக்கும் மிளகும் இனிக்கும் அதே காதல் கழற்றி விடப்பட்டால், பொங்கலில் இருக்கும் கஜு கூட கசக்கும்.

## ரிலாக்ஸா வாசியுங்க...

ஒரு வீட்டுக்கு வேண்டாத விருந்தாளி வந்திருந்தார். கணவன் மனைவியிடம் தேநீர் போட்டுக் கொண்டு வருமாறு சொன்னான்.
'இங்கே மாவும் இல்லை, சீனியும் இல்லை' என்று மனைவி சமையலறையிலிருந்து சத்தமிட்டார். 'எப்போதும் உனக்கு பஞ்சப்பாட்டுதான்' என்று கணவன் சத்தமிட வாய்பேச்சு முற்றி மனைவியை அறைந்து விடுகின்றான்.
'இந்த அநியாயத்தை கேட்க ஆளில்லையா' என்று மனைவி அழ ஆரம்பித்தாள். இந்த அமளி துமளியை கண்டு சொல்லிக் கொள்ளாமல் வெளியேறினார். அந்த விருந்தாளி. அவர் வெளியேறிவிட்டதும் 'கொல்' என்று சிரித்தனர் கணவனும் மனைவியும். 'எப்படி இருந்தது என் நடிப்பு. அடிப்பதைப் போல் அடித்தேனே' என்றான் கணவன்.
'ஆஹா.. அழுவது போல் அழுதேனே.. எப்படி இருந்தது. என் நடிப்பு..' என்றாள் மனைவி.
'பிரமாதம்' என்றான் கணவன்.
இதன் போது பின்னால் இருந்து ஒரு குரல் கேட்டது.
'நானும் போவது போல் போய்விட்டு திரும்பி விட்டேன். டீ குடிக்காமல் போறதா இல்லை'. அந்த விருந்தாளிதான்.





## விமர்சனம்

# அதிக சிக்கனத்தைக் கடைப்பிடிப்பவர்கள் ஆண்களே!



நீங்களும் எழுதலாம்....

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்

**காதலில் தோல்வியை அதிகம் எதிர்கொள்வது**

**ஆண்களா? பெண்களா?**

தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.

இன்றைய 21ஆம் நூற்றாண்டில் அதிக சிக்கனத்தைக் கடைப்பிடிப்பவர்கள் ஆண்களா? பெண்களா? எனப் பார்க்கும் போது அது ஆண்கள் தான் எனக் கூறவேண்டும்.

ஏனெனில் பெண்களில் சிலர் பேராசை கொண்டவர்கள். நகைகள், சேலை என்பவற்றை கண்டவுடன் கிடைக்கும் வருமானத்துக்கு மேலதிகமாகச் செலவு செய்வார்கள்.

அழகு சாதனப் பொருள்களுக்காகவும், அழகு நிலையங்களுக்காகவும் செலவு செய்பவர்களும் பெண்கள் தான். ஏன் காலில் அணியும் செருப்பு கூட விலைக் கூடியதாகக் காணப்படவேண்டுமென அனைத்து விடயங்களிலும் வீண் செலவு செய்கிறார்கள். அதுமட்டுமா? தொலைக்காட்சி நாடகங்கள் என நேரத்தை வீண் செலவு செய்கின்றார்கள். அவ்வாறு இருக்க பெண்கள் எவ்வாறு சிக்கனத்தைக் கடைப்பிடிக்கின்றார்கள்.

இவற்றை எல்லாம் நோக்கும் போது பெரும்பாலும் ஆண்கள் தான் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கின்றனர். ஆண் எங்காவது புடைவைக் கடையில் நேரத்தைச் செலவழித்தான் எனவும், ஆண்கள் அழகுக் கலை நிலையத்தில் நேரத்தை செலவழிக்கின்றான் என எங்காவது கேள்விப் பட்டதுண்டா? கேள்விப்பட்டிருப்பீர்கள்.

ஆனால் பெரும்பாலானவர்கள் அவ்வாறில்லை. பெரும்பாலான ஆண்கள் இவற்றைப் புறக்கணித்து செலவைக் குறைத்து சிக்கனத்தை கடைப்பிடிக்கின்றனர். ஒரு குடும்பத்தில் ஆண் தனக்காக எதையும் செலவு செய்வதே இல்லை. திருமணத்தின் முன் தன் பெற்றோருக்காகவும் தன் சகோதர, சகோதரிகளுக்காகவும் திருமணத்தின் பின் மனைவி, பிள்ளைகளுக்காகவும் உழைக்கின்றான்.

இதனாலேயே ஓர் ஆண் குடும்பத்தின் தலைவனாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றான். ஒரு குடும்புத்தில் ஆண் இல்லையெனில் உழைப்பது, வாழ்வது அனைத்தும் கடினம். அது சகோத்ரனாயினும் சரி, தந்தையாயினும் சரி ஆண்களே சிக்கனத்தைக் கடைப்பிடித்து குடும்பத்தை வாழ வைப்பவர்கள் ஆவர். பெண்களைக் காட்டிலும் ஆண்களே சிக்கனத்தைக் கடைப்பிடிப்பவர்கள்.

*கு.பிரியங்கா, அளவெட்டி*

## இளைய தலைமுறை

இளைய தலைமுறைகளின்
இன்றைய நாகரிகம்
இதயக் குமுறலாய்
இருப்பது நிஜமே....

மாணவ மணிகளின்
மானமற்ற சேஷ்டைகள்
மனித நேயமற்ற ஒழுக்க கேடுகள்
புனிதமற்ற கல்வி கற்றல்...

பகிடி வதைகள்
பண்பில்லா பழக்கவழக்கங்கள்
போலிக் கௌரவங்கள்
புனிதமற்ற கல்வி கற்றல்...

சீருடை வெண்மை தான்
சீர் தூக்கிப் பார்த்தால்
சிதைந்து போவது
கல்வி மட்டுமல்ல
கலாசாரமுமே....



பள்ளிப் பருவம்
பசுமையானவை
இனிய தேனூறும்
நினைவுகள் அலைபாயும்
வரம்பெனும் கடிவாளமிட்டு
அடக்குங்கள்

ஆழமான கல்வியில்
கவனம் செலுத்துங்கள்
நீங்கள் உயர்வடைவதை
யாராலும் தடுக்க முடியாது.

மாணவ சமுதாயமே....
எதிர்காலத்தில்
இந்த நாட்டை செதுக்கப்போகும்
சிற்பிகளே...

தீயனவெல்லாம் சுட்டுப்
பொசுங்கட்டும்
நன்மைகள் நன்றே பிறக்கட்டும்

*ம. ஆன் டிலானி*
*ஊர்காவற்றுறை*

## கல்லறைக்காதல்



அன்பே நம் காதல் ஓவியமா
வரைவதற்கு
காவியமா எழுதுவதற்கு
பொன்னெழுத்துகளால் பொறிக்க
அவை நிஜங்கள் அல்ல யாவும் என்
நினைவுகள் மட்டும்
அப்படிபொறித்தாலும் அவை
காலத்தால் அழிந்துவிடும்.
நான் இறந்த பின்பு தான் என்
காதலின் ஆழம் புரியுமென்றால்
நான் இன்றே இறக்கிறேன்
ஆயினும் என்றோ ஒரு நாள்
என் உடலை மீண்டும் தோண்டி
இதயத்தைக் கிழித்துப் பார்- அங்கு
தெரிவது உன் முகம்தான் அதை
கண்ணாடி என்று நினைக்காதே
விழாமலே நொருங்கி
விடும் என் இதயம்

*பி. நீரஜா*

*வ. லோஜினி*



இன்றைய இளைஞர்களில் பெரும்பாலானோர் சீரழிந்து செல்வதற்கு மது, மாது ஆகிய இரு விடயங்களே மிகவும் ஆதிக்கம் செலுத்துகின்றன.

# இன்றைய இளைஞர்கள் இலகுவில் அடிமையாகும் இரு விடயங்கள்

எம்மைக் காக்கும் தூண்களாக செயற்பட வேண்டிய இளைஞர்கள் தம்மைத் தாமே அழிவின் பாதைக்கு இட்டுச் செல்வது 'யானை தன் தலை மேல் தானே மண் அள்ளிக் கொட்டுவது' போன்ற செயலுக்கு ஈடாகின்றது.

அவ்வாறு இவர்கள் தமது நேரிய வழியில் இருந்து தடம்புரண்டு செல்வதற்கு பல்வேறு காரணங்கள் வழி சமைக்கின்றன.

அந்த வகையில் போதைப் பொருள் பாவனை, இணையம், தொலைத் தொடர்பு சாதனங்கள் என்பவற்றைக் காரணங்களாகக் குறிப்பிட முடியும்.

அவ்வாறு மேற்குறிப்பிட்ட காரணங்கள் இருக்கின்ற போதிலும், இன்றைய இளைஞர்களில் பெரும்பாலானோர் சீரழிந்து செல்வதற்கு மது, மாது ஆகிய இரு விடயங்களே மிகவும் ஆதிக்கம் செலுத்துகின்றன.

ஆனால் இவர்கள் இந்த விடயங்களுக்கு தாம் அடிமைப்பட்டுள்ளோம் என்று உணராமை தான் மிகவும் கவலைக் கிடமாக உள்ளது.

ஒரு விடயத்துக்கு நாம் அடிமைப்பட்டுள்ளோம் எனக் குறிப்பிடுவது யாதெனில், எங்கள் அனைவருக்கும் கோப்பி அருந்துவது மிகவும் விருப்பமான தொரு விடயம்.

அதை நாம் தொடர்ந்து பருகுவதும், அதைப் பருகாத வேளை அதைப்பருக வேண்டும் என்ற வாஞ்சையுமே ஒரு வித அடிமைத்தனம் ஆகும்.

அதைப் போலவே இவர்களும் இந்த இரு விடயங்களுக்குள்ளும் மூழ்கடிக்கப் பட்டு காணப்படுகின்றனர்.



அந்த வகையில் முதலாவது விடயமான மதுவினைப் பற்றி கூறுகையில், பெரும்பாலும் மது அருந்துபவர்களிடம் சென்று அருந்துவதற்கான காரணம் என்னவென்று கேட்டால் கவலையை மறப்பதற்கு அல்லது வெற்றியைக் கொண்டாடு வதற்கு என்ற பதில்களே மேலோங்கி நிற்கும்.

இதெல்லாம் ஏற்றுக் கொள்வதற்குரிய காரணங்கள் அல்ல. ஏனெனில் கவலை, வெற்றி, தோல்வி, ஏமாற்றம், மகிழ்ச்சி என்பன அனைவரின் வாழ்விலும் ஏற்படும் சாதாரண விடயங்களே.

இவற்றையெல்லாம் சமாளித்து வாழ்வை வெற்றிகரமாக எதிர்கொள்வதே புத்திசாலித்தனம் என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

*(தொடரும்)*

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் இளவல்கள் வட்டம் என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..........................................

முகவரி :-......................................

.......................... திகதி

.......................... கையொப்பம்

**இளவல்கள் வட்டம்**

உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



கிளிநொச்சி மாவட்டத்தில் வறட்சியால் ஏற்பட்ட குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொள்வதற்கு இடர்முகாமைத்துவ அமைச்சு கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு டிராக்டருடன் கூடிய நீர்த்தாங்கியொன்றை வழங்கியுள்ளது. இந்த நீர்த் தாங்கி கரைச்சிப் பிரதேச செயலகத்துக்கு வழங்கப்பட்டுக் குடிதண்ணீர் வழங்கல் இடம்பெறவுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் இடர் முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் கு.சுகுணதாஸ் தெரிவித்தார். (த-18)

## 12 போத்தல் கசிப்பு வைத்திருந்த பெண்ணுக்கு 75,000 தண்டம்

கிளிநொச்சி, செப்.4

கண்டாவளை பழைய ஊரியான் கிராமத்தில் கசிப்பு வைத்திருந்த பெண்ணொருவருக்குக் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றம் 75ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளது.

12 போத்தல் கசிப்புடன் கடந்த 31 ஆம் திகதி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட குறித்த பெண் கடந்த முதலாம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். அவரை 75ஆயிரம் ரூபா தண்டப்பணமாகச் செலுத்துமாறு நீதிவான் எம்.ஐ. வகாப் தீன் உத்தரவிட்டார்.

இதேவேளை-தருமபுரம் பகுதியில் ஒரு போத்தல் கசிப்புடன் கடந்த 30 ஆம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நபரொருவருக்கு கிளிநொச்சி நீதிமன்றினால் 15ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (த-18)

## இயக்கச்சி விபத்தில் படைச் சிப்பாய் சாவு

கிளிநொச்சி, செப்.4

கிளிநொச்சி, இயக்கச்சிப் பகுதியில் நேற்றுப் புதன்கிழமை அதிகாலை இடம்பெற்ற விபத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் எனக் கிளிநொச்சி போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர்.

சைக்கிளில் வீதி ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய் மீது வானொன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில், குருநாகலைச் சேர்ந்த ஆர்.டி.சுமிந்தகுமார் (வயது-32) என்ற இராணுவச் சிப்பாயே உயிரிழந்தவராவார். இவர், கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துடன் தொடர்புடைய வான் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் வானை பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றதாகப் பொலிஸார் மேலும் கூறினார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

# சித்த மருத்துவ மூலிகை தோட்டம் கிளிநொச்சியில்

### வடக்கு சுகாதார அமைச்சர் அறிவிப்பு

வவுனியா, செப்.4

கிளிநொச்சி மாவட்டத்தில் சித்த மருத்துவத்தை ஊக்கிவிக்க 75 ஏக்கரில் மூலிகைத் தோட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தமிழ் மக்களின் பாரம்பரியமான மருத்துவ முறை சித்த மருத்துவமே. ஆனால் இன்று அந்தத் துறையானது வடமாகாணத்தில் அழிவடைந்து செல்கின்றது.

இதனால் வடமாகாண சபையினால் கிளிநொச்சி மாவட்டத்தின் கல்மடு பிரதேசத்தில் 100 ஏக்கர் காணி ஆயுள்வேத சித்த மருத்துவத்துக்கு என ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் 75 ஏக்கர் காணியில் மூலிகைச் செய்கையும் 25



ஏக்கரில் அதனை பதப்படுத்தி மருந்து உற்பத்தி செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத் திட்டம் தொடர்பாக இந்தியாவுக்கு விளக்கமளித்துள்ளதுடன் அவர்களின் உதவியே பெறப்படவுள்ளது.

இதன் மூலம் உள்நாட்டு வேலை வாய்ப்பையும் மூலிகை உற்பத்தியையும் ஊக்கிவிக்க முடியும். கிராம மட்டங்களில் சித்த மருத்துவம் செய்பவர்களையும் உள்வாங்கிப் பயிற்சிகளை வழங்க முடியும்.

உயிலங்குளம், நவ்வி, குமிழமுனை, புதுக்குடியிப்பு போன்ற இடங்களில் புதிய வைத்தியசாலை அமைப்பு, வவுனியாவில் சிறுநீரகப் பிரிவு ஆரம்பித்தல், போசாக்கு வேலைத் திட்டம் என்பன வடமாகாணத்தில் சுகாதார அமைச்சால் முன்னெடுக்கப்படவுள்ளன.

தாதியர் பற்றாக்குறை, வைத்தியர் பற்றாக்குறை என்பன தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் பேசி வருகின்றோம்.

அவை விரைவில் நிரப்பப்படும். நரம்பு, இதயம் போன்ற சிகிச்சைகளை மேற் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது- என்றார்.(த-402)

## நெடுங்கேணி செல்லும் வீதி படுமோசம்

முல்லைத்தீவு, செப்.4

ஒட்டுசுட்டான்-முல்லைத்தீவு பிரதான வீதியிலிருந்து முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயம் ஊடாக நெடுங்கேணி வீதியைச் சென்றடையும் வீதி மிகவும் மோசமான நிலையில் காணப்படுகிறது.

இதனால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதாகவும் அதனை விரைவாகப் புனரமைக்குமாறும் மக்கள் கோரியுள்ளனர்.

முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலய வளாகத்துக்கு அண்மையாக நெடுங்கேணி பிரதான வீதியைச் சென்றடையும் வீதி மக்களின் அன்றாட பாவனை மட்டுமன்றிப் பஸ்கள் செல்லும் பாதையாகவும் அமைந்துள்ளது. இதனைப் புனரமைத்துத் தரும்படி தெரிவித்தும் எந்தவித முன்னேற்றமும் காணப்படவில்லை. (த-500)



## வங்காலைக் கடற்கரையில் உருக்குலைந்த சடலம் மீட்பு

மன்னார், செப்.4

மன்னாரில் வங்காலைக் கடற்கரையில் உருக் குலைந்த நிலையில் சடலம் ஒன்று நேற்றுப் புதன்கிழமை கரை ஒதுங்கியுள்ளது.

வங்காலைக் கடற்படை முகாமிலிருந்து சவுத்பார் பகுதியை நோக்கிய சுமார் 2 கிலோ மீற்றர் தூரத்தில் இந்தச் சடலம் கரை ஒதுங்கியுள்ளது.

நேற்றுக் காலை வங்காலை மீனவர்கள் குறித்த சடலத்தை கண்டுள்ளனர்.

இதனை அடுத்து சடலம் தொடர்பாக வங்காலைப் பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டுப் பின்னர் மன்னார் தலைமையகப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. இதனை அடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

நீல நிற சேட், கறுப்பு நிற நீளக் காற்சட்டை ஆகியவற்றுடன் சடலம் காணப்பட்டது.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த)

## குரங்குகள் தொல்லையால் அக்கராயன் மக்கள் பாதிப்பு

கிளிநொச்சி, செப்.4

அக்கராயனில் குரங்குகளின் தொல்லை அந்தப்பகுதி மக்கள் பெரும் இடர்களை எதிர் நோக்கியுள்ளனர்.

பெரும் எண்ணிக்கையான மாமரங்கள், தென்னைகள் நிறைந்த இந்தக் கிராமத்தில் கூட்டமாக நுழையும் குரங்குகள் மாமரங்களிலுள்ள காய்களையும், தென்னைகளிலுள்ள குரும்பைகளையும் அழித்துவருவதாகவும், இது தொடர்பாகக் கிராம மக்கள் அதிகாரிகளிடம் முறையிட்டும் பயன் கிடைக்கவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வனஜீவராசிகள் திணைக்களம் சிறந்த முறையில் செயற்படாத தன்மைகளினால் குரங்குகளின் தொல்லை பெரும் தலையிடியாக மாறியுள்ளதென மக்கள் கூறுகின்றனர்.

கிளிநொச்சி அரச செயலகம், கரைச்சிப் பிரதேச செயலகம் என்பவற்றில் நடைபெறும் வாழ்வின் எழுச்சி போன்ற கூட்டங்களில் குரங்குகளின் தொல்லை தொடர்பாக வட்டக்கச்சிப் பிரதேச மக்களும்



குரலெழுப்பி வருகின்றனர்.

வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் கீழ் வட்டக்கச்சிப் பகுதியில் மேற்கொண்டுள்ள அன்னாசிச் செய்கை, பூசணிச் செய்கை போன்ற பயிர்ச் செய்கைகளும் குரங்குகளால் பெரும் அழிவுகளைச் சந்தித்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கிராமங்களுக்குள் நுழைந்துள்ள குரங்குகளைக் கிராமங்களிலிருந்து நீண்ட தூரங்களுக்குக் கலைத்துச் சென்று காடுகளில் விடவேண்டுமென்று கிளிநொச்சி மாவட்ட செயலக உதவித்திட்ட மிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (த-18)

# மாணவருக்கான மரக்கறி கொடுப்பனவு கிடைக்காமையால் சிரமத்தில் அதிபர்கள்

### உணவு வழங்கல் தடைப்படும் நிலை

வவுனியா, செப்.4

வவுனியாவில் பாடசாலை மாணவர்களுக்கான உணவு வழங்கலுக்கான பச்சை மரக்கறி கொள்வனவுக்கான கொடுப்பனவு வந்து சேராமையினால் அதிபர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்

உலக உணவுத் திட்டம் மூலம்



பாடசாலை மாணவர்களுக்குப் போஷாக்கான உணவு கடந்த 10 வருடங்களாக வழங்கப்பட்டு வருகிறது.

இதற்கான பச்சை மரக்கறி கொள்வனவுக்கான கொடுப்பனவை கல்வி அமைச்சு வடமாகாணக் கல்வித் திணைக்களம் ஊடாக வழங்கி வருகின்றது.

2014 பெப்ரவரி மாதத்திலிருந்து 7 மாதங்களுக்கான கொடுப்பனவு இதுவரை வவுனியா தெற்கு வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு வழங்கப்படாமையினால் 80 பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்களும் பொருளாதார ரீதியில் இடர்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

மூன்றாம் தவணையும் ஆரம்பமாகியுள்ளமையால் மரக்கறி வர்த்தக நிலையங்களில் பட்ட கடனைத் திருப்பிச் செலுத்தினாலேயே மீண்டும் மரக்கறிகளை அவர்கள் வழங்குவார்கள்.

இல்லையேல் இதனால் நாளாந்தம் ஏற்படும் இடர்களால் அதிபர்களின் பொருளாதாரம் பாதிக்கப்படும்.

எனவே உரிய கொடுப்பனவுகளை வழங்கி உதவுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அதிபர்கள் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். (த-402)

## கொடையாளர் கௌரவிப்பு



வலி.வடக்கு, செப் 4
வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் அளவெட்டிப் பகுதியில் பெண்களைத் தலைமைத்துவமாக கொண்ட 32 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவித்திட்டமாக நல்ல இன ஆடுகள் வழங்கப்பட்டன.
இதன்போது இந்தத் திட்டத்துக்கு உதவி புரிந்த புலம்பெயர்ந்து வாழும் அன்பர் ஒருவரின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டனர்.
சுவிஸ்நாட்டில்வாழும் ச.விஜயகுமார் என்பவர் அங்கு தனது பிறந்த நாளுக்கு அன்பளிப்பு கொண்டு வர முற்பட்டவர்களிடம், அவற்றைத் தர வேண்டாம். அதற்குப் பதிலாக எமது தாயகத்தில் வாழ்பவர்களுக்கு உதவுவதற்கு உதவி செய்யுங்கள் என்று கூறி மண்டபத்தில் உண்டியல் ஒன்றை வைத்திருந்தார். அதில் சேர்க்கப்பட்ட பணம் மூன்று லட்சம் ரூபாவை இந்த ஆடுகளைக் கொள்வனவு செய்வதற்கு வழங்கியிருந்தார்.
அதனைக் கௌரவிக்கும் வகையில் திருநெல்வேலியில் வாழும் அவருடைய பெற்றோர்களான சற்குணம் பொற்கொடி தம்பதியினர் வட மாகாண முதலமைச்சர் சீ.வி.விக்கினேஸ்வரனாலும், அளவெட்டி அபிவிருத்தி மன்றத்தினாலும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். (த-86-7)



வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சினால் அளவெட்டிப் பகுதியில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட 32 பயனாளிகளுக்கு 5 லட்சத்து 35ஆயிரம் ரூபா பெறுமதியான நல்ல இன ஆடுகள் வாழ்வாதார உதவியாக வழக்கப்பட்டன. அளவெட்டி அபிவிருத்திக் கழகத் தலைவர் இ.இராஜகோபால் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனும் கலந்து கொண்டனர்.வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான திருமதி அனந்தி சசிதரன், கஜதீபன், த.சித்தார்த்தன் ஆகியோரும் இதில் பங்கேற்றனர். (த-86)

## அனலைதீவு வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் படகு தருவிக்கப்படும்

யாழ்ப்பாணம், செப்.4
அனலைதீவு வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் படகு ஒன்றைத் தருவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே.விந்தன் கனகரத்தினம் புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலைக்குத் தேவையான மருத்துவ உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் தெரிவித்தார்.
நெடுந்தீவு, நயினாதீவு வைத்தியசாலைகளுக்கு அவசர சிகிச்சைக்காக நோயாளர்களை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கக்கூடியதாக அம்புலன்ஸ் மோட்டார் படகுகள் உள்ளன. அனலைதீவு மக்களுக்கு அம்புலன்ஸ் படகும், ஆஸ்பத்திரியில் இருந்து துறைமுகத்துக்கு நோயாளர்களை ஏற்றிவரக்கூடியதாக ஒரு ஓட்டோ வாகனமும் தேவை என அனலைதீவு வைத்திய அதிகாரி தெரிவித்ததை அடுத்து அனலைதீவுக்கு ஒரு அம்புலன்ஸ் மோட்டார் படகைத் தருவிக்க சுகாதார அமைச்சின் உதவியைப் பெற்றுக் கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-7)

# 27 பவுண் நகை, 500 யூரோ பணம் திருமண வீட்டில் வைத்துத் திருட்டு

## வெளிநாட்டில் இருந்து வந்தவர்களிடம்

யாழ்ப்பாணம், செப் 4
வெளிநாட்டிலிருந்து வந்தவர்களின் 127 பவுண் நகைகள், 500 யூரோ, 50 பவுண்ஸ் மற்றும் பெறுமதிமிக்க கையடக்கத்தொலைபேசி என்பன திருடப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பிலும் தாம் ஆராய்ந்து வருவதாகவும் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.
கோண்டாவில் கிழக்கில் கடந்த மாதம் 29 ஆம் திகதி இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.
எனினும் நேற்று முன்தினமே அது தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
குறித்த நபர்கள் வெளிநாட்டிலிருந்து வந்து தமது சகோதரனுக்குத் திருமணம் செய்து வைத்துள்ளனர். அன்றிரவே குறித்த நகைகள், வெளிநாட்டு நாணயங்கள் கைத்தொலைபேசி என்பன திருடப்பட்டுள்ளன.
வீட்டில் பின் கதவு வழியாகவே திருடர்கள் உள்நுழைந்து அவற்றைத் திருடியுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
திருட்டுத் தொடர்பில் இது வரை எவரும் கைது செய்யப்படவில்லை. இது குறித்துப் பொலிஸார் விசாரணை மேற் கொண்டுள்ள போதும் இது வரை எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.
அந்த முறைப்பாடு தொடர்பிலும் திருடப்பட்ட நகைகள் இங்கு எடுத்து வருவதற்கான பற்றுச்சீட்டுகள் உள்ளிட்ட ஆவணங்கள் தொடர்பிலும் தாம் விசாரணை மேற்கொண்டுள்ளதாகக் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (த-4-106)

## நிறுத்தல் அளவைகளுக்கு முத்திரையிடல்

கரணவாய், செப்.4
வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களில் பயன்படுத்தப்படும். நிறுத்தல் அளவைகளுக்கு முத்திரை இடும் பணி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முதல் இடம்பெறுகிறது.
நேற்று முன்தினம் முதல் இன்று; நாளை மற்றும் 9 ஆம், 11 ஆம் திகதி களில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத் திலும் 15 ஆம், 16 ஆம், 18 ஆம் திகதிகளில் பிரதேச சபையின் உடுப்பிட்டி உப அலுவலகத்திலும் முற்பகல் 8.30 மணி முதல் 4 மணி வரை இப் பணி இடம்பெறவுள்ளது.
பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட அனைத்து வர்த்தக நிலையங்களும் தமது நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரை இடும்பணியை மேற்கொள்ளுமாறு பிரதேச சபைச் செயலாளர் அறிவித்துள்ளார். (த-108)

## தீவுப் பகுதி மருத்துவமனைகளுக்கு மருத்துவ உபகரணங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், செப்.4
லண்டனில் வதியும் நெடுந்தீவைச் சேர்ந்த ஒருவர் வழங்கிய நிதியில் இருந்து தீவுப் பகுதிகளான நெடுந்தீவு, புங்குடுதீவு, நயினாதீவு, அனலைதீவு ஆகிய பிரதேச மருத்துவமனைகளுக்குத் தேவையான மருத்துவ உபகரணங்கள் பெறப்பட்டு நேற்றுமுன்தினம் புங்குடுதீவு மருத்துவமனையில் வைத்து வழங்கப்பட்டன.
புங்குடுதீவு வைத்திய அதிகாரி எல்.விமலகாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே.விந்தன் கனகரத்தினத்தின் ஊடாக குறித்த உபகரணங்கள் தீவுப் பகுதி மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.
நிகழ்வில் மாகாண சபை உறுப்பினர்கள் விந்தன் கனகரத்தினம், ஆ.பரஞ்சோதி, வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.ரவீந்திரன், யாழ்.சுகாதார வைத்திய அதிகாரி ஆ.கேதீஸ்வரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உயர் மட்ட உறுப்பினர்



ஹென்றி மகேந்திரன் மற்றும் வைத்திய அதிகாரிகளான கஜேந்திரன், பாலச்சந்திரன், விமலகாந்தன், அற்புதநாதன் ஆகியோர் தமது பிரிவு வைத்தியசாலைகளுக்கு அத்தியாவசிய தேவையாக தங்களால் தெரிவிக்கப்பட்ட மருத்துவ உபகரணங்களைப் பெற்றுக் கொண்டனர். ஒவ் வொரு மருத்துவமனைக்கும் தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கப்பட்டன.
தீவுப் பகுதி மருத்துவமனைகளின் குறைபாடுகள்,தேவைகளையும் கேட்டறிந்த மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் தீவுப் பகுதியின் மருத்துவமனைகளில் உள்ள குறைபாடுகளைக் களையவும் தேவைகளை நிறைவேற்றவும் உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக உறுதியளித்தார். (வ-7)

## மோட்டார் சைக்கிள் திருட்டு ஒருவர் கைதாகி மறியலில்



திருடிய மோட்டார் சைக்கிளுக்கு இலக்கத் தகட்டை மாற்றிவிட்டுப் பயன்படுத்தி வந்தவர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அதனுடன் தொடர்புடைய 3 பேர் தலைமறைவாகியுள்ளனர். அது தொடர்பில் விசாரணை மேற்கொண்டுள்ளதாகக் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.
கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட திருநெல்வெலியில் சில வாரங்களுக்கு முன்னர் குறித்த மோட்டார் சைக்கிள் திருட்டுப் போனது. அதனைத் திருடியவர்கள் அதன் இலக்கத் தகட்டை மாற்றி வேறொரு இலக்கத் தகட்டைப் பொருத்தி விட்டுக் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளிலேயே பயன்படுத்தி வந்துள்ளனர்.
கடந்த 30 ஆம் திகதி குறித்த மோட்டார் சைக்கிளில் சென்றவர்களைப் பொலிஸார் இடைமறித்தபோது அதனைப் போட்டுவிட்டு அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர். மோட்டார் சைக்கிளைப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்ற பொலிஸார் அது தொடர்பில் விசாரணை மேற்கொண்டனர். அதன்படி புதிய செம்மணி வீதியைச் சேர்ந்த ஒருவரை நேற்று முன்தினம் பொலிஸார் கைது செய்தனர். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்து அதனுடன் மேலும் 3 பேர் தொடர்பு பட்டுள்ளமை தெரிய வந்தது. எனினும் அவர்கள் தலைமறைவாகியுள்ளனர். அதனால் குறித்த சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-4)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சமூக வலைத்தளங்களுக்கு வருவார்களா நம் அரசியல்வாதிகள்

எல்லா புதுப்பாதைகளும், மாற்றங்களும் அமெரிக்காவிலிருந்தே ஆரம்பிக்கின்றன. அல்லது, அமெரிக்காவில் நிகழ்பவைகளே ஏற்றுக் கொள்ளப்பட்ட மாற்றங்களாக அங்கீகாரம் பெறுகின்றன. போர்களாகயிருந்தாலும், புதிய கண்டுபிடிப்புக்களாக இருந்தாலும், கொல்லப்படும் உயிர்களாக இருந்தாலும் அமெரிக்கா என்றால் அதன் பெறுமதி அதிகம். ஆகவேதான் நன்மை பயக்கும் சில எடுத்துக்காட்டுக்களை அங்கிருந்து தொடவேண்டியிருக் கின்றது.

இந்த யுகத்தில் மனிதர்களுக்குக் கிடைத்த மிகப்பெரும் வரம் ஜனநாயகம்.

அதாவது பேச்சுரிமை, வாழும் உரிமை, தான் விரும்பும் ஆட்சியாளரைத் தானேவிரும்பித் தேர்வு செய்யும் உரிமை உள்ளிட்டவைகள் அதிகாரத் தரப்பினரால் சகலருக்கும் வழங்கப்பட்ட உச்ச மான பரிசு. இதற்கு முன்னான யுகங்களில்வாழ்ந்தவர்கள் இப்போது வாழும் நாம் அனுபவிக்கும் சுதந்திரத்தின் ஒருதுளியைக்கூட ருசிக்கவில்லை. அடிமைக் கூடாரத் துக்குள் பிறந்து, அதற்குள்ளேயே ஆள்பவனுக்காக மாடாய் சுழன்று, அந்த இடத்திலேயே மடிந்து போகும் பலனைப் பெற்றவராகவே இருந் தனர். 18 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் நிகழ்ந்த மறுமலர்ச்சி ஏனைய பிராந்திய மக்களையும் விடுவித்தது. இந்த சுதந்திரம் விரிவ டைவதற்கு சில நூற்றாண்டுகள் எடுத்தன.

ஆனால் வாழும் உரிமையுடனான விடுதலை அனைத்துத் தேசத்தவருக்கும் கிடைத்தது.

மனிதர்களின் விடுதலை அங்கிருந்து அவிழ்க்கப்பட்டத னாலேயே, எல்லாவித மாற்றங்களையும் அங்கிருந்தே ஏற்கவேண்டிய முடிவை நம்மையறியாமலேயே ஏற்றுக்கொண்டோம். இதில் ஆங்கில அறிவு, தொழில்நுட்பம் உள்ளிட்ட அனைத்தும் அடங்கும்.

இப்போது இன்னொரு மாற்றம். அதனையும் ஓரளவு விவரம் தெரிந்த அனைத்துத்தரப்பினரும் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். தழுவிக்கொண் டிருக்கிறோம்.

மேற்கிலும், நமக்கு அண்மையான இந்தியாவிலும் பெரும் அரசியல் மாற்றத்தைஏற்படுத்தும் சமூக வலைத்தளங்களே இந்த விடயத்தின் பொருள். அமெரிக்க அதிபர் ஒபாமாவின் இரண்டாவது வருகைக்குப் பலமாகப் பயன்படுத்திக் கொண்ட சமூக வலைத்தளங்களை, இந்தியப் பிரதமர் மோடியும் பயன்படுத்திக் கொண்டமை அண்மைய உதார ணங்களில் முக்கியமானவை. இந்த சமூக வலைத்தளங்களின் முக்கிய இலக்கு யாரென்றால், ஒவ்வொரு நாட்டினதும், எதிர்காலத்தைத் தீர்மானிக்கத் தயாராகின்ற புதிய தலைமுறையினர்தான். இந்த வகையினர் தேர்தல் வாக்களிப்புக்களில் அதிக பங்களிப்பை செலுத் துவதில்லை.

அவர்களின் தலைமுறையைக் கடந்தவர்களும், அதற்கு அண்மையிலிருப்பவர்களுமே அதில் அதிக பங்குபற்றுதலுக்குரியவர்களாவர். அப்படியானால், ஜனநாயக முறைப்படி தேர்வு செய்யப்படும் ஒபாமாவும், மோடியும் ஏன் சமூக வலைத்தளங்களைக் குறிவைக்கின்றனர்?

காரணம் இருக்கின்றது. இப்போதெல்லாம் உடனடியாக செய்தியை முதலில் படிப்பவர்கள் யாரென்றால், சமூக வலைத்தளங்களில் இயங்கிக் கொண்டிருக்கும் தலைமுறையினர்தான். அதை குறிவைக்கும் நவீன கால அரசியல்வாதிகள் சரியாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். குறிவைக்கப்படும் இந்தத் தலைமுறையினரின் உறவுக்காரரே வாக்களிக்கத் தயாராகுபவர் ஆவார். எல்லா குடும்பங்களினதும், விருப்பு வெறுப்புக்களைத் தீர்மானிக்கும் சக்தியாகப் பிள்ளைகள் இருப்பதனால், வாக்களிக்கும் தலைமுறையினரின் உளவியலுக்கு வெளிப்படையாகத் தெரியாமலேயே ஒபாமாவும், மோடியும் உள் ஏறி அமர்ந்து கொள் கின்றனர். அத்துடன் ஒரு விடயத்தைத் திரும்பத் திரும்பப் பேசவைக்கும் சக்தியை, விவாதித்து முடிவெடுக்கும் இலவசமாகத் தெரியும் விளம்பரத்தை சமூக வலைத்தளங்கள் வழங்கிவிடுகின்றன. இதனால் நம்மையறியாமலேயே அதிகளவில் பேசப்படும் பொருள்நோக்கிய நுகர்வை அடைந்துவிடுகின்றோம். இவ்வாறே ஜனநாயக வாக்களித்தலில் சமூக வலைத்தள தலைமுறையினரின் விருப்பங்கள் நிறைவேறிவிடுகின்றன.

இதை நம் அரசியல்வாதிகளும் பயன்டுத்திக்கொள்கின்றனர். எப்படியெனில் தேர்தல் காலங்களிலும், பரப்புரைக்காகவும், பரப்புரை செய்யப்படும் இடங்களில் எடுக்கும் புகைப்படங்களை பதிவேற்றி, விருப்பங்களை வாங்கிக்கொள்ளவும் பயன்படுத்திக்கொள்கின்றனர். ஒரு சிலரைத் தவிர சமூக வலைத்தளங்களில் தொடர்ச்சியாக இயங்கும், தமிழர் தரப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எந்த அரசியல்வாதிகளையும் காணமுடியாது.

அத்துடன் எந்தப் பொது விடயங்களுக்கும், மக்கள் எதிர்நோக்கும் சர்ச்சைமிகு பிரச்சினைகளுக்கும் சமூக வலைத்தளங்களில் கருத்துக் கூறும் தமிழ் அரசியல்வாதிகளையும் பார்க்க முடியாது. அதேபோல சொந்தப் பெயரில் அவர்களின் கணக்கில் இருக்கும் சமூக வலைத்தளங்களில் பதிவேற்றப்படும் விமர்சனங்களுக்குக்கூட பதிலளிப்பவர்களாக நம் அரசியல்வாதிகள் இல்லை.

தேர்தலில் வாக்களிக்கும் தொகுதியினர் அதிகளவில் சமூக வலைத்தளங்களைப்பாவிப்பதில்லை, எனவே, அதில் இயங்குவது தேவையற்றவிடயம் என்றுஅரசியல்வாதிகள் கருதிவிடுகின்றனர். இந்தக் கணிப்பு நிகழ்காலத்துக்கு சரியானதுதான். ஆனால், விரைவாக தொழில்நுட்பமயப்பட்டுவரும் எதிர்காலத்திற்குப் பொருத்தமானதா? இன்னும் எவ்வளவு காலத்திற்கு மேடைப் பேச்சுக்களும், பத்திரிகை அறிக்கைகளும் பொதுசனங்களைத் திரட்டும் பரப்புரை சக்தியாக இருக்கப்போகின்றது? காலமும், உலகமும் விரைவாக மாறுகின்றது. நாம் மாற வேண்டாமா?

# குழம்பிய குட்டையாக தமிழக அரசியல் கட்சிகள்

சேரலாதன்





தமிழக அரசியல் கட்சிகள் குழம்பிய குட்டையின் நிலையில் காணப்படுகின்றன. முதலமைச்சர் ஜெயலலிதா மீதான சொத்துக்குவிப்பு வழக்கில் எதிர்வரும் 20ஆம் திகதி இறுதித் தீர்ப்பு வழங்கப்படுவதும், நடிகர் ரஜினி காந்த் தனிக் கட்சி அமைக்கப் போவதாக வெளிவந்த செய்திகளும் தமிழக அரசியலில் பரபரப்பையும், பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளன.

நடந்து முடிந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் வடமாநிலங்களைப் பொறுத்த வரையில் மோடி அலையின் எழுச்சி காணப்பட்டதால் பாரதீய ஜனதாக் கட்சி மத்தியில் ஆட்சியை அமைத்துக் கொண்டது. நரேந்திரமோடி பிரதமராக முடிசூட்டிக் கொண்டார். ஆனால் தென்மாநிலங்களைப் பொறுத்த வரையில் மோடி அலை அங்கு வீசவில்லை என்றுதான் கூறவேண்டும். அதிலும் தமிழ் நாட்டில் அந்த அலை எழவில்லை என்று கூறும் அளவுக்கு தேர்தல் முடிவுகள் அமைந்து விட்டன. ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. மொத்தமுள்ள 39 தொகுதிகளில் 37ஐக் கைப்பற்றியது. பி.ஜே.பி. தலைமையிலான கூட்டணிக்கு இரண்டு இடங்கள் கிடைத்தன. தி.மு.கவும் காங்கிரஸ் கட்சியும் போட்டியிட்ட அனைத்துத் தொகுதிகளிலும் தோல்வியைச் சந்தித்தன. பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் மருத்துவர் ராமதாஸின் புதல்வரான அன்புமணி இந்தத் தேர்தலில் வெற்றிபெற்ற போதிலும், பிரபல அரசியல்வாதியும், தமிழ் உணர்வாளருமான வைகோ தோல்வி அடைந்தமை உலகின் பல்வேறு நாடுகளிலும் வாழும் தமிழர்களுக்கு ஏமாற்றத்தையும், கவலையையும் அளித்தது. அதிலும் கலைஞர் கருணாநிதியின் தலைமையிலான தி.மு.க. படுதோல்வியைச் சந்தித்ததை அந்தக் கட்சியின் தொண்டர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. வழக்கமாக திராவிடக் கட்சிகளுடன் கூட்டணி அமைத்துக் கொள்ளும் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியை எவருமே ஏறெடுத்துக் கூடப் பார்க்கவில்லை. இதனால் வேறு வழியின்றி தனித்துப் போட்டியிட்ட அந்தக் கட்சி வரலாறு காணாத படுதோல்வியை எதிர்கொண்டது. காங்கிரஸ் கட்சி இனிமேல் தமிழ்நாட்டில் தலையெடுப்பதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கப் போவதில்லை என்பதை தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டிவிட்டன.

தமது தள்ளாத வயதிலும் கட்சிப் பொறுப்புக்களைச் சுமக்க வேண்டிய அவல நிலையில் கலைஞர் காணப்படுகின்றார். அவரது புதல்வர்களான ஸ்டாலின், அழகிரி ஆகியோரின் முறுகல்நிலை அவரைப் பெரிதும் பாதித்து விட்டது. நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்பட்ட தோல்விக்கும் இதுவே காரணமாக அமைந்து விட்டது. மேலும் ஊழல் வழக்கொன்றில் கலைஞரின் மகளான கனிமொழியும், மனைவி தயாளு அம்மாளும் குற்றம் சாட்டப்பட்டமை அந்தக் குடும்பத்துக்கு மாறாக களங்கத்தை ஏற்படுத்தி விட்டது.

தற்போது கலைஞரின் பேரன் முறையானவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான தயாநிதிமாறனும் வழக்கு ஒன்றில் சிக்கியுள்ளதால் நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது. நாடாளுமன்றத் தேர்தலில் படுதோல்வி ஏற்பட்ட பின்னரும் அண்ணன் தம்பியான அழகிரியும், ஸ்டாலினும் தொடர்ந்து முரண்பட்டுக் கொண்டிருப்பதால் கலைஞர் ஏது செய்வதென அறியாது விழிபிதுங்கி நிற்கின்றார்.

இந்த நிலையில் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கு மீதான இறுதித் தீர்ப்பு எதிர்வரும் 20ஆம் திகதி வழங்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பால் அ.தி.மு.க. வட்டாரமே கலங்கி நிற்பதைக் காண முடிகின்றது. முன்பும் ஒரு தடவை நீதிமன்றம் ஜெயலலிதாவைக் குற்றவாளியாகக் கண்டதால் அவர் பதவி விலக வேண்டியதொரு நிலை ஏற்பட்டது. அந்த வேளையில் ஜெயலலிதா தமது நம்பிக்கைக்கு உரியவரான ஓ.பன்னீர்ச்செல்வத்தை முதலமைச்சராக்கி விட்டு தாம் பின்னால் நின்று ஆட்சியை நடத்தினார். தற்போதும் அவ்வாறானதொரு நிலைமை ஏற்படலாமென அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் 2016ஆம் ஆண்டு சட்ட சபைத் தேர்தல்கள் இடம்பெறவுள்ள நிலையில் ஜெயலலிதா குற்றவாளியென அறிவிக்கப்பட்டால் பல எதிர்விளைவுகளை அந்தக் கட்சி எதிர்கொள்ள நேரிடும்.



இந்திய மத்திய அரசில் பாரதீய ஜனதாக்கட்சி அறுதிப் பெரும்பான்மைப் பலம் பெற்றுள்ளதால் எந்தக் கட்சியுடனும் கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைக்க வேண்டிய தேவை மோடிக்கு எழவில்லை. மேலும் மத்தியில் கூட்டணி அரசு அமையுமாயின் தமது நாடாளுமன்ற உறுப்பினர்களின் பலத்தை அடிப்படையாக வைத்துப் பேரம்பேசி பிரதமர் ஆகலாம் என்ற கனவுடன் இருந்த ஜெயலலிதாவுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான தம்பித்துரை துணை சபாநாயகர் ஆகியதுடன் ஜெயலலிதா திருப்திகொள்ள வேண்டியது தான். இந்த நிலையில் வழக்குத் தீர்ப்புத் தொடர்பான அறிவித்தல் அவருக்குக் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் 2016ஆம் ஆண்டு இடம்பெறும் சட்ட சபைத் தேர்தலைக் குறியாகக் கொண்டு நடிகர் ரஜினி காந்த் தனிக்கட்சியொன்றை ஆரம்பிக்கவுள்ள தாகப் பரபரப்புத் தகவல்கள் வெளியாகி யுள்ளன. பிரதமர் நரேந்திர மோடிக்கும் ரஜினிக்குமிடையே உள்ள நெருக்கம் அனைவரும் அறிந்ததே. நாடாளுமன்றத் தேர்தலின்போது மோடி தமிழ் நாட்டுக்கு வந்திருந்த போது ரஜினியின் வீட்டுக்கு நேரில் சென்றிருந்தார். ஆனால் ரஜினி தேர்தலின்போது எவருக்கும் தனது ஆதரவை வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை. இந்த நிலையில் பாரதீய ஜனதாக் கட்சி ரஜினியால்தான் தமிழ்நாட்டு அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்த முடியுமென்பதாக உணர்ந்து கொண்டதால் அவருக்குத் தொடர்ந்து வலைவீசிக்கொண்டிருந்தது. இறுதியாக பா.ஜ.கவுடனான தொடர்பைத் துண்டிக்காத வகையில் ரஜினி தமக்கெனத் தனிக் கட்சியொன்றை ஆரம்பிக்கத் திட்டமிடுவதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

பிறப்பில் தமிழரல்லாத ரஜினி ஒரு கன்னடர்ஆவார். ஆனால் தமிழ் நாட்டில் அவருக்கென ஒரு ரசிகர் பட்டாளம் உள்ளது. முன்பு மலையாளியான நடிகர் எம்.ஜி.ஆரும் தமிழ் நாட்டின் முதலமைச்சராக சுமார் 10 ஆண்டுகள் பதவி வகித்துள்ளார். ஆனால் ஒரு தமிழ் நடிகர் கர்நாடகாவிலோ, கேரளாவிலோ அல்லது ஆந்திராவிலோ அரசியல் செய்து உயர்ந்த இடத்தை ஒருபோதுமே அடைந்துவிட முடியாது. ஆனால் தமிழ்நாட்டில் ஏமாளிகள் இருக்கும் வரை எவரும் வந்து தலைவராகிவிட முடியுமொன்றதொரு நிலை காணப்படுகின்றது.

மேலும் ரஜினி பா.ஜ.கவுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிடுவார் என்பதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. இதேவேளை - ரஜினியின் அரசியல் பிரவேசம் தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. கட்சிகளுக்கு உவப்பாக இருக்கப் போவதில்லையென்பதும் தெரிந்த ஒன்றுதான். இதுவரை நடிகர் என்ற வகையில் ரஜினியைத் தூக்கிக் கொண்டாடியவர்கள் இனிமேல் அவரையொரு அரசியல்வாதி என்ற வகையில் அவரது இனத்தைச் சுட்டிக்காட்டிப் பழிக்கப் போகின்றார்கள். ரஜினியின் ரசிகர்கள் தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு கட்சிகளிலும் அங்கம் வகிப்பதால் கட்சிகளுக்குள்ளேயே பிளவுகளும் முரண்பாடுகளும் தோன்றப் போகின்றன.





ஆகவே, 2016இல் இடம்பெறப்போகும் சட்டமன்றத் தேர்தல்களுக்கு முன்னரே குழம்பிய குட்டையாக தமிழக அரசியல் மாறிவிட்டது. இதில் பயனடையப்போவது யார் என்பதை இப்போதே யூகித்துக் கூறுவது சற்றும் கடினமாகத்தான் உள்ளது.

# ராஜீவ் காந்தி கொலை ஓர் ஒப்பந்தக் கொலை

## டெல்லியில் இருந்து புதியதொரு தகவல்

**24** ஆண்டுகளான பிறகும் இன்னும் விலகாத மர்மக் கதையாகத் தொடர்கிறது ராஜீவ் காந்தியின் கொலைச் சம்பவம்! குற்றம்சாட்டப்பட்டு தண்டனை பெற்றவர்களும் இந்தக் குற்றத்தை விசாரித்தவர்களும் இப்போது அளித்துவரும் வாக்குமூலங்கள் மூல வழக்கையே மொத்தமாக மாற்றிவிடக் கூடியவை. ராஜீவ் கொலை வழக்கை சி.பி.ஐ சிறப்பு நீதிமன்றம் விசாரித்து வழங்கிய மரண தண்டனை தீர்ப்பு, இப்போது உச்ச நீதிமன்றத்தின் அரசியல் சாசன பெஞ்ச் முன்பாக இருக்கிறது. கொலைச் சதி சம்பந்தமாக விசாரிக்க அமைக்கப்பட்ட பல்நோக்கு ஆணையம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தன்னுடைய விசாரணைக்கான காலகட்டத்தை நீடித்துக்கொண்டே போகிறது. ஜெயின் கமிஷன் குற்றஞ்சாட்டிய நபர்கள் இன்னமும் விசாரணையே செய்யப்படவில்லை. இந்த நிலையில் ராஜீவ் கொலைச் சம்பவம் பற்றி எத்தனையோ புத்தகங்கள் வந்துவிட்டன. அவை கிளப்பும் சந்தேகங்கள் மலையளவு உள்ளன. அதற்குத்தான் பதில் சொல்வார் யாரும் இல்லை!

**எழுதியவர் ஒரு பத்திரிகையாளர்!**

இதோ டெல்லியில் இருந்து புதிய குரல். எழுப்பி இருப்பவர் ஃபெராஸ் அஹ்மத் என்ற மூத்த பத்திரிகையாளர். அவர் எழுதியுள்ள புத்தகத்தின் பெயர், 'ராஜீவ் காந்தி படுகொலை ஒரு உள்வேலையா?

இந்தப் புத்தகத்தை முன்னாள் அவுட்-லுக் ஆசிரியர் வினோத் மேத்தா வெளியிட்டார். முன்னாள் பி.ஜே.பி தலைவர் கோவிந்தாச்சாரியா, முன்னாள் சி.பி.ஐ அதிகாரிகள் அமோத் கான், ஜனதா தளம் கட்சியின் பொதுச் செயலாளர் எஸ்.சி.தியாகி ஆகியோர் இந்தப் புத்தக வெளியீட்டு விழாவில் பங்கெடுத்தது அவர்களுக்கும் அந்தப் புத்தகத்துக்கும் உள்ள தொடர்பைக் காட்டின. ஒரு நிருபராக இருந்தவர் இப்படியொரு புத்தகம் எழுதியிருப்பது நல்ல முன்னுதாரணம் என்று பாராட்டினார்கள்.

"ராஜீவ் காந்தி கொலை ஓர் ஒப்பந்தக் கொலை. அரசியல் ஆதாயத்துக்காக நடந்தது. இந்தக் கொலை செய்தவர்களுக்கு இது உண்மையான நோக்கம் இல்லை. ராஜீவ் கொலை செய்யப்படுவதன் மூலமாக ஆதாயம் அடைந்தவர்கள்தான் இந்தக் கொலையைத் தூண்டியவர்கள்" என்று வாதங்களை வைக்கிறது இந்தப் புத்தகம்.

**கொலை செய்யத் தூண்டியது யார்?**

இந்தக் கொலைக்கான சதித் திட்டம் தீட்டியது விடுதலைப் புலிகள் அமைப்பும் அதன் தலைவர் பிரபாகரன் என்றும் சி.பி.ஐ குற்றஞ் சுமத்தியது. "இந்தக் கொலை பிரபாகரனுக்குத் தெரிந்தும் இருக்கலாம் அல்லது அவருக்குத் தெரியாமலேயேகூட நடந்திருக்கலாம். ஆனால் இந்தக் கொலையினால் விடுதலைப் புலிகள் பயன் அடையவில்லை. அவர்கள் ராஜீவ் காந்தியை ஒரு பொருட்டாகக்கூட கருதவில்லை. இந்தக் கொலைக்கான பின்னணிகள் வேறு..." என்கிற சந்தேகத்தை வைக்கும் ஃபெராஸ், "ராஜீவ் கொலையினால் பயன் அடைந்தவர்கள் அப்போதைய இலங்கை அதிபர் பிரேமதாசா, இந்தியாவில் பிரதமராகப் பதவிஏற்க வந்த நரசிம்ம ராவ் போன்றவர்களில் யாராவது ஒருவருக்கு பின்னணியில் இருப்பவர்கள்தான்" என்று அதிரடியாக ஒரு புதிய கோணத்தை காட்டுகிறார் ஃபெராஸ் அஹ்மத்.

**"இது என்னுடைய கற்பனை அல்ல!"**

ஃபெரோஸ் அஹ்மத் இந்த மாதிரியான முடிவுக்கு எப்படி வந்தார் என்பதை அறிய அவரை டெல்லியில் சந்தித்தோம். "இது என்னுடைய கற்பனை அல்ல. பல்வேறு தரவுகளின் அடிப்படையில் நான் இந்த முடிவுக்கு வந்துள்ளேன். ராஜீவ் காந்தி கொலையின் பின்னணிப் பாதுகாப்பை விசாரித்த ஜெயின் கமிஷன் மற்றும் வர்மா கமிஷன் என்ன கூறியது என்பதை முதலில் பார்த்தேன். இவற்றோடு இந்தக் கொலை குறித்து சி.பி.ஐ இயக்குநர் கார்த்திகேயன், ராஜீவ் கொலை வழக்கின் தலைமை புலனாய்வு அதிகாரி ரகோத்தமன், சி.பி.ஐ அதிகாரி வினோத் குமார் ராஜு, அப்போது சட்ட அமைச்சராக இருந்த சுப்பிரமணிய சுவாமி, முன்னாள் தமிழக டி.ஜி.பி மோகன்தாஸ், பத்திரிகையாளர் மனோஜ் மிட்டல் என்று பலர் இது பற்றி சொன்னவற்றை தொகுத்தேன். இப்படி எழுதியவர்கள் எல்லாம் முக்கியப் பொறுப்புகளில் இருந்தவர்கள். இதன் அடிப்படையில் இந்த முடிவுக்கு வந்துள்ளேன்."

**"பிரபாகரனுக்கு ராஜீவ் பற்றிப் பயம் இல்லை!"**

"1989 ஆம் ஆண்டு தேர்தலில் வி.பி.சிங்கிடம் தோல்வியுற்ற ராஜீவ் காந்தியும் காங்கிரஸ் கட்சியும் ஒருபோதும் மீண்டும் ஆட்சிக்கு வரும் சூழ்நிலையில் இல்லை. ராஜீவ் கொலை செய்யப்பட்ட பின்னர்தான் அனுதாப அலை ஏற்பட்டது. அப்படியும் காங்கிரஸால் 240 இடங்களில்தான் வெற்றிபெற முடிந்தது. மற்ற கட்சிகளின் ஆதரவுடன் நரசிம்மராவ் தலைமையில் காங்கிரஸ் ஆட்சி அமைந்தது. இதனால் அவர் கொலை செய்யப்படவில்லை என்றாலும் அவரால் ஆட்சிக்கு நிச்சயமாக வந்திருக்க முடியாது. இந்தக் கொலை வழக்கை விசாரித்த சி.பி.ஐ கொலைக்கான காரணமாக வைத்தது. 'ராஜீவ் காந்தி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தன்னையும் தன்னுடைய இயக்கத்தையும் அவர் அழித்துவிடுவார் என்று பிரபாகரன் பயந்தார். இதனால்தான் அவர் கொலை செய்யப்பட்டார் என்பதுதான்.

ஆனால் இது எவ்வளவு மடத்தனமானது என்பதை அறியலாம். ராஜீவ் காந்தி ஆட்சிக்கு வரக்கூடிய சூழ்நிலையும் இல்லை. அப்படியே வந்தாலும் படைகளை இலங்கைக்கு அவரால் அனுப்பவும் முடியாது. முன்பு அவர் அமைதிப் படையை இலங்கை அதிபர் முன்னாள் ஜெயவர்த்தனா உடனான உடன்பாட்டின் அடிப்படையில் அனுப்பினார். பின்னர் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு பிரேமதாசா தலைமையிலான ஆட்சி நடந்து கொண்டு இருந்தது. ராஜீவ் காந்தி பதவியில் இருந்தவரை படைகளை திரும்பப் பெறுவதில் விரும்பம் இல்லாமல் இருந்தார். ஆனால், இலங்கையில் ஜனாதிபதியாக வந்த பிரேமதாசாவுக்கு இந்தியப் படைகள் இலங்கையில் இருப்பதில் விருப்பம் இல்லை. படைகளைத் திரும்ப அனுப்புவதில் மும்முரமாக இருந்தார். இதனால் ராஜீவ் பதவி விலகும்முன்பு 1989 செப்ரெம்பர் மாதம் பிரமேதாசாவுடன் மற்றொரு ஒப்பந்தம் போட்டு படைகளை திரும்பப் பெற்றுக்கொண்டார். அதே வருடம் டிசெம்பர் மாதம் ராஜீவ் காந்தி அதிகாரத்தையும் இழந்தார். 1990ஆம் ஆண்டு தி.மு.க ஆதரவுபெற்ற வி.பி.சிங் ஆட்சிக்கு வந்து இந்தியபடைகளும்திரும்பி வந்தன. இறையாண்மை பெற்ற இலங்கை போன்ற நாடுகளுக்கு. நாம் நினைத்தமட்டில் படைகளை அனுப்ப முடியாது. இதனால் பிரபாகரனுக்கோ, அவரது அமைப்புக்கோ ராஜீவ் காந்தி மீது பயமோ அச்சமோ கிடையாது. புலிகளுக்கு அவரது கொலை தொடர்பில் சம்பந்தமே இல்லை. இந்தக் கொலையில் விடுதலைப் புலிகள் உறுதியாக ஈடுபடவே இல்லை என்று நான் சவால் விடவும் இல்லை. இந்த விவ காரங்களை அலசி ஆராய்ந்து பார்த்தால் வழக்கை விசாரித்தவர்கள் சொல்லும் கூற்றுக்கு அர்த்தமில்லை என்பது என் கருத்து."


**சிவராசன் ஏன் தப்பிக்கவில்லை?**

"1990ஆம் ஆண்டு ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் பத்மநாபா மற்றும் அவரைச் சேர்ந்தவர்கள் சென்னையில் கொல்லப்பட்டார்கள். அதில் விடுதலைப்புலிகள் ஈடுபட்டு இருப்பது தெரிய வந்தது. இந்தக் குழுவில் சிவராசன் இருந்தமை பற்றியும் சொல்லப்பட்டது. அந்த சமயத்தில் இவர்கள் எல்லோரும் சென்னையில் இருந்து யாழ்ப்பாணத்துக்குத் தப்பிச் சென்றனர். ராஜீவ் கொலையில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டு இருந்தால் அடுத்த நிமிடமே இங்கிருந்து தப்பியிருப்பார்கள். ஏன் போகவில்லை? 1991 மே 21ஆம் திகதி மனித வெடிகுண்டு மூலம் ராஜீவ் கொலை நடந்தது. கிட்டத்தட்ட ஜீன் 23ஆம் திகதி வரை சிவராசன் சென்னையில் தான் இருந்தார். சம்பவம் நடந்த ஸ்ரீபெரும்புதூருக்கும் கடற்கரைக்கும் மிகப்பெரிய தூரம் கிடையாது. புலிகள் சாலையில் பறப்பதைவிட படகில் பறப்பதில் மிகவும் கெட்டிக்காரர்கள். ஆனால் அவர் அப்படி போகவில்லை. ஸ்ரீபெரும்புதூரிலிருந்து ஒட்டோவில்தான் சென்னைக்கு எல்லோரும் ஒன்றாகத் திரும்பிவந்துள்ளனர் இந்த அமெச்சூர் சதிக்காரர்கள். மறுநாள் இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட நளினியை சிவராசன் அவரது அலுவலகத்துக்கு மோட்டார் சைக்கிளில் கொண்டுபோய் விட்டுள்ளார். இடையில் சுபா, நளினி, பத்மா ஆகியோருடன் சிவராசன் திருப்பதிக்கும் சென்று வந்துள்ளார். இவர்கள் என்ன பக்திப் புலிகளா? 24ஆம் திகதி செய்தித்தாளில் மனித வெடிகுண்டு தாணுவின் புகைப்படம் வெளி வந்துவிடுகிறது. அது தடயவியல் வல்லுநர் சந்திரசேகர் லீக்-அவுட் செய்ததால் வந்தது. அதன் பிறகு சிவராசன் சாலை மார்க்கமாக டெல்லி செல்ல திட்டமிட்டிருந்தார். அவர் யாழ்ப்பாணம் தானே சென்றிருக்க வேண்டும். எதற்காக டெல்லி செல்ல நினைத்தார்? ராஜீவ் காந்தியை கொலை செய்வதற்கு ஒருநாள் முன்பு சிவராசன், ராஜீவ் கொலைவழக்கில் குற்றம்சாட்டப்பட்டு இருந்த கனகசபாபதி என்பவரை டெல்லிக்கு அனுப்பி வாடகை வீடு பார்க்கச் சொல்லியிருந்தார். மற்றொரு குற்றவாளியான ஆதிரையையும் டெல்லிக்கு அழைத்துச் செல்ல திட்டமிட்டார். இவர்கள் எதற்காக டெல்லி சென்றனர்? அப்போது இருந்த பிரதமரைக் கொல்லவா? அல்லது செங்கோட்டை யைத் தகர்க்கவா? இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்கக் காரணம் இந்த விவகாரத்தில் புலிகளின் தொடர்புகள் சந்தேகத்துக்குரியவை என்பதை விளக்கத்தான்!"

தணு யார், பிரபாகரனுக்குத் தெரியுமா... இதனால் லாபம் அடைந்தவர்கள் யார்... சிவராசனை வேறு யார் பயன்படுத்திக் கொண்டது?


(மீதி அடுத்த வியாழன் வெளியாகும்)

நன்றி - விகடன்






ஃபெராஸ் அஹ்மத்





# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: விரோதங்களையும் பிரச்சினைகளையும் சந்திக்க வேண்டி வரலாம். உங்கள் மனோதிடத்தைக் குலைக்கும் அளவுக்கு இப்போது உங்கள் எதிரிகள் பலமாகத் தலைதூக்குவார்கள். அவர்களால் உங்கள் தொழிலுக்கும் சில சோதனைகள் ஏற்படலாம்.



**இடபம்**: உங்களுக்கு நற்பலன்கள் நிகழ வாய்ப்புண்டு. எதிர்ப்படும் கஷ்ட நஷ்டங்களிலிருந்து விடுபட்டு சாமர்த்தியமாய் நஷ்டங்களையும் இழப்புகளையும் தவிர்த்திடுவீர்கள். மகன் மகளால் பெருமையும் கீர்த்தியும் ஏற்படும். மனம் நிம்மதியடையும்.



**மிதுனம்**: மன இறுக்கம் நீங்கி புதிய தெம்புடன் செயற்படுவீர்கள். நீண்டநாள் நோயால் அவதியுற்று மருத்துவமனையில் இருந்தவர்கள் குணமடைந்து வீடு திரும்புவர். குடும்பத்தில் இதுவரை இருந்துவந்த மனக்கசப்புகள் மாறும்.



**கடகம்**: பகைவர்களின் தொல்லை குறையும். நீதிமன்றத்தில் இதுவரை அலைக்கழித்த வழக்குகள் முடிவடையும். உங்கள் சொத்துக்கள் மீண்டும் உங்கள் கைக்கு வந்து சேரும். பணம் கையில் சரளமாகப் புரளும்.



**சிங்கப்**): சிலர் தங்கள் வசிப்பிடங்களை மாற்றுவர். பயணங்களின்ே.ாது கவனமாக இருக்கவேண்டியது அவசியம். சட்ட விரோதமான காரியங்களில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. இல்லையென்றால் வம்பு வழக்குகளில் சிக்கிக்கொள்ள நேரும்.



**கன்னி**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளால், பிரச்சினைகளை சந்திப்பார்கள். யாரிடமும் கையூட்டுப் பெறுவதை தவிர்க்கவேண்டும். வெளிநாட்டுப் பயணம், வெளிநாட்டு வேலை வாய்ப்புக் கிடைக்கும்.



**துலாம்**: யாருக்கும் பிணை கையெழுத்துப் போட வேண்டாம். எந்த விடயமாக இருந்தாலும் முடிவெடுக்க முடியாமல் கஷ்டப்படுவீர்கள். மறைந்திருக்கும் எதிரிகளால் தொல்லை ஏற்பட்டாலும் அவர்களால் பெரிய பாதிப்புகளை ஏற்படுத்திவிட முடியாது.



**விருச்சிகம்**: கடுமையாக உழைத்தால் மட்டுமே வெற்றிகளை குவிக்க முடியும். குடும்பத்தில் பிரச்சினைகள் வெறுப்புக்கு ஆளாக நேரும். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டவும்.



**தனுசு**: எதிரிகளின் திட்டம் உங்களை வேதனைக்குள்ளாக்கும். அலுவலக வேலையில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் தொல்லை இருக்கும். உங்களிடம் குறை கண்டுபிடித்து உங்களுக்கு தண்டனை தருவார்கள். வேண்டாத இடமாற்றம் வரும்.



**மகரம்**: யாருக்காவது பிணை கையெழுத்துப்போட்டு அந்தப் பணத்தை நீங்கள் கட்டச் சொல்லி தீர்ப்பு வரும். பூர்வீகச் சொத்தில் இழுபறி தொடரும். கண்முன்னே தலைவிரித்தாடும் செலவுகளை சமாளிக்க வருமானத்தை தேடி ஓட வேண்டியிருக்கும்.



**கும்பம்**: குடும்பத்தாருடன் வாக்குவாதங்களில் ஈடுபடவேண்டாம். குடும்பத்தாரின் வெறுப்புக்கு ஆளாக வேண்டியிருக்கும். செல்வாக்கும், அந்தஸ்தும் பாதிக்கப்படும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் போகும். மனதில் விரக்தி மேலோங்கும்.



**மீனம்**: எதிரிகளின் திட்டம் உங்களை வேதனைக்குள்ளாக்கும். அலுவலக வேலையில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் தொல்லை இருக்கும். உங்களிடம் குறை கண்டுபிடித்து உங்களுக்கு தண்டனை தருவார்கள். வேண்டாத இடமாற்றம் வரும்.

## நாளை

**ஆவணி-20 வெள்ளிக்கிழமை | 05.09.2014**

திதி: ஏகாதசி மா.05.49 வரை
நட்சத்திரம்: பூராடம் மு.ப.11.36 வரை
சுபநேரம்: 06.05-07.35 வரை
இராகுகாலம்: 10.35-12.05 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## இந்துக்களிடம் திகழ்கின்ற நன்மை

பிறசமயங்களைப்பின்பற்றுபவர்கள் அவரிடம் கருத்து வேற்றுமைகளைக் கொண்டாலும் 'இந்துக்களிடம் திகழ்கின்ற நன்மையைக்' காணும் பொருட்டு மேலை நாட்டினரின் கண்களைத் திறந்து வைத்த அவரது சீரிய நற்பணியை யாராலும் மறுக்க முடியாது. சமயங்களிடையே அமைதி எழுப்பும் என்று தாம் கருதுகின்ற உபதேசத்தைப் பரப்புவதற்காக முதன் முதலாகத் துணிச்சலுடன் கடல் கடந்து சென்ற இந்துத்துறவி அவர் என்று எப்போதும் நினைத்துபோற்றப்படுவார். மேற்றிசையில் அவர் ஆற்றியபணியின்வெற்றிச்செய்தியை அவரிடமிருந்தே அறிவதற்காக எங்களுடைய பத்திரிகை நிருபர் அவரைப் பேட்டிகண்டார். சுவாமிஜி எங்கள் நிருபரை மிகவும் மரியாதையுடன் வரவேற்று, தமது அருகிலிருந்த நாற்காலியில் அமரச் செய்தார். அவர் காவியுடை அணிந்திருந்தார். முகத்தில் அமைதி நிலவ, பெருந்தன்மையோடு திகழ்ந்தார். அவரைக் கேட்ட எந்தக் கேள்விக்கும் விடையளிக்கத் தயாராகவே காட்சியளித்தார். எங்கள் நிருபர் சுருக்கெழுத்தில் பதிவு செய்ததை இங்கு அப்படியே தருகிறோம்.

"சுவாமிஜி, தங்கள் இளமைக் காலத்தைப் பற்றிச் சிறிது கூற முடியுமா?"

"நான் கெல்கத்தாவில் மாணவனாயிருக்கும் போதே சமய உணர்ச்சி உள்ளவனாகவும் எதையும் துருவி ஆராயும் இயல்புள்ளவனாகவும் இருந்தேன். வெற்றுப் பேச்சுகள் எனக்கு ஆறுதல் அளிப்பதில்லை. பிறகு நான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரைச் சந்தித்து, அவருடன் நெடு நாள்கள் வாழ்ந்து பல விடயங்களை அறிந்தேன். என் தந்தை இறந்த பிறகு ஊர் ஊராகத் திரிவதில் காலம் கழித்தேன். கெல்கத்தாவில் ஒரு சிறிய மடம் என்னால் நிறுவப் பட்டது. பயணம் செய்து கொண்டிருக்கும்போது நான் சென்னைக்கு வர நேர்ந்தது. மைசூர் மன்னரும் ராமநாதபுரத்து அரசரும் எனக்கு உதவி புரிந்தனர்."

"மேலை நாடுகளுக்குச் சென்று இந்து சமயப் பணியை ஆற்ற உங்களை ஊக்கியது எது?"

# பலவீனமான திசுக்களை கண்டறிய புதிய முறை

முன்னர் ஏற்பட்ட காயங்களினால் பல வீனமான நிலையை அடைந்துள்ள உடல் இழையங்களைக் கண்டறிவதற்கு புதிய படிமுறை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இப்படிமுறையை வொசிங்டன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் கள் கண்டுபிடித்துள்ளனர்.

Direct Deformation Estimation (DDE) என்று அழைக்கப்படும் இந்த முறையானது முன்னர் காணப்பட்ட முறையிலும் 1000 மடங்கு துல்லியம் வாய்ந்து இருப்பதாக அவர் கள் குறிப்பிட்டுள்ளனர். இதில் பிளாஸ்டிக் நார் ஒன்றினை இழுப்பதன் மூலம் பலவீனமான பகுதிகளில் நீர்த்தன்மையான பதார்த்தம் வடிய ஆரம் பிப்பதைக் கொண்டு பல வீனமான இழையங்கள் கண்டறியப் படுகின்றது.

## மரண அறிவித்தல்

**திருமதி சாந்தி சறோஜினி பொன்னம்பலம்**

(முன்னாள் உத்தியோகத்தர் ஸ்ரீலங்கா ரெலிகொம்)



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணை, ஓட்டுமடம் மற்றும் வவுனியாவை வதிவிடமாகவும், தற்போது கனடா ஸ்காபரோ (SCARBOROUGH) வை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சாந்தி சறோஜினி பொன்னம்பலம் 01.09.2014 திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா-ஞானம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான காராளசிங்கம்-தில்லைவனம் தம்பதியரின் அன்பு மருமகளும், காராளசிங்கம் பொன்னம்பலத்தின் (Post master ஓய்வுநிலை) அன்பு மனைவியும், சாந்தகுமார்(கொழும்பு), வசந்தி(சுவிற்சர்லாந்து), ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சர்மிளா(லண்டன்), அனுஜா(லண்டன்), நோயல் றொஷான்(கனடா), பிரசாந்(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நிறுஞ்சன்(லண்டன்) அன்ரனி கைலன்(லண்டன்), ஜெபதர்ஷிக்கா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், டானியேல், ஷரியளா, அன்றியன், அஷ்பியன், அபிஷேக், ஜெமுவல் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (04.09.2014) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
கா.பொன்னம்பலம்(கணவர்)

(81834)(5.3.6)

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 4 | 6 | 2 | 8 | 1 | 5 | 3 | 7 |
| 5 | 2 | 1 | 3 | 6 | 7 | 8 | 9 | 4 |
| 7 | 8 | 3 | 5 | 9 | 4 | 1 | 2 | 6 |
| 8 | 3 | 2 | 6 | 7 | 9 | 4 | 1 | 5 |
| 4 | 6 | 7 | 1 | 5 | 3 | 2 | 8 | 9 |
| 1 | 9 | 5 | 8 | 4 | 2 | 6 | 7 | 3 |
| 3 | 5 | 4 | 7 | 2 | 8 | 9 | 6 | 1 |
| 6 | 1 | 8 | 9 | 3 | 5 | 7 | 4 | 2 |
| 2 | 7 | 9 | 4 | 1 | 6 | 3 | 5 | 8 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | 8 | | | | 6 | | 5 |
| 9 | | | 7 | 5 | | 8 | | |
| | 5 | | 9 | | | 1 | | 7 |
| 5 | | | | 3 | 7 | | | 8 |
| | 2 | | | 9 | | | 1 | |
| 4 | | | 8 | 2 | | | | 6 |
| 2 | | 5 | | | 3 | | 8 | |
| | | 7 | | 4 | 8 | | | 3 |
| 3 | | 4 | | | | 2 | 7 | |

# ஞானமுருகனை வீழ்த்தி இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது ஊரெழு றோயல் வி.கழகம்



கரணவாய்,செப்.4

வெள்ளையின் அனுபவ ஆட்டம் கைகொடுக்க மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது ஊரெழு றோயல் விளை யாட்டுக் கழகம்.

தும்பளை கருணையுள்ளம் பலாலி விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் வல்வை றெஜின்போ விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் நேற்று முன்தினம் இடம் பெற்ற சிறந்த அணியைத் தெரிவு செய்வதற்கான இரண்டாவது தகு திகாண் சுற்றில் மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழகமும், ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகமும் மோதின.

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் இவ்விரு அணி வீரர்களும் சம பலத்துடன் களமிறங்கினர். இரு அணிகளிலும் பல இளம் வீரர்கள் காணப்பட்ட போதும் ஊரெழு றோயல் அணியில் களம் பல கண்ட அனுபவ மூத்த வீரர் வெள்ளை விளையாடியது அந்த அணிக்கு சற்றுப் பலமாகவும் சாதகமாகவும் அமைந்திருந்தது.

இந்தச் சூழ்நிலையில் களமிறங்கிய இரு அணி வீரர்களினதும் கால்க ளுக்குள் அகப்பட்ட பந்து, அங்குமிங் கும் என அல்லாடியது. நேரம் செல் லச் செல்ல ஆட்டமும் மெல்ல மெல்ல சூடேறியது. இதற்குள் ஆட்டத்தின் 6 ஆவது நிமிடத்தில் வெள்ளையின் கால்களுக்குள் பந்து அகப்பட்டது. அதனை மிகவும் இலாவகமாகவும் நேர்த்தியாகவும் உதைத்து கோலாக் கினார்.

தொடர்ந்து ஆட்டம் விறுவிறுப் படைய வெள்ளையின் மகன் 8 ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோலைப் போட முதற்பாதி ஆட் டத்தில் மேலதிக கோல்கள் எதுவும் பெறப்படவில்லை.

இடைவேளையின் பின் இரு அணி களும் அனல் பறந்த ஆட்டத்தை விளையாடினர். மாறி மாறி கோல் பிரதேசங்களை ஆக்கிரமித்தவாறு இரு அணி வீரர்களும் இருந்தனர். இந்தச் சூழ்நிலையில் 35 ஆவது நிமிடத்தில் கானுஜன் மேலும் ஒரு கோல் போட கிட்டத்தட்ட றோயலின் வெற்றி உறுதி செய்யப்பட்டது. இருந்த போதும் ஆட்டம் நிறை வடைய 3 நிமிடங்கள் இருக்கும் போது ஞானமுருகன் அணிவீரன் ஜெகன் கடுமையான போராட்டத்தின் பின் கோல் ஒன்றைப் போட 3:1 என்ற கோல் அடிப்படையில் றோயல் அணி வெற்றி பெற்று இறுதியாட்டத் துக்கு முன்னேறியது.

இதேவேளை இந்தப் போட்டியில் தோல்வி அடைந்த ஞானமுருகன் அணி இன்று நடைபெறும் அரை யிறுதி ஆட்டத்தில் திக்கம் இளைஞர் அணியுடன் மோதவுள்ளது. (ரி-108)

## உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி



யாழ்ப்பாணம்,செப்.4

கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் எதிர்வரும் சனி, ஞாயிற் றுக்கிழமைகளில் கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளன. மேற்படி சுற்றுப் போட்டித் தொடரில் 32 அணிகள் பங்குபற்றவுள்ளன என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ரி-23)

# அபாரமாக ஆடிய அணி - டோனி



இங்கிலாந்து அணிக்கெதிரான நான்காவது ஆட்டத்தில் ஒட்டு மொத்தமாக இந்திய அணியின் செயற்பாடு அபாரமாக இருந்தது என்று அணித்தலைவர் டோனி தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்துக்கெதிரான ஒருநாள் தொடரின் முதலாவது ஆட்டத்தை மழை குறுக்கிட்டு தடுக்க, அடுத்த மூன்று ஆட்டங்களிலும் இந்தியா வெற்றி பெற்று தொடரை 3:0 என்ற ரீதியில் தன்வசப்படுத்தியுள்ளது. இங்கிலாந்து மண்ணில் ஒரு நாள் தொடரை இந்தியா கைப்பற்றுவது 24 ஆண்டுகளுக்குப் பின்னர் இதுவே முதல் முறையாகும். கடந்த 1990ஆம் ஆண்டு அஸாருதீன் தலைமையிலான இந்திய அணி 2:0 என்ற கணக்கில் ஒரு நாள் தொடரை வென்றிருந்தது. அதற்கு முன்னரும், பின்னரும் இந்தியாவால் இங்கிலாந்தில் வைத்து தொடரை வெல்ல முடியாமல் போனது. தற்போது டோனி தலைமையிலான அணி தொடரைக் கைப்பற்றி சாதித்துள்ளது.

நான்காவது ஆட்டத்தில் பெற்ற வெற்றி பற்றி அணித்தலைவர் டோனி செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது: முதலாவது ஆட்டத்திலிருந்து நாங்கள் மிகுந்த முன்னேற்றம் அடைந்துள்ளோம். வேகப்பந்து வீரர்கள் மிகவும் சிறப்பாக பந்து வீசினார்கள். அவர்கள் ஆரம்பத்திலேயே இங்கிலாந்தின் இலக்குகளைக் கைப்பற்றி அவர்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்தினர். சதம் அடித்த ரகானேவின் ஆட்டம் சிறப்பாக இருந்தது. தொடக்க வீரராக களம் இறங்கி சதம் அடித்து அசத்தியமை சிறப்பானதாகும். ஒவ்வொரு ஆட்டத்திலும் அவர்கள் மேலும் மேலும் முன்னேற்றம் அடைந்துள்ளார். ஒட்டு மொத்தமாக அணியின் செயற்பாடு அபாரமாக இருந்தது. இது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது என்று அவர் கூறினார்.

இவ்விரு அணிகளுக்குமிடையிலான கடைசி ஒருநாள் ஆட்டம் லீட்ஸ் மைதானத்தில் நாளை நடைபெறவுள்ளது. (ரி)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,செப்.4

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் நடத்தும் அணிக்கு 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங் கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இன்று வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட் டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி-23)

* * *

யாழ்ப்பாணம்,செப்.4

தும்பளை கருணையுள்ளம் விண் மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளை யாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதி யாக நடத்தும் அணிக்கு 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் றெஜின் போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இந்தத் தொடரின் அரையிறுதி யாட்டம் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. இடம் பெறும் அரையிறுதியாட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திக்கம் விளை யாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி-23,108)

# சாஸ்திரிக்கு நன்றி கூறிய தவான்.




அணியுடன் இணைந்து கொண்டதிலிருந்து அணிக் கும் எனக்கும் பல நம்பிக்கையான கருத்துக்களை வழங்கிய ரவி சாஸ்திரிக்கு நன்றி தெரிவிப்பதாக இந் திய ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் சிகார் தவான் தெரி வித்துள்ளார்.

இங்கிலாந்துடனான டெஸ்ட் தொடரில் முதல் மூன்று ஆட்டங்களிலும் இடம் பிடித்து சொதப்பிய அவர் ஒருநாள் தொட ரிலும் சொதப்பிவந்தார். ஆனால் நான்கா வது ஆட்டத்தில் அதிரடியாக ஆடிய தவான் ஆட்டமிழக்காமல் 97 ஓட்டங்களைப் பெற்று வெற்றியை உறுதி செய்தார்.

இது பற்றி அவர் கூறுகையில், அணிக்கு பல நம்பிக்கை மிகுந்த கருத்துக்களை வழங்கிய ரவி சாஸ்திரிக்கு நன்றிகளைத் தெரிவிக்கிறேன். அத்தோடு எனக்கு பக்கபலமாக நின்று ஆறுதல் அளித்த குடும்பத்தினருக்கும் நன்றிகள்.

உலகக் கோப்பைத் தொடருக்கு 6 மாதங்கள் உள்ள நிலையில் பெற்ற வெற்றி எங்களை உற்சாக மூட்டியுள்ளது. டெஸ்ட் தோல்விக்குப் பின்னர் பெற்ற வெற்றி மகிழச்சியாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ரி)

# இந்திய வீரர்களுக்கு பயிற்சியளிக்க மெக்ராத்

எம்.ஆர்.எவ். நிறுவனத்திற்கும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கும் இடையே ஐந்து ஆண்டு கால புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின்படி இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை பரிந்துரைத்து அனுப்பும் வேகப் பந்து வீச்சாளர்களுக்கு குறித்த நிறுவனத்தின் சார்பில் முன்னாள் ஆஸ்திரேலிய வேகப் பந்து வீச்சாளர் கிளன் மெக்ராத் பயிற்சி அளிக்கவுள்ளார்.

சென்னை சேத்துப்பட்டில் உள்ள எம்.சி.சி.மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் எம்.ஆர்.எவ். வேகப்பந்து வீச்சு பயிற்சி மையம் கடந்த 27 ஆண்டுகளாக செயற்பட்டு வருகிறது. முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஜவஹல் ஸ்ரீநாத் முதல் தற்போதைய இந்திய அணியில் விளயாடும் வருண் ஆரோன், ஈஸ்வர் பாண்டே உள்பட பலர் இங்கு பயிற்சி பெற்றுள்ளனர். சர்வதேச அளவில் வேகப்பந்து வீச்சில் சிறந்து விளங்கும் இந்த பயிற்சி மையத்தின் இயக்குனராக இருந்து வந்த ஆஸ்திரேலிய வேகப்பந்து ஜாம்பவான் டென்னிஸ் லில்லி விலகியதைத் தொடர்ந்து ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் மெக்ராத் இயக்குனராக பொறுப்பேற்று வீரர்களுக்கு வேகப்பந்து வீச்சு நுணுக்கங்களை கற்றுக்கொடுத்து வருகிறார்.

இந்த நிலையில் எம்.ஆர்.எவ். நிறுவனம்-இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இடையே 5 ஆண்டு கால புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டது. இதற்கான ஒப்பந்தப் பத்திரத்தை இந்திய கிரிக்கெட் வாரிய இடைக்கால தலைவர் ஷிவ்லால் யாதவ் வழங்க, அதனை எம்.ஆர்.எவ். நிறுவன தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் கே.எம்.மேமன் பெற்றுக்கொண்டார்.

இந்த ஒப்பந்தத்தின் படி இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அதிகாரப்பூர்வ விளையாட்டு போட்டிகளில் விளையாட தெரிவு செய்யப்பட்டு இருக்கும் வேகப்பந்து வீச்சாளர்கள் 'எலைட்' பிரிவிலும், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தேர்வாளர்களால் தெரிவு செய்யப்படும் இளம் வேகப்பந்து வீச்சாளர்கள் உத்தேச பிரிவிலும் பயிற்சி பெறுவார்கள். இவர்களுக்கான பயிற்சிகளை மெக்ராத் வழங்க உள்ளார்.

இந்த பயிற்சி மையத்தில் பயிற்சி எடுத்த 17 வீரர்கள் இந்திய அணிக்காக விளையாடி 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட சர்வதேச இலக்குகளை கைப்பற்றி இருக்கின்றனர் என்று எம்.ஆர்.எப். நிர்வாக இயக்குனர் அருண் மேமன் தெரிவித்தார். (ரி)



# அதிவேக மனிதனை முந்திய யுவராஜ்



விளம்பர நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த கிரிக்கெட் ஆட்டத்தில் யுவராஜ்ஜின் அணியை போல்டின் அணி வெற்றி கொள்ள, அடுத்து நடைபெற்ற ஓட்டப்பந்தயத்தில் உலகின் அதிவேக மனிதனை முந்தினார் யுவராஜ்.

தனியார் நிறுவனமொன்றின் விளம்பர நிகழ்ச்சிக்காக இந்தியாவுக்குச் சென்றுள்ள உசைன் போல்ட், நேற்று முன்தினம் பெங்களூரில் நடைபெற்ற கண்காட்சி கிரிக்கெட் போட்டியில் பங்கேற்றார். அதில் உசைன் போல்ட், யுவராஜ் சிங் ஆகியோரின்அணிகள் 4 ஓவர்களைக் கொண்ட ஆட்டத்தில் விளையாடின.

முதலில் களமிறங்கிய யுவராஜ் அணி 58 ஓட்டங்கள் எடுத்தது. பின்னர் இலக்கை விரட்டிய உசைன் போல்ட் அணியின் வெற்றிக்கு, இறுதி இரண்டு பந்துகளில் 10 ஓட்டங்கள் தேவைப்பட்டன. இதில் முதல் பந்தை சிக்சருக்கு விரட்டிய போல்ட், அடுத்த பந்தை வீணடிக்க, யுவராஜ் அணி வெற்றியை கொண்டாடத் தொடங்கியது. ஆனால் போட்டியை நடத்திய அஜய் ஜடேஜா, முறையற்ற பந்து என அறிவித்து யுவராஜ் அணிக்கு அதிர்ச்சி அளித்தார். பின்னர் அடுத்த பந்தில் 'பிரீஹிட்' வாய்ப்பில் போல்ட் சிக்சர் அடிக்க அவரது அணி வெற்றி பெற்றது. போல்ட் இந்த ஆட்டத்தில் 19 பந்துகளில் 45 ஓட்டங்களை எடுத்தார்.

தோல்விக்கு பதிலடி கொடுக்கும் வகையில், தொடர்ந்து நடைபெற்ற 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் போல்ட்டை முந்தி முதலிடம் பெற்றார் யுவராஜ். இதுகுறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் கருத்து தெரிவித்துள்ள யுவராஜ், தான் பந்தயத்தில் வெற்றி பெறுவதற்கு விட்டுக் கொடுத்த "போல்ட்" க்கு நன்றிகள் என்று கூறியுள்ளார்.

கலகலப்பான விளையாட்டுக்களின் பின்னர் உசைன் போல்ட் கூறுகையில், தடகள வீரர் என்ற முறையில் பல்வேறு சாதனைகள் வருவதையும், போவதையும் பார்த்திருக்கிறேன். ஏனெனில், சாதனைகள் என்பது எப்போதுமே முறியடிக்கக் கூடியது தான். என்னைப் போல வரவேண்டும் என்று விரும்பினால், கடுமையாக முயற்சி செய்ய வேண்டும். இதனால் எனது சாதனையை முறியடிக்க முடியாது. அமெரிக்காவின் ஜஸ்டின் காட்லின் சிறப்பான வீரராக உள்ளார். இதேபோல சக வீரர் யோகன் பிளேக் மற்றொரு அமெரிக்க வீரர் டைசன் கெய் என பலர் எனக்கு போட்டியாக உள்ளனர். இவர்களில் யாரும் என்னைத் தோற்கடிப்பதை விரும்பவில்லை. இதற்கு நானும் இடம் கொடுத்து விட மாட்டேன் என்று கூறினார். (ரி)

# தோல்விக்குக் காரணம் தேடும் குக்

இந்திய அணிகெதிரான ஒருநாள் தொடரில் விளையாடும் விதம் வேதனை அளிக்கிறது. இந்திய அணிகெதிராக அடைந்த தோல்விக்கு காரணம் என்ன என்பதே தெரியவில்லை என்று இங்கிலாந்து அணித்தலைவர் அலெஸ்டயர் குக் தெரிவித்துள்ளார்.

இந்திய அணிக்கெதிரான ஒருநாள் தொடரில் ஒரு ஆட்டம் மட்டும் எஞ்சியுள்ள நிலையில் இங்கிலாந்து அத் தொடரை இழந்துள்ளது. முதலாவது ஆட்டம் மழையால் தடைப்பட




அடுத்த மூன்று ஆட்டங்களிலும் இந்தியா வெற்றியீட்டியுள்ளது.

இந்திய அணிக்கு எதிரான நான்காவது ஆட்டத்தில் ஏற்பட்ட தோல்வி குறித்து குக் கருத்து வெளியிடுகையில், இது மிகவும் கடினமான நாள். எங்களது திற மைக்கு ஏற்ப ஆடாதது ஏமாற்றம் அளிக்கிறது. நாங்கள் முதலில் துடுப்பெடுத்தாடவே விரும்பினோம். ஆனால் துடுப்பாட்டம், பந்து வீச்சு மற்றும் களத்தடுப்பு என எல்லா வற்றிலும் இந்திய அணி எங்களை விட சிறப்பாகச்செயற்பட்டது. தொடர்ந்து மூன்று ஆட்டங்களில் தோற்பது என்பது மோசமான ஒன்றுதான். இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டங்களில் தொடர்ச்சியாக வெற்றி பெற்ற பிறகு, இப்போது ஒருநாள் தொடரில் விளையாடும் விதம் வேதனை அளிக்கிறது. தோல்விக்கு காரணம் என்ன என்பதே தெரிய வில்லை. உலகக்கிண்ணம் நெருங்கும் நேரத்தில் நாங்கள் வெற்றி வேட்கையைக் காண்பிக்க வேண்டும். எங்களிடம் திறமை இருக்கிறது. அதை மேம்படுத்த வேண்டியது அவசியம். இன்றைய நாள் எங்கள் அணி சார்பாக மொயீன் அலிக்கு மட்டுமே நன்றாக இருந்தது எனத் தெரிவித்தார். (ரி)



# காலிறுதியில் ஜோகோவிச், செரீனா

அமெரிக்க ஓபன் ரென்னிஸ்ஸில் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் விளையாட, தரவரிசையில் முதலிடத்திலுள்ள வீராங்கனை செரீனா வில்லியம்ஸ்ஸும், ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் விளையாட, தரவரிசையில் முதலிடத்திலுள்ள செர்பிய வீரர் நோவாக் ஜோகோவிச்சும் தகுதி பெற்றனர்.

மகளிர் ஒற்றையர் பிரிவுக்கான நான்காவது சுற்றில் எஸ்டோனியாவின் கயா கானெபியுடன் நேற்று மோதிய செரீனா 6- 3, 6- 3 என்ற நேர் செற்களில் எளிதாக வென்று காலிறுதிக்கு முன்னேறினார். மற்றொரு நான்காவது சுற்றுப் போட்டியில் பெலாரஸ்ஸின் விக்டோரியா அசரென்கா 4- 6, 6- 4, 6- 4 என்ற செற் கணக்கில் செர்பியாவின் அலெக்சாண்ட்ரா குருனிக்கை வீழ்த்தினார். இத்தாலி வீராங்கனை பிளாவியா பென்னட்டா 7- 5, 6- 2 என்ற நேர் செற்களில் ஆஸ்திரேலியாவின் கேஸி டெல்லாகுவாவை வீழ்த்தினார். ரஷ்யாவின் எகடரினா மகரோவா 7- 6, 6- 4 என்ற நேர் செற்களில் கனடாவின் யூஜெனி பவுச்சார்டை வீழ்த்தி காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு நான்காவது சுற்றில் தரவரிசையில் முதலிடத்திலுள்ள செர்பிய வீரர் நோவாக் ஜோகோவிச் 6- 1, 7- 5, 6- 4 என்ற நேர் செற்களில் ஜேர்மனியின் கோல்ஸ்கிரைபரை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். கனடாவின் மிலோஸ் ரயோனிக்குடன் மோதிய ஜப்பானின் கெய் நிஷிகோரி 4- 6, 7- 6, 6- 7, 7- 5, 6- 4 என 5 செற்களில் நான்கு மணி, 19 நிமிட நேர கடும் போராட்டத்தின் பின் வெற்றி பெற்றார்.

இங்கிலாந்தின் ஆன்டி முர்ரே 7- 5, 7- 5, 6- 4 என்ற நேர் செற்களில் பிரான்சின், ஜோ வில்பிரைடு சோங்காவை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். சுவிஸ் வீரர் ஸ்டானிஸ்லாஸ் வாவ்ரின்காவும் காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளார். (ரி)

## தொடர்ச்சிகள்

### வட மாகாணத்துக்கு

புகின்றேன்.

அரசியல் யாப்பில் மாகாண சபைகளுக்கென சில விடயங்களும், மத்திய அரசுக்கென சில விடயங்களும், இரண்டுக்கும் பொதுவான சில விடயங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இதன் காரணத்தினால் தான் ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் கூட்டப்படுவதை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் ஒருங்கிணைப்புக் கூட்டங்களின் ஊடாகச் சட்டத்தால் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் தனியான அதிகாரங்களை மத்திய அரசு தன் வசப்படுத்த இடமளிக்க முடியாது. அந்த அதிகாரங்கள் ஊடாக அந்தந்த விடயங்கள் சம்பந்தமாக கொள்கைகள் வகுப்பதும் அவற்றை நெறிப்படுத்தி நடைமுறைப்படுத்துவதும் மாகாண சபைகளையே சாரும் என்பதை இத் தருணத்தில் கூறி வைக்கின்றேன். எதேச்சையாக அரசும் அரச அமைச்சர்களும் நடக்கத் தலைப்பட்டால் மக்களால் புறந்தள்ளப்பட்டவர்கள் மக்களின் அமோக ஆதரவைப் பெற்றவர்களின் தோளில் ஏறிச் சவாரி செய்பவர்களாக ஆகிவிடுவர். இது ஜனநாயகத்தைப் பாதிக்கும் என்பதை நான் கூறி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. தொடர்ந்தும எம்மக்கள் எதேச்சாதிகாரத்தின் கோரப்பிடிக்குள் சிக்கித் தவிக்க வேண்டும் என்று எண்ணுவது மனிதாபிமானமற்றது மட்டுமல்லாமல் மடமையுமாகும்.

எமது மாகாண மக்கள் மற்றைய மாகாண மக்கள் போலல்லர். அவர்கள் போரின் உக்கிரத்தில் இருந்து விடுபட்டு வந்துள்ளார்கள். அவர்களின் பிரச்சினைகளும் தேவைகளும் விசேடமானதும் தனித்துவமானவையுமாகும். எல்லோருக்கும் ஒரே அளவுப் பாதணிகள் பொருந்தும் என்று நினைப்பது முறையாகாது என்பதை அன்று ஜனாதிபதிக்கு எடுத்துக் காட்டினேன். இன்றும் கூறி வைக்கின்றேன்.

5ஆயிரத்து 831 மில்லியனை வட மாகாண விருத்திக்கு நாம் ஒதுக்கியுள்ளோம் என்று கூறிவிட்டு ஆயிரத்து 876 மில்லியனை மட்டும் எமக்குத் தந்து விட்டு 3ஆயிரத்து 955 மில்லியனைத் தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டு அத்தொகையின் செலவு பற்றி எமக்குத் தெரிவிக்காமலே தமக்கேற்றவாறு செலவு செய்ய முற்பட்டுள்ளது. மக்கள் பிரதிநிதிகளின் ஏற்பைப் பெறாமல் தான்தோன்றித்தனமாக அவற்றைச் செலவு செய்ய முற்படுகின்றது. எமது மாகாண எதிர்க்கட்சித் தலைவர் யதார்த்ததுக்குப் புறம்பான முறையில் ஊடகங்களுக்குச் செய்திகளை விடுக்கின்றார். 5ஆயிரத்து 831 மில்லியனில் ஆயிரத்து 876 மில்லியனை மட்டுமே வடக்கு மாகாண சபை செலவிட்டுள்ளது. 3ஆயிரத்து 955 மில்லியனைக் கையில் வைத்துக் கொண்டு பணம் போதாது என்று கூறுகின்றார்கள் என்று அவர் கூறியதாகத் தொலைக்காட்சியில் சிங்கள மொழியில் ஒளிபரப்பியதை நான் கேட்டேன். இது உண்மைக்குப் புறம்பானது. எமக்குக் கிடைத்திருக்கும் மொத்தத் தொகையே 1876 மில்லியன் மட்டுமே. மிகுதி 3ஆயிரத்து 955 மில்லியனை அரசு வைத்திருந்து ஏப்பம் விடுகின்றது.

இவை யாவும் அரசு தமிழ்பேசும் மக்களின் ஆதங்கங்களை, அபிலாஷைகளை, ஆசைகளை, எதிர்பார்ப்புக்களை அடியோடு சாய்த்துத் தமது கரவான நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மெருகூட்ட விளைவதை எடுத்துக் காட்டுகின்றன.

சேர்ந்து செய்வோம் என்று அரசு அறைகூவல் விடுப்பதன் தாற்பரியத்தை நாங்கள் விளங்கிக் கொள்ளவேண்டும். அதாவது, நாங்கள் நினைத்ததைச் செய்வோம். உங்களுடன் கலந்தாலோசிக்காமல் செய்வோம். நீங்கள் அதற்கு ஆமாம் சொல்ல வேண்டும். அப்பொழுது தான் அது சேர்ந்து செய்வதாகும் என்பதே அரசின் கொள்கை. எம்முடன் எந்தவித கலந்தாலோசனைகளையும் நடத்தாமல் தான்தோன்றித்தனமாக அரச அலுவலர்களைத் தம் பக்கம் சார வைத்து நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. கூட்டங்களைத் தாமே கூட்டிவிட்டு கடைசி நேரத்தில் எமக்கு அழைப்பு விடுகின்றார்கள். வந்திருந்து தேநீர் அருந்திவிட்டுக் கைகொடுத்து விட்டுச் சென்றால் அதற்குச் சேர்ந்து செயற்படுவது என்ற ஒரு அர்த்தத்தை ஏற்படுத்தியுள்ளார்கள்.

எமது மக்கள் தமக்குத் தாமே எது வேண்டும் என்று சிந்திப்பதை, எடுத்தியம்புவதைத் தடுக்கவே எமது உரித்துக்களைப் பறிக்கும் விதத்தில் திவிநெகும போன்ற சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. பறிப்பதைப் பறித்துக் கொண்டு, ஒரு தலைப்பட்சமாக இயங்கிக் கொண்டு எம்முடன் வடமாகாண சபையினர் சேரந்து நடக்கின்றார்கள் இல்லை என்று ஊர் உலகத்துக்குப் பறைசாற்றினால் அதன் உள்ளர்த்தம் என்ன? மத்திய அரசு தான் நினைத்ததைச் செய்யும். மாகாணம் கைகட்டி வாய் புதைத்துப் பார்த்துக் கொண்டிருந்தால் போதும் என்பது தான் மத்திய அரசின் இணங்கிச் செயற்படுவது பற்றிய புதிய வியாக்கியானம் - என்றார்.

(த-4-55)

### பிணை

குடாநாட்டுக்குள் வரக்கூடாது என்பது-உட்பட கடுமையான நிபந்தனைகளுடன் கமல் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அவர் பிணையில் வருவதற்கு மேல் நீதிமன்று கடும் நிபந்தன்ன விதித்திருந்தது. அதன்படி தலா 5 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணைகளை நீதிமன்றுக்கு உறுதிப்படுத்தினால் மாத்திரமே அவர் பிணையில் வர முடியும். அவ்வாறு பிணையாளிகளை கிராம அலுவலர் உறுதிப்படுத்திக் குறித்த பிரதேச செயலாளர் அத்தாட்சிப் படுத்தவேண்டும். அதற்கான பணிகளே முன்னெடுக்கப்பட்டன. பிணையாளிகள் குறித்த பெறுமதியைக் கொண்டுள்ளனரா என்பதை யாழ். மாவட்ட செயலக வருமானவரி அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். அதன் பிரதி கிடைத்ததும் கமல் பிணையில் வெளிவருவர். அவ்வாறே அனித்தாவும் இன்னும் பிணையில் வரவில்லை. அவரும் இன்று அல்லது நாளை பிணையில் வெளிவருவர் என்று கூறப்படுகிறது.

(த-4)

### யாழில்

முன்தினமும் யாழ். பண்ணையில் வைத்து ஒரு பஸ் மீது கல்வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. எவரும் கைதாகவில்லை.

தனியார் பஸ் பிரச்சினை காரணமாக யாழ்.-கொழும்பு பஸ் சேவையில் ஒழுங்கற்ற தன்மை தொடர்ந்து கொண்டிருக்கிறது. அதனால் பயணிகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அச்சத்துடனேயே பயணம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதிகாரிகளின் பொறுப்பற்ற தன்மையே இதற்குக் காரணம் என்று குற்றம் சுமத்தப்படுகிறது.

(த-4)

### தனியார்

வர்கள் மாக்கிரமே நேற்றைய கலந்துரையாடலுக்கு அழைக்கப் பட்டிருந்தனர். ஆனால், யாழ்ப்பாணத்தில் பிரபல வர்த்தகரான ஒருவர் வழித் தட அனுமதி பெற்றிருந்தும் கலந்துரையாடலில்கலந்து கொண்டார். அவர் அங்கு அவசியமற்ற வரென இருந்தபோதும் அவரைத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினர் கட்டியணைத்து நட்புப் பாராட்டினரே தவிர வேறெதுவும் நடக்கவில்லை என்று கூறப்பட்டது.

வேறெந்த மாவட்டத்திலும் இல்லாத அளவுக்கு வடக்குக்கு மாத்திரமே அதிக பணம் வழித்தட அனுமதிக்காக அறவிடப்படுகிறது ஏன்?. தாம் கூறும் வரை பஸ்களை ஓட வேண்டாம் என்றும் தற்காலிக வழித்தட அனுமதிப் பத்திரம் வழங்குவது தொடர்பில் ஆராய்வதாகவும் இந்த மாத இறுதிக்குள் கேள்வி கோரல் மூலமாக வழித்தட அனுமதி வழங்கப்படும் என்றும் தேசிய போக்குவரத்து அதிகாரிகள் கூறி அனுப்பியுள்ளனர். அதனால் தாம் கடுமையாகப் பாதிக்கப்படவுள்ளதாக பஸ் காரதிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

(த-4)

### மாகாண

ளையும் விட வேறெந்த மாகாண மக்கள் போரின் உக்கிரத்திற்கு கிட்டேயிருந்து தொடர்ந்து முகங்கொடுத்து வந்துள்ளார்கள்?

வடக்கு-கிழக்கு மக்களின் விடிவுக்காகத்தான் 13ஆவது திருத்தச சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால் அதனை நாடு முழுவதும் வேண்டுமென்றே நடைமுறைப்படுத்தப் போய் எமக்குத் தந்துதவப் போன சமச்சீர்மையற்ற அதிகாரப் பகிர்வானது கவனத்துக்கு எடுக்கப்படாமல் போயுள்ளது.

மத்திக்குக் கட்டுப்பட்டே மாகாணம் இயங்க வேண்டும் என்பதே மத்தியில் உள் ளோரின் மனோநிலை. ஆனால் மத்தியில் உள்ளோர் மாகாணத் தேவைகளைப் புரிந்துகொண்டிருக்கின்றார்களா என்பது மலைக்க வைக்கும் ஒரு கேள்வியாக பரிணமித்துள்ளது.

எனினும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு செயற்பாட்டை இவ்வாறான மத்தியில் உள்ளோரின் எண்ணத்தின் பிரதிபலிப்பாகவே நாங்கள் காண்கின்றோம். மத்திய அரசின் கை மாகாண சபையின் நடவடிக்கைகளில் மேலோங்கும் வண்ணமாகவே ஜனாதிபதி செயலணி, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு ஆகியவற்றின் நடவடிக்கைகள் அமைந்திருந்தன. ஜனாதிபதி செயலணியை வாபஸ் பெற்ற பின்னர் கூட மத்தியின் கையை ஓங்குவிக்கச் சதிகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்கள் இணைத் தலைமையில் கருமம் ஆற்றும்போது பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் மட்டும் எவ்வாறு தனித் தலைமையில் நடத்தப்பட்டு வருகின்றன என்ற கேள்விக்கு இதுவரையில் எனக்குப் பதில் கிடைக்கவில்லை. அண்மையில் எமது இணைத்தலைவரான அமைச்சர் வவுனியாவில், ஒட்டுசுட்டானில் எங்கெங்கே கூட்டம் நடத்தினார், என்ன செய்தார் என்பதெல்லாம் எமக்கு உடனுக்குடனேயே இணை யத்தளத்தில் தந்துதவப்பட்டுள்ளது. தேர்தலில் வாக்களித்த பெரும்பான் மை மக்களின் எதிர்பார்ப்புக்களைச் சீரழிக்கும வண்ணமாகவே இப்பேர்ப்பட்ட செயற்பாடுகள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. மத்தி மகுடி ஊதுவதால் கருடா! சௌக்கியமா என்ற குரல் எமக்கு அவர்களிடம் இருந்து கேட்கின்றது. மத்திக்கும் மலைப்புக்கள் வந்து கொண்டிருப்பதை நாங்கள் மறக்கக்கூடாது. விழுந்திருப்பவன் எந்த நாளும் விழுந் திருப்பான் என்று எதிர்பார்ப்பது மடமையாகும்.

எவ்வளவு தான் மத்திய அரசு தனது முகவர்களின் ஊடாக வடமாகாண மக்களின் நலன்களுக்கு எதிராக நடக்க எத்தனிப்பினும் அவற்றை முறியடிப்பதற்கே எம் மக்களின் எதிர்பார்ப்புக்களை வீணடிக்க விடாது நாங்கள் இந்த முடிவை எடுத்துள் ளோம். எனினும் மக்களுக்கு நன்மை பயக்குமப் விதத்தில் அரசு நடந்து கொண்டால அவற்றுக்கு உறுதுணையாக இயங்கவும் நாங்கள் பின் நிற்கமாட்டோம். எமது மக்களின் விமோசனமே எமக்கு முக்கியம்-என்றார்.

(த)


## வகுப்புக்கள்

தரம் 1,2,3,4,5 மாணவர்களுக்குரிய குழு வகுப்புக்கள்

ஆரம்பம் : 05.09.2014

வெள்ளி 4.00 PM

166, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

0772174751 (51710)


## மரண அறிவித்தல்

### அருணாசலம் தெய்வேந்திரா (சந்திரன்)



யாழ் மட்டுவில் தெற்கை பிறப்பிடமாகவும், பிரான்ஸ் பாரிஸ்சை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் தெய்வேந்திரா (சந்திரன்) 01.09.2014 திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் இளையமகனும் காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் அன்னலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகனும், திருநிறைச்செல்வி (காஞ்சனா) அவர்களின் அன்புக் கணவரும் நிருத்திகா, மத்தியூ, சேதுஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் புலேந்திரன் (மட்டுவில்), கனகம்மா(மட்டுவில்), அருட்பிரகாசம் (மட்டுவில்), சிவபாக்கியம் (கிளிநொச்சி), தில்லைநாயகம் (நுணாவில்), படைவீரசிங்கம் (மட்டுவில்), கந்தசாமி (டேவிற்) (சாவகச்சேரி), டிமிலாதேவி (ஜெனற்)(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.09.2014) வியாழக்கிழமை வசிப்பிடமாகக் கொண்ட பிரான்ஸ் பாரிஸில் அடக்கம் செய்யப்படும் அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனை மட்டுவில் தெற்கு அவரது தாயாரது இல்லத்தில் மு.ப. 10.30 மணிக்கு நடைபெறும் . இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
(51708) சகோதரர்கள், உறவினர்கள்

## மரண அறிவித்தல்

### கந்தையா கிருஷ்ணபிள்ளை (நயினாதீவு)



நயினாதீவைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி ஜெயந்தி நகரை வசிப்பிடமாகவும் தற்போது கிளிநொச்சி புது முறிப்பை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா கிருஷ்ணபிள்ளை நேற்று (03.09.2014) புதன்கிமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம்-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், தவமலர், தயாபரன், தயாளினி, பகீரதி, காலஞ்சென்ற ஜெயக்குமார் மற்றும் பிரதீபன், கிருபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற நடராசா மற்றும் பரமலிங்கம், இரத்தினசிங்கம், கனகரெத்தினம், புஸ்பராணி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தவராஜா, சாந்தினி, சூரியகுமார், கணேஷ்வரன், கௌசி, பவி, பவித்திரா ஆகியோரின் அன்பு மாமனும், நித்தியலட்சுமி, கனகரெத்தினம், கனகசபாபதி, வாலாம்பிகை, குணரட்ணம், பாலசிங்கம், யோகேஷ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 783 1757,
077 138 1897

புதுமுறிப்பு,
(விக்கினேஷ்வரா பாடசாலை அருகில்)
கிளிநொச்சி. (51709) (10)

## மரண அறிவித்தல்

### திருமதி கமலாதேவி சபாநாயகம்

வட்டுக்கோட்டை மூளாய் வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி சபாநாயகம் நேற்றுமுன்தினம் (02.09.2014) செவ்வாய்க் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம்-சந்திரகாந்தி தம்பதியரின் ஏக புதல்வியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சபாநாயகத்தின் (ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர், விவசாய திணைக்களம்) அன்பு மனைவியும், சிவகுமார் (ஓய்வுநிலை வர்த்தக வங்கி), றசினா, சந்திரசேகரன் (ஐக்கிய இராச் சியம்), சறோஜாதேவி (சமுர்த்தி முகாமையாளர், வலிமேற்கு பிரதேச செயலகம்), விக்கினேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், ராகினி, சிவபாலன் (ஓய்வுநிலை வலி மேற்கு பிரதேச செயலகம்), சிவதேவி (ஐக்கிய இராச்சியம்), கருணாநிதி (பொது சுகாதார பரிசோதகர்), ஹேமா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், கஸ்தூரி, பிரணவன், கோதலன், சாமினி, விஜயராகவன் (தரவு நிரல் படுத்தல் உத்தியோகத்தர், யாழ். பல்கலைக் கழகம்), அபிலாஷ், சிவகண்ணா, மாதங்கி, தனுஷிதா, ஷாருகா, துளசிகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.09.2014) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மூளாய் வீதி,
வட்டுக்காட்டை, (C/15690) (10)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கந்தன் வைரவநாதன் (மாணிக்கம்)



புத்தூர் கிழக்கு, குமாரசுவாமி வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் வைரவநாதன் (மாணிக்கம்) நேற்று (03.09.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தன்-நாகி தம்பதியரின் அன்பு மகனும், சின்னம்மாவின் பாசமிகு கணவரும், விக்கினேஸ்வரநாதன், கேதீஸ்வரநாதன், நாகேஸ்வரநாதன், கருணேஸ்வரநாதன் (கோயில் சிவா), நதீஸ்வரி, குகனேஸ்வரநாதன், புவனேஸ்வரநாதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புத்தூர் கிழக்கு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று (04.09.2014) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக புத்தூர் கிழக்கு அந்திரான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: வை. கருணேஸ்வரநாதன்
(மகன்) (கோயில் சிவா)
077 922 9341

குமாரசுவாமி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர். (C/15689) (10)

## வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ். மாநகர சபை எல்லைக்குள் அமைந்த அரியாலை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப் பட்டு வருகிறது.
இன்று காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை அரியாலை பாரதி வீதி, கயா போட்டோ நிலையம் முன்பாகவும், அரியாலை பொன்னம்பலம் வீதி கலைவாணி சன சமூக நிலையத்திலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை நாவலர் வீதி கனகரட்ணம் மகாவித்தியாலய முன்பு றமாகவும் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி வழங்கப்படும். வளர்ப்பு நாய்களுக்கு உரிமைக் கட்டணமாக 20 ரூபா செலுத்தப்பட வேண்டும் என்று யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித் துள்ளார். (வ)

# கட்சியில் இருந்து நீக்கப்பட்டோருக்கு நாங்கள் ஒருபோதும் பொறுப்பு அல்ல

## த.ம.வி.பு செயலாளர் பிரசாந்தன் தெரிவிப்பு

மட்டக்களப்பு, செப்.4
தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு கட்சியிலிருந்து விலக்கப்பட்டவர்கள் ஏனைய கட்சிகளுக்கு ஆதரவு தெரிவிப்பதாக குறிப்பிட்டு செல்லும் போது அவர்கள் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியில் இருந்து ஏனைய கட்சிகளுக்கு தாவியதாக கூறுவது நிறுத்தப்படவேண்டும். கட்சியில் ஒழுக்காற்றுக் நடிவடிக்கை எடுக்கப்பட்டு நீக்கப்பட்டவர்கள் வேறு கட்சிகளில் இணைவதற்கு நாம் ஒருபோதும் பொறுப்பல்ல என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தன் தெரிவித்தார்.
தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முக்கியஸ்தர்கள் கட்சி தாவினார்கள் என்று வெளியாகிய செய்திகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்,
சுயலாபத்திற்காகவோ அல்லது வெறுமனே அரசியல் பதவிகளுக்காகவோ அரசியல் நீரோட்டத்திற்கு வந்த கட்சியல்ல எமது கட்சி.
இக் கட்சியல் இருப்பவர்களும் சரி புதிதாய் இணைபவர்களும் சரி உண்மையான இதய சுத்தியுடன் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்பதுவே எமது உயரிய சிந்தனை. பொய் வாக்குறுதிகள் கொடுப்பது மக்களை முறையற்ற விதத்தில் வழி நடத்தி ஊழல் புரிவது, அதிகார துஷ்பிரயோகம், மது, மாது, நிதி மோசடிகள் உள்ளிட்ட சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை கட்சியின், செயற்குழுத் தீர்மானங்களுக்கு அமைய விஷேட குழுக்கள் அமைக்கப்பட்டு குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் அவர்களை கட்சியின் பதவிகளில் இருந்தும் கட்சியின் உறுப்புரிமையிலிருந்தும் நீக்குவதே எமது கட்சியின் வழக்கமான நடைமுறை. இதற்கமைய எமது கட்சியின் சில தவிசாளர்கள், நகர, பிரதேச சபை உறுப்பினர்கள் என மக்களின் முறைப்பாடுகளுக்கேற்ப பதவி நீக்கிய சம்பவங்களும் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.
அவர்களில் சிலர் அரசியலில் இருந்து ஒதுங்கியுள்ளனர். இன்னும் சிலர் வேறு அரசியல் கட்சிகளில் இணைந்துள்ளமை அது அவர்களின் ஜனநாயக உரிமை, அத்தோடு மக்களின் நலன் சார்ந்த சமூகத்தை நோக்கிய பார்வையற்ற சமூக முரண் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை கட்சிக்குள் வைத்துக் கொண்டு போலி அரசியல் செய்வதற்கு எமது கட்சி ஒருபோதும் தயாரில்லை அதனால் தமது அபிலாஷைகளை பூர்த்தி செய்யக் கூடிய தமக்கு ஏற்ற கட்சிகளை எமது கட்சியில் ஒழுக்காற்று நடிவடிக்கை எடுக்கப்பட்டு நீக்கப்பட்டவர்கள் தேர்ந்தெடுத்து இணைவதற்கு நாம் பொறுப்பல்ல எனத் தெரிவித்தார். (த-10)



ஆசியா மன்றம் நடைமுறைப்படுத்திவரும் உள்ளூர் பொருளாதார ஆட்சி செயற்திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி மன்றங்களின் வருமானத்தை அதிகரிக்கும் திட்டம் தொடர்பிலான செயலமர்வு அண்மையில் சாய்ந்தமருது பரடைஸ் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர் யு.எல்.ஏ.அஸீஸ், விஷேட அதிதியாகக் கலந்து கொண்ட கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.வை.சலீம், அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம்.ஜே.எம்.இர்சாத் , ஆசியாமன்றத்தின் நிகழ்ச்சித்திட்ட அதிகாரி எம்.ஐ.எம்.வலீத் ஆகியோர் விளக்கமளிப்பதையும் கலந்து கொண்ட உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகளையும் படத்தில் காணலாம். (த-10)

## பள்ளிவாசல் வாகனத் தரிப்பிடத்துக்கான இடைக்காலத் தடை உத்தரவு நீக்கம்

கல்முனைக்குடி, செப். 4
கல்முனைக்குடி முஹைறதீன் ஜும்ஆப்பள்ளிவாசலில்அமைக்கப்பட்டு வந்த வாகனத் தரிப்பிட நிர்மாணப் பணிகளுக்கு கல்முனை மாவட்ட நீதிமன்றம் வழங்கிய இடைக்கால தடை உத்தரவு நீக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பான வழக்கு கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே கல்முனை மாவட்ட நீதிமன்ற நீதிபதி எம்.பி.முஹைறதீன் தடையுத்தரவை நீக்குவதாக அறிவித்தார்.
இதன்போது, குறித்த வாகனத் தரிப்பிடம் பள்ளிவாசலுக்கு தொழுகைக்காக வருகின்ற மக்கள் மாத்திரமே பயன்படுத்த வேண்டும் என்றும் வெளியாள்கள் வாகனங்களை நிறுத்த அனுமதிக்க கூடாது என்றும் உத்தரவு பிறப்பித்தார்.
கல்முனைக்குடி முஹைறதீன் ஜும்ஆப் பள்ளிவாசலுக்குச் சொந்தமான வடக்குப் பகுதியில் பொருத்தமற்ற இடத்தில் வாகனக் தரிப்பிடம் அமைக்கப்படுவதாகவும், அதனால் பள்ளிவாசலைச் சேர்ந்த பொது மக்களுக்கு இடையூறும் பாதிப்பும் இழப்புகளும் ஏற்படுவதுடன் பள்ளிவாசலின் மகிமைத் தன்மைக்கும் பாதிப்பு ஏற்படும் என்று குறிப்பிட்டுஇ இந்த நிர்மாணப் பணிகளை தடை செய்யக் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-10

# மட்டக்களப்பில் ஆயுதங்கள் மீட்பு



கரடியனாறு, செப்.4
மட்டக்களப்பு - கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள வடிச்சல் காட்டில் ஒரு தொகுதி ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.
மீட்கப்பட்டுள்ள ஆயுதத் தொகுதியில் ரீ- 56 ரக துப்பாக்கி, மகஸின்கள் 2, ரீ-56 ரக துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் ரவைகள் 192, மோட்டார் குண்டு 1 (61 ரகம்) என்பன உள்ளடங்கியுள்ளன.
மட்டக்களப்பு புலனாய்வுப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து கரடியனாறு பகுதிக்குப் பொறுப்பான புலனாய்வுப் பிரிவினரால் இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டு கரடியனாறு பொலிஸில் செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒப்படைக்கப்பட்டன.
இந்த ஆயுதங்கள் குறித்து புலனாய்வுப் பொலிஸாரும், கரடியனாறுப் பொலிஸாரும் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-10)

## சாய்ந்தமருது கடற்கரைப் பூங்கா பணிகளை உடன் துரிதப்படுத்துக

### கல்முனை மாநகர முதல்வர் உத்தரவு

சாய்ந்தமருது, செப்.4
சாய்ந்தமருது கடற்கரைப் பூங்கா நிர்மாணப் பணிகளை உடனடியாக துரிதப்படுத்துமாறு கல்முனை மாநகர முதல்வர் எம்.நிசாம் காரியப்பர் ஒப்பந்தக்காரர்களுக்கு கண்டிப்பான உத்தரவு பிறப்பித்துள்ளார்.
கல்முனை மாநகர சபையால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை முதல்வர் செயலகத்தில் இடம்பெற்ற போதே அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார். இதன் போது கல்முனைக்குடி, சாய்ந்தமருது, மருதமுனை, நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு உள்ளிட்ட அனைத்து பிரதேசங்களிலும் நெல்சிப் திட்டத்தின் கீழ் கல்முனை மாநகர சபையினால் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் முன்னேற்றங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.
இவ்வேலைத் திட்டங்கள் அனைத்தையும் துரிதப்படுத்தி கூடிய விரைவில் நிறைவு செய்வதற்கான வழிவகைகள் பற்றி கலந்துரையாடப்பட்டதுடன் மந்த கதியில் இடம்பெறும் வேலைத் திட்டங்களைத் துரிதப்படுத்துமாறு அதிகாரிகள் மற்றும் ஒப்பந்தக்காரர்களுக்கு முதல்வர் பணிப்புரை விடுத்தார்.
விசேடமாக சாய்ந்தமருது கடற்கரைப் பூங்கா நிர்மாணப் பணிகள் மிகவும் மந்த கதியில் நடைபெறுவது குறித்து கவலையும் விசனமும் தெரிவித்த முதல்வர், அதனை உடனடியாக துரிதப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி அதற்கான உத்தரவையும் அறிவுறுத்தல்களையும் வழங்கினார்.
இக் கூட்டத்தில் மாநகர ஆணையாளர் ஜே.லியாகத் அலி, கணக்காளர் எச்.எம்.எம்.றசீட், சிரேஷ்ட வேலைகள் அத்தியட்சகர் எம்.ஐ.அப்துல் மஜீத் உட்பட அதிகாரிகளும் ஒப்பந்தக்காரர்களும் பங்கேற்றிருந்தனர். (த-10)

## உற்பத்தித் திறன் போட்டியில் வென்றோருக்கு விருது வழங்கும் விழா திருகோணமலையில்

மூதூர்இ செப்.4
கிழக்கு மாகாண சபையினால் 2013ஆம் ஆண்டுக்காக நடத்தப்பட்ட உற்பத்தித் திறன் போட்டியில் வெற்றி பெற்ற மாகாண அமைச்சுக்கள் திணைக்களங்கள், நிறுவனங்களுக்கான விருது வழங்கும் விழா நாளை பிற்பகல் 2.30 மணிக்கு திருகோணமலை விவேகானந்தா கல்லூரியில் நடைபெறவுள்ளது.
கிழக்கு மாகாண பிரதம செயலாளர் செயலகம் மற்றும் உற்பத்தித்திறன் ஏற்பாட்டுக் குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த விழாவில் கிழக்கு மாகாண ஆளுநர் மொகான் விஜயவிக்ரம, கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத், உற்பத்தித் திறன் அபிவிருத்தி அமைச்சர் பசீர்சேகுதாவூத் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும், கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் விமலவீர திஸாநாயக்க, வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை, சுகாதார அமைச்சர் எம்.ஐ.எம். மன்சூர், விவசாய அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் மற்றும் கிழக்கு மாகாண சபையின் தவிசாளர் திருமதி டபிள்யூ.ஜி.எம். ஆரியவதி கலப்பதி ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.
இந்த நிகழ்வில் கிழக்கு பல்கலைக்கழக விபுலானந்த இசை நடனக் கல்லூரியின் மாணவ, மாணவிகளினதும், கந்தளாய் கலைச் சங்கத்தின் கலைஞர்களதும் நடன நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதுடன் இந்த வைபவத்தின் போது அத் சிறப்பு விருது 2013 எனும் பெயரிலான சிறப்பு மலரொன்றும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.
விழாவில் 2013ஆம் ஆண்டுக்கென கிழக்கு மாகாண சபையால் நடாத்தப்பட்ட உற்பத்தித் திறன் விருத்திக்கான போட்டியில் வெற்றி பெற்ற மாகாண அமைச்சுக்கள், திணைக்களங்கள், நிறுவனங்கள் சிறப்பு விருதுகளும், சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளன. (த-10,40)

# வலி.வடக்கு மக்கள் மீள்குடியமரவும் தொழில்களை மேற்கொள்ளவும் உதவுக

*இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவரிடம் விண்ணப்பம்*

வலிகாமம், செப்.4

வலிகாமம் வடக்குப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து இன்னமும் மீளக்குடியமர முடியாத நிலையில் வாழ்ந்து வரும் மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமரவும் தமது சொந்தத் தொழில்களை மேற்கொள்ளவும் ஆவன செய்யுமாறு வலிகாமம் வடக்கு மீள்குடியமர்வு மற்றும் புனர் வாழ்வுக்குழு இலங்கைக்கான பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகர் ஜோன் ரங்கினுக்கு எழுதியுள்ள கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வலிகாமம் வடக்குப் பிரதேசம் யாழ். மாவட்டத்தின் ஒரு பகுதியாக விளங்குகின்றது. இது 45 கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்டது. இங்கு வாழ்ந்த மக்கள் போர்ச் சூழல் காரணமாக 1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்தனர். இந்த மக்கள் 21கிராம அலுவலர் பிரிவுகளில் முழுமையாகவும், எட்டுக் கிராம அலுவலர் பிரிவுகளில் பகுதியளவிலும் மீளக் குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் இந்த எட்டு கிராம அலுவலர் பிரிவுகளில் மீதமாகவுள்ள இடங்களிலும், 16 கிராம அலுவலர் பிரிவுகளில் முழுமையாகவும் மக்கள் மீள்குடியமர்வதற்கு இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை.

மக்கள் இன்னமும் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படாத இந்தப் பிரதேசம் 25 சதுர கிலோமீற்றர் பரப்பளவையும், 6 ஆயிரத்து 500 ஏக்கர் நிலத்தையும் கொண்டது. சுமார் 9ஆயிரத்து 968 குடும்பங்களைச் சேர்ந்த 34 ஆயிரத்து 368 மக்கள் இங்கு மீள்குடியமர வேண்டியுள்ளது. இவர்கள் கடந்த 24 வருடங்களாக நலன்புரி நிலையங்களிலும், நண்பர்கள் மற்றும் உறவினர்கள் வீடுகளிலும் வசித்து வருகின்றனர். மேலும் பல வணக்கத் தலங்கள் பராமரிப்பு இல்லாததால் அழிந்த நிலைலயில் காணப்படுகின்றன.

இங்கு வாழ்ந்த மக்களின் பிரதான தொழில்களாக விவசாயமும், மீன்பிடித்தொழிலும் விளங்கின. தற்போது இவற்றை இழந்த நிலையில் இந்த மக்கள் உள்ளனர். நிவாரண உதவிகளும் நிறுத்தப்பட்டுள்ளதால் இவர்களின் நிலை பரிதாபகாரமானதொரு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

மேலும் இந்தியாவிலும், உலகின் ஏனைய நாடுகளிலும் அகதி அந்தஸ்துடன் வாழ்ந்து வரும் ஆயிரக் கணக்கான மக்களும் இங்கு மீள்குடியமர வேண்டியுள்ளது.

இன்னமும் மக்கள் குடியமராத பகுதிகளை படையினர் அடாத்தாக ஆக்கிரமித்துள்ளனர். பாதுகாப்புக் காரணங்களைக் கூறி உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பையும் உதாசீனம் செய்து மக்களின் மீள்குடியமர்வை படையினர் தடுத்து வருகின்றனர்.

இராணுவத் தேவைகளுக்கு அப்பாற்பட்ட விதத்தில் சுற்றுலா ஹோட்டல்களும் யோக்கட் உட்பட உணவுப்பண்டங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் இங்கு அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

மேலும், துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி என்ற சாக்குப் போக்குகளைக் கூறி மக்களுக்குச் சொந்தமான காணிகளை படையினர் தமது பொறுப்பில் வைத்திருக்க வேண்டிய அவசியம் எதுவும் கிடையாது.

அம்பாந்தோட்டையில் அமைந்துள்ள வீரகெட்டியாவில் விமான நிலையத்தை அமைக்கும் திட்டம் அங்குள்ள விவசாயிகளின் எதிர்ப்புக் காரணமாகக் கைவிடப்பட்டு வேறொரு இடத்துக்கு மாற்றப்பட்டது. ஆனால் இங்கு மட்டும் விவ சாயிகள் மற்றும் மீனவர்களின் நிலங்களைப் பறித்தெடுப்பது எந்த வகையில் நியாயம் என்பது புரியவில்லை. ஐ.நா.மனித உரிமைகள் ஆணையகத்தாலும், கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவினாலும் பரிந்துரைக்கப்பட்டதன் பிரகாரம் இடம் பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்வதற்கு அனுமதி வழங்கியிருக்க வேண்டும்.

தங்களின் கவனத்துக்கு மேலும் ஒரு விடயத்தையும் கொண்டுவர விரும்புகின்றோம். இங்கு நிலை கொண்டுள்ள படையினர் வீடுகள், கோயில்கள், பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றை அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இவை யாவும் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

இந்தச் சூழ்நிலையில் இந்தப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் மீள்குடியமர்த்தப் படவேண்டும்.

எமது பிரச்சினைகளையும் விசனத்தையும் போக்குவதற்கு சர்வதேச சமூகத்தால் மட்டுமே முடியுமென்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். (க)

# தமிழரசுக்கட்சி தேசிய மாநாட்டு சுவரொட்டிகள் குடாநாட்டில்

கரணவாய், செப்.5

தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு தொடர்பான சுவரொட்டிகள் யாழ்.குடாநாட்டில் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வருடாந்த தேசிய மாநாடு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. அதற்குத் தமிழரசுக் கட்சி ஆதரவாளர்களை விழிப்படையச் செய்யும் முகமாகவே வர்ணச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் புதிய தலைவராக வருவார் என எதிர்பார்க்கப்படுபவருமான நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மற்றும் தந்தை செல்வா ஆகியோரின் படங்கள் பொறிக்கப்பட்ட வர்ணச் சுவரொட்டிகளே குடாநாடு முழுவதிலும் ஒட்டப் பட்டுள்ளன.

(த-108)

**கண்ணீர் அஞ்சலி**

எமது பாடசாலை ஆசிரியை செல்வி து.யசோதை
அவர்களின் அன்புத் தந்தை

**வேலாயுதம்பிள்ளை துரைராசசிங்கம்**



கடந்த 28.08.2014 சிவபதமடைந்தார். அவர்களின் மறைவால் துயர் அடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (51643) (12.3.6)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள்,
யா/சிறுப்பிட்டி அ.த.க.பாடசாலை, நீர்வேலி

**8ஆம் ஆண்டு நினைவில்**



மண்ணில் 27.05.1931

விண்ணில் 04.09.2006

அமரர் **தம்பிராசா அந்தோனிப்பிள்ளை**
(செபரத்தினம்)

குடும்பத்தின் ஒளி விளக்காய்
வாழ்ந்திட்ட எம் தெய்வமே!
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
உங்களுக்கு ஈடாகுமா?

வாழ்க்கை என்னும் பாதையிலே
நீங்கள் காட்டிய பாசமெல்லாம்
எம்மை விட்டு பிரிந்து எட்டாண்டானதோ?
உயிரோடும் உணர்வோடும் கலந்துவிட்ட
உங்கள் நினைவலைகள் என்றென்றும்
எம்முடன் நிலைத்திருக்கும் (51704)(10)

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

**மரண அறிவித்தல்**

**நடுவிலார் பொன்னு**
(முன்னாள் இ.போ.ச.சாரதி-கோண்டாவில்)



கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடுவிலார் பொன்னு (பொன்னர்) நேற்று (03.09.2014) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பூபதியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற நடுவிலார்-வள்ளி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற முருகன்-பொன்னி தம்பதியரின் மருமகனும், குகேந்திரன் (சுவிஸ்), ஜெயந்தி, கஜேந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சத்தியசீலன் (ஆதார வைத்தியசாலை-தெல்லிப்பழை), ஜெயந்தினி, ஜமீரா (கனடா) ஆகியோரின் மாமனும், மதுஷா (யா/இந்து மகளிர் கல்லூரி மாணவி), ஜஜீவா (யா/இந்து மகளிர் கல்லூரி மாணவி), பிரணவி, பிரவீன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.09.2014) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 11.30 மணியளவில் உரும்பிராய் வடக்கு, எருளன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்பகப்பிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு. (51702) (10.6)

தகவல்:
குடும்பத்தினர்.

**வாகனம் வாடகைக்கு உண்டு**

Mahindra Maxximo அலுமினிய Body
உடன் வாகனம் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 844 8797 (51635) (45.6.3)

**காணி விற்பனைக்கு**

பாடசாலை ஒழுங்கை கோண்டாவில்
மேற்கில் 2¾ பரப்பும் ஒரு குழியும்
காணி விற்பனைக்கு
தொடர்பு: 021 373 7062 (51644) (45.6.3)

**Personal Classes (வகுப்புக்கள்)**

விஞ்ஞானம் & ஆங்கிலம்
Science & English
தொடர்புகளுக்கு: 077 597 2153 (51703) (10.6)

**பணிப்பெண் தேவை**

வீட்டில் தங்கி நின்று வேலை செய்ய பணிப்பெண் தேவை.
T.P - 0752102485

**விசேட புலமைப்பரிசில் திட்டம் - 2014**



பின்வரும் பயிற்சிநெறிகளுக்கு புலமைப்பரிசில்களை மாணவர்கள் பெற்றுக்கொள்ள முடியும்



**Degree Courses**
**Undergraduate / Postgraduate**
**BA/BBA/MBA**
(பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம் பெற்ற கற்கை நெறிகள்)

**Hotel Management**
- Diploma in Hotel Management
- Diploma in Travel and Tourism

**Business Management**
- Diploma in Business Management
- HND in Business Management

**Special courses**
- CMA (Certified Management Accountants)
  Level I  Level II  Level III
- Diploma in Business & IT
  Diploma in IT & English

**English**
1. Diploma in English
2. Certificate in Basic English/Spoken English
3. English for work
4. English Teachers Training

**IT**
1. Diploma in IT/ICT
2. Diploma in Multimedia
3. International Diploma in Computing
4. International Computer Driving Licence
5. Diploma in Computer Hardware & Hetworking

- பயிற்சியின் பின்னர் வேலைவாய்ப்புக்கள்
- உலகின் பிரபல பல்கலைக்கழகங்கள்/ கல்லூரிகளில் உயர்கல்வி வாய்ப்புக்கள் (UK, Canada, USA, Australia)



பதிவுகளை மேற்கொள்வதற்கு
<Name><Address><Course Name> இனை Type செய்து
0775052643 எனும் தொலைபேசிக்கு SMS செய்யுங்கள்

**LCBT London College of Business Technology**
**LCBT City Campus**

No:120/6, Palaly Road, Jaffna. (இலுப்பையடி சந்திக்கு அருகில்)
021 221 7105 / 077 024 9071
330, Aanandapuram East, Kilinochchi. புதுக்குடியிருப்பு (C/15686)(10.6)

**மரண அறிவித்தல்**



**சிவசுந்தரம் சுந்தரேஸ்வரன்**

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், முரசுமோட்டை, கோரக்கன்கட்டு, பரந்தனை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுந்தரம் சுந்தரேஸ்வரன் 02.09.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுந்தரம்-மகேஸ்வரி தம்பதி களின் பாசமிகு மகனும், ஞானாம்பிகையின் அன்புக்கணவரும்காலஞ்சென்ற சாந்தகுமாரி மற்றும் நந்தகுமார்(கனடா),காலஞ் சென்ற கணேசமூர்த்தி மற்றும் மகேந்திரன், சிவகுமாரன்(கனடா) உசாராணி(ஆசிரியை) ஜீவராணி (மலேசியா) சியாமளா(லண்டன்), முரளீதரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், வினோத்(ஆசிரியர்), அசோக் (பொறியியலாளர்), கோசலா(இணை மருத்துவப் பிரிவு யாழ்/ பல்கலைக் கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், புனிதமலர் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), லாவண்யா (உதவிக்கணக்காய்வாளர்) ஆகியோரின் மாமனும் கஜனன், கவினயா, ஓவியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.09.2014) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோரக்கன்கட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏ ற்றுக்கொள்ளவும்.

-தகவல்-
குடும்பத்தினர்,
0777402845

17ஆம் ஒழுங்கை,
கோரக்கன் கட்டு, பரந்தன்.

# பிலிப்பைன்ஸ் தூதரக அலுவலகம் மூடப்பட்டது; காரணம் அறிவிக்கப்படவில்லை

கொழும்பு, செப்.4

இலங்கையில் உள்ள பிலிப்பைன்ஸ் தூதரக அலுவலகம் நேற்றுமுன்தினம் மூடப்பட்டது என்று இலங்கையின் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நேற்று முன்தினம் மணிலாவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் குறித்த அலுவலகம் ஓகஸ்ட் 29ம் திகதி மூடப்பட்டு விட்டதாக வெளியுறவு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த அலுவலகம் மூடப்பட்டமைக்கான காரணம் குறித்து இலங்கைவெளியுறவுஅமைச்சு மணிலாவின் தகவலை எதிர்ப்பார்த்துள்ளது என்று இலங்கையின் வெளியுறவு அமைச்சு பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் பங்களாதேஸில் உள்ள பிலிப்பைன்ஸின் தூதரகம், பிலிப்பைன்ஸுக்கு செல்லும் இலங்கையர் கள் நுழைவிசைவுக்காக பங்க ளாதேஸில் உள்ள பிலிப் பைன்ஸ் தூதரகத்துக்கு விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (ற)

## தொடர்ச்சிகள்

### ஈழத்தமிழர்

அதில் ஈழத்தமிழர்கள் விரும்பும் அரசியல் தீர்வை உடனடியாக உருவாக்கவேண்டும். இலங்கை ஜனாதிபதி மற்றும் அந்த நாட்டு பிரதிநிதிகளை ஐ.நா. சபையில் பங்கேற்க அனுமதிக்கக் கூடாது. இலங்கை அரசு பறிமுதல் செய்த தமிழக மீனவர்களின் படகுகளை உடனடியாக திரும்பப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும், ஐ.நா. விசாரணைக்குழு விசாரணையை தமிழ்நாட்டில் நடத்த அனுமதிக்கவேண்டும் எனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்தத் தீர்மானங்களை வலியுறுத்தி டெசோ அமைப்பு சார்பில் நேற்றுப் போராட்டம் நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது. இதன்படி சென்னை சேப்பாக்கத்தில் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தி.மு.க. தலைவர் கருணாநிதி இந்த ஆர்ப்பாட்டத்துக்குத் தலைமை தாங்கினார். தி.மு.க. பொதுச் செயலாளர் அன்பழகன், பொருளாளர் மு.க.ஸ்டாலின், திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி, விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன், திராவிட இயக்க தமிழர் பேரவை பொதுச் செயலாளர் சுப. வீரபாண்டியன், முன்னாள் அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன் மற்றும் நூற்றுக்கணக்கான தி.மு.கவினர் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். (ற)

### பேச்சுக்கு

"புரையோடிப்போயுள்ள இனப் பிரச்சினைக்கு சிறுபான்மை மக்கள் கௌரவமானதொரு அரசியல் தீர்வை எதிர்பார்க்கின்றனர். எனினும், இது விடயத்தில் தொடர்ந்தும் காலம் கடத் தப்படுகின்றது. எனவே, அரசியல் தீர்வை முன்வைப்பதற்கு அரசு முன் வரவேண்டும். கூட்டமைப் புடன் பேச்சு நடத்துவதற்கு முன்னர் தீர்வுத் திட்ட நகலை அது முன்வைக்க வேண்டும். இதை விடுத்து தெரிவுக்குழுவைக் காரணம்காட்டி காலம் கடத்துவது நியாயமற்ற செயலாகும். அத்துடன் தெரிவுக் குழுவுக்குள் மு.காவை அரசு உள்வாங்காமையானது எமக்கு நெற் றியடியாகும். ஆகவே, தீர்வுத்திட்ட வரைவை முன்வைத்தால்தான் அதன் சாதக பாதகத் தன்மையை ஆராய்ந்து இணக்கப்பாட்டுக்கு வரக்கூடியதாக இருக்கும். குறிப்பாக பெரும்பான்மை அரசுகளுக்கு சிறுபான்மையின மக்களின் பிரச்சினைகள் தெரியாமல் இல்லை. கடந்த காலங்களில் பல குழுக்கள் நியமிக்கப்பட்டன. அவை முன்வைத்த அறிக்கைகளில் பிரச்சினைகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே, அரசு இதய சுத்தியுடன் பேசுவதற்கு முன்வந்தால் மாத்திரமே பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வை எட்டமுடியும்.

அதேவேளை, தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நாம் பேச்சு நடத்தினோம். அதற்காக இரு தரப்புகளிலும் குழுக்கள் அமைக்கப்பட்டன. அந்த வகையில் மேற்படி பேச்சு விரைவில் மீண்டும் ஆரம்பமாகும்"- என்று தெரிவித்தார். (ற-சி)

### தமிழருக்கு

றுக்கொள்ள முடியும். தற்போது கிடைத் துள்ள இந்தச் சந்தர்ப்பத்தை அனைத்துத் தமிழ் மக்களும் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் - இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.

அந்தக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின்போதே கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார். செய்தியாளர் சந்திப்பில் அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணன் மற்றும் செயலாளர் செ.கஜேந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

"எந்தளவுக்கு மக்கள் அதிகமாகச் சாட்சியமளிக்கின்றார்களோ அந்தளவுக்குப் பாதுகாப்பும் அதிகமாக இருக்கும். சாட்சியங்களைச் சத்தியக் கடதாசி மூலமும் அனுப்ப முடியும். அதனை குறைந்தது சமாதான நீதிவான் ஒருவர் உறுதிப்படுத்த வேண்டும். அல்லது கடிதம்மூலமாகவேனும் அனுப்பலாம். ஒரு விடயம் தொடர்பில் ஒருவர் மாத்திரமன்றி பலர் அனுப்பலாம். அவ்வாறு செய்வது வலுவானதாக அமையும். ஏனெனில் ஒரு விடயம் தொடர்பாகக் கூறும் போது அதில் ஏதாவது சந்தேகம் இருப்பின் ஏனையவர்களது கடிதம்மூலமாகவேனும் உறுதிப்படுத்தலாம்.

சாட்சியங்களை பல்கலைக் கழக மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலைகளது ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள் மாத்திரமன்றி நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள், பாதிப்பகளை நேரடியாகக் கண்டவர்கள், மூன்றாம் தரப்பினூடாகக் கேள்விப்பட்டவர்கள் அனைவரும் அளிக்க வேண்டும். எமது அவலங்களுக்கத் தீர்வு கிடைக்க இதனைச் செய்ய வெண்டும். தேர்தலில் எவ்வாறு தமிழ்த்தேசியப் பற்றோடு வாக்களித்தீர்களோ அதே அக்கறையுடன் சாட்சியமளியுங்கள்"- என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ற-14)

### இறுதிப்போர்

பகுதிகளில் மக்கள் மீள்குடியமர் வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். இதன்போது இறுதிக்கட்டப் போர் இடம் பெற்ற பகுதிகளிலும் மக்கள் சென்று வருவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். இந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் குறித்த பகுதிகளில் இராணுவத்தினர் துப்புரவு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். இறுதிக்கட்டப் போரில் உயிரிழந்தவர்களது சடலங்கள் யாவும் குறித்த பகுதிகளிலேயே புதைக்கப்பட்டிருந்தன. அதனை அழித்து எரிக்கும் முயற்சிகளே தற்போது நடந்து வருகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்திருந்னர்.

இந்த நிலையில் தற்போது, குறித்த பகுதிகளுக்குள் யாரும் செல்ல முடியாதவாறு எச்சரிக்கைப் பலகைகள் போடப்பட்டு தடுக்கப்பட்டுள்ளன. மிதிவெடி அகற்றும் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

### யாழ். கோட்டை

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். வாள்வெட்டில் காயமடைந்த ஒருவர் இரத்தம் வழிந்தோட கால்நடையாகவே ஓடிவந்து வைத்தியசாலைக்குள் புகுந்துகொண்டார். மற்றையவர் காயத்துடன் பண்ணைப் பக்கமாகச் சுற்றி ஓடித் தப்பிக்கொண்டார்.

நேற்றிரவு 7.20 மணியளவில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. அதனால் யாழ்.நகரப்பகுதி பெரும் பரபரப்பானது. வாள்வெட்டில் குமார ஆலயம், கிரான், மட்டக்களப்பைச் சேர்ந்த சண்முகம் சிவசதன் (வயது -30), வைரவர் கோயிலடி, கிரான், மட்டக்களப்பைச் சேர்ந்த ராசா விதுசன் (வயது-20) ஆகிய இருவருமே படுகாயமடைந்துள்ளனர். சிவசதன் தொல்பொருள் திணைக்கள் உத்தியோகத்தராவார். யாழ். கோட்டையில் அவர் பணி புரிந்து வருகின்றார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியுள்ளனர். என்ன காரணத்துக்காக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்பது தொடர்பில் எதுவும் தெரியவரவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பாக துரிதமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன என்றும் இதுவரை சந் தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற)

### மாகாண

றம் சாட்டினார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இணைத் தலைமை வகித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தாவது:-

தேர்தல் காலங்களில் நாங்கள் ஒரு விடயத்தை எமது தேர்தல் மேடைகளில் குறிப்பிட்டோம். அதாவது நாம் சட்டத்துக்கு உட்பட்டே எமது உரிமைகளைப் பெற உத்தேசித்துள்ளோம். அரசு பற்றி அதன் கடந்த கால நடவடிக்கைகள் பற்றி எந்த வித முன் தீர்மானங்களையும் மனதில் கொள்ளாது முதலில் எமது குறைகளை எமது அரசிடம் எடுத்துச் சொல்ல உத்தேசித்துள்ளோம். எமது நல்லெண்ணங்களை அவர்களுக்கு வெளிப்படுத்துவோம். அவர்கள் எம்முடன் சேர்ந்து எமக்கு அனுசரணையாக நடந்து கொண்டார்களானால் புதிய ஒரு உறவு முறையை நாங்கள் உருவாக்க முடியும் என்ற கருத்தை வெளியிட்டிருந்தோம்.

ஆனால் எம்மைப் புறக்கணிக்க எமது ஆதங்கங்களைப் புறக்கணிக்க அரசு தீர்மானித்தால் வெளிநாடுகளுக்கு எமது குறைகளை எடுத்துச் செல்வதை விட எமக்கு வேறு வழியிருக்காது என்றும் சொல்லி வைத்திருந்தோம். உலகமானது இன்று சுருங்கி வந்து பூகோளக் கிராமமாகப் பரிணமித்துள்ளதை எமது பேச்சுக்களில் எடுத்துக் காட்டினோம். பெருவாரியான எம்மக்களின் வாக்குகளைப் பெற்றிருந்தும் அதே மக்களின் ஆத்திரம் என் மீது படர என் தேர்தல் காலச் சொற்களுக்கு உயிரூட்டும் விதத்தில் நான் ஜனாதிபதி முன் சென்று என் உறுதிமொழியை எடுத்துக் கொண்டேன். வேண்டியதைக் கேளுங்கள் தருவோம் என்றார்கள். நாம் கேட்டோம். சட்டப்படி பிரதம செயலாளர் முதலமைச்சரின் கருத்தொருமிப்புடன் நியமிக்கப்படவேண்டும். எனவே எம் இரு தரப்பாருக்கும் ஏற்புடைத்தான ஒருவரைப் பிரதம செயலாளராக நியமிக்கக் கோரினேன். சரி என்றார் ஜனாதிபதி. இது வரையில் நியமிக்கவில்லை.

அடுத்து இராணுவப் பின்புலமற்ற ஒருவரை ஆளுநர் ஆக்குங்கள் என்றோம். சரி என்றார் ஜனாதிபதி. ஆனால் முன்னிருந்த இராணுவ பின்புலம உள்ள ஆளுநருக்கு மறுவாழ்வு கொடுத்துள்ளார் ஜனாதிபதி. எமது பாதிப்படைந்த மக்களுக்கு மறு வாழ்வு கொடுக்க வேண்டிய ஜனாதிபதி இராணுவப் பின்புலமுடைய ஆளுநருக்கு மறு வாழ்வு கொடுத்துள்ளார். ஆகவே எமது கோரிக்கைகளைப் புறக்கணித்து மத்திய அரசின் அதிகாரத்தை நிலை நாட்டுவதிலேயே அரசு கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்றது - என்றார். (த-4,55)

### கிளிநொச்சியில்

(வயது-26) என்பவர் தலையில் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

**முழங்காவில் விபத்து**

நேற்று மதியம் சோலைநகர் குடியிருப்பைச் சேர்ந்த 7 வயதுடைய சு.தமிழ் மாறன் என்ற மாண வனே உயிரிழந்தவராவார். குறித்த மாணவன் முழங்காவில் ஆரம்ப மகா வித்தியால யத்தில் தரம் 2இல் கல்வி கற்று வருபவராவார்.

குறித்த மாணவன் பஸ் ஸில் இருந்து இறங்கி பஸ்ஸுக்கு முன்பாகச் சென்றபோது, பஸ்ஸை முந்திச் சென்ற கன்ரர் வாகனம் மாணவனை மோதியுள்ளது. படுகாயமடைந்த மாணவன் முழங்காவில் பிரதேச வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

குறித்த கன்ரர் வாகனத்தின் சாரதி கைது செய் யப்பட்டுள்ளார் என் றும், மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

**கரடிப்போக்குச் சந்தி விபத்து**

நேற்று மாலை இராணுவத்தினர் பயணித்த சொகுசு வாகனம் மோதியதில் 129, இரண்டாம் கட்டை, பரந்தனைச் சேர்ந்த புவனேந்திரன் பவிதா (26) என்பவர் தலையில் படுகாயமடைந்தார்.

குறித்த பெண் வீதியைக் கடக்க முயன்றபோது கிளிநொச்சி நகர்ப் பக்கமாக வந்த இராணுவத்தினரி சொகுசு வாகனம் குறித்த பெண்ணை மோதியுள்ளது. காயமடைந்தவர் கிளிநொச்சி மருத்துவனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்கு சென்ற கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். அதே வேளை, விபத்துக்குள்ளான இராணுவ வாகனத்தை புகைப்படம் எடுக்க விடாது குறித்த வாகனத்தை இராணுவத்தினர் சூழ்ந்து நின்றனர் என்று கூறப்படுகின்றது. (ற-18,426,55)

### சாட்சியமளிப்பது

மக்கள் முன்னணி. அந்த வழிமுறைகள் ஊடாக மக்கள் தமது சாட்சியங்களை விசாரணைக் குழுவுக்கு வழங்குமாறும் அந்தக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து அந்தக் கட்சி மேலும் தெரிவித்துள்ளதாவது, மூன்று வகையான சம்பவங்கள் தொடர்பில் சாட்சியமளிக்கலாம்.

இறுதிப் போருக்கு முன்னர் நடந்த சம்பவங்கள் - ஐ.நா. விசாரணைக் குழு உத்தியோகபூர்வமாக 2001 ஆம் ஆண்டு காலப் பகுதியின் பின்னரான விடயங்களே கவனத்தில் எடுக்கும். ஆயினும் இலங்கையில் நடந்த, நடந்து கொண்டிருக்கும் பிரச்சினைகளை முழுமையாக விளங்கிக் கொள்ள உதவும் எந்த சம்பவத்தைப் பற்றிய தகவலும் தமக்கு உதவும் எனக் குறிப்பிட்டுள்ளனர். இது தொடர்பில் 1948ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பில் சாட்சியமளிப்பதில் தடையில்லை.

இறுதிப் போரின் பின்னரான சம்பவங்கள் - ஐ.நா விசாரணை உத்தியோகபூர்வமாக 2012ஆம் ஆண்டுக்கு முன்னரான விடயங்களையே கவனத்தில் எடுக்கும் என்றாலும் இலங்கையில் நடந்த, நடந்து கொண்டிருக்கும் பிரச்சினைகளை முழுமையாக விளங்கிக் கொள்ள உதவும் எந்த சம்பவத்தைப் பற்றிய தகவலும் தமக்கு உதவும் எனக் குறிப்பிட்டுள்ளனர். எனவே இன்றும் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் சம்பவங்கள் தொடர்பில் சாட்சியமளிப்பதற்குத் தடையில்லை.

இறுதிப் போரின் போதான சம்பவங்கள், இனப் பிரச்சினை தொடர்பிலான எந்த வன்முறைச் சம்பவம் தொடர்பிலும் சாட்சியமளிக்கலாம். கொலை, கடத்தல், காணாமல் போதல், காணாமற்போகச் செய்தல், பாலியல் வன்கொடுமை, காணி அபகரிப்பு, சித்திரவதைக்கு உட்படுத்தப்படல், அரசியல் கைதிகள், தொடர்ச்சியான கைது நடவடிக்கைகள், அச்சுறுத்தல்கள் பற்றியும் சாட்சியமளிக்கலாம்.

உங்கள் சாட்சியம் பின்வரும் விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது, சாட்சியம் தருபவர் தொடர்பான விடயங்கள் (பெயர், வயது, முகவரி) சம்பவம் நடந்த இடம், திகதி, சம்பவம் பற்றிய முழுமையான விபரிப்பு இருத்தல் வேண்டும். சம்பவத்திற்கு காரணமானவர்கள் யார் என்பதைப் பற்றி இயன்ற வரையில் முழுமையான விவரணங்களைக் கூறுங்கள். (உதாரணமாக - ஷெல் தாக்குதலால் மரணமடைந்திருந்தால் எந்தத் திசையிலிருந்து அந்த ஷெல் தாக்குதல் நடந்தது - அந்தத் திசையில் யார் நிலை கொண்டிருந்தனர் போன்ற தகவல்கள், காணாமற்போனோர் தொடர்பில் - எந்த முகாமைச் சேர்ந்தவர்கள் கடத்திக் கொண்டு போனார்கள் போன்ற விவரங்களைக் கூறமுடியும்.

சாட்சியங்கள் தமிழிலும் வழங்கப்படலாம். ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க வேண்டிய அவசியமில்லை. சுயமாகவும் தாயாரித்து அனுப்பலாம். இதற்கென்றொரு படிவம் இல்லை. கடிதம் போல் கூட எழுதி அனுப்பலாம். உதவி தேவைப்படுவோர் எமது கட்சி அலுவலகத்தை நாடலாம். தொடர்பு முகவரி: தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, இல 43, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

சாட்சியத்தை எங்கு அனுப்புவது என்பது பலருக்குத் தெரியாது. அதனை oisl submissions@ohchr.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது OISL, UNOG - OHCHR, 8 - 14 Rue de la Paix, CH - 1211 Geneva 10, Switzerland என்ற தபால் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம் .

சாட்சியமளிப்பதற்கான மாதிரி விண்ணப்ப படிவத்தினை தமிழ் பத்திரிகைகளில் பார்வையிட முடியும். அவ்வாறான ஒரு படிவத்தை நீங்களாகவே தயாரிக்க முடியும் அல்லது தமிழ்ச் செய்தி இணையத்தளங்களில் இருந்து தரவிறக்கம் செய்து பெற்றுக் கொள்ள முடியும்.

அந்தப் படிவங்களைப் பூர்த்தி செய்த பின்னர் மேலே கூறப்பட்டுள்ள மின்னஞ்சலுக்கு அல்லது தபால் முகவரிக்கு நீங்களாகவே அனுப்பி வைகக் முடியும். மேலதிக உதவி தேவைப்படுவோர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, இல 43, 3ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அல்லது 0212223 739, 0773024316, 0777 301021 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அல்லது tnpfparty@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

சாட்சியமளிப்பதற்கான இறுதித் திகதி எதிர்வரும் ஒக்டோபர் 30 ஆம் திகதியாகும்"- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-14)

# சமாதான சூழலைக் கட்டியெழுப்ப பொலிஸார் சிறப்பாக செயற்படுக

148 ஆவது பொலிஸ் தினமான நேற்று பொலிஸ்மா அதிபர் வலியுறுத்து





யாழ்ப்பாணம், செப்.4

குற்றப்பயத்தைக் குறைத்து சமாதானமான சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காக இன்னும் அதிக நோக்கோடு பொலிஸ்திணைக்களம் செயற்பட வேண்டியுள்ளது. அந்த நோக்கை வெற்றிகரமாக மேற்கொள்வதற்குப் பொலிஸார் அனைவரும் அர்ப்பணிப்போடு செயற்பட வேண்டும் என்று பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் திணைக்களத்தின் 148 ஆவது பொலிஸ் தினம் நாடளாவிய ரீதியில் சகல பொலிஸ் நிலையங்களிலும் நேற்று அனுட்டிக்கப்பட்டது.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் றொஹான் டயஸ், யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ்அத்தியட்சகர் பி.விமலசேன, யாழ்.பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் பெரேரா, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பல அதிகாரிகள், ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள், மதகுருமார்கள், அரச உத்தியோகத்தர் சிலர் கலந்து கொண்டனர்.

அதன்போது பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோனின் செய்தியை சிரேஷ்ட பொலிஸ்அத்தியட்சகர் பி.விமலசேன வாசித்தார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

போரை முடிவுக்குக் கொண்டு வந்து தாய்நாட்டின் சமாதானத்தை நிலைநிறுத்தி யிருக்கின்ற தற்போதைய காலத்தில் 84 ஆயிரத்து 100 இற்கும் அதிகமான சிரேஷ்ட, கனிஷ்ட அங்கத்தவர்கள் தமது உயிரை இழந்துள்ளனர்.

பொலிஸ் திணைக்களம் ஒழுங்கு முறையான திணைக்களமாகத் தீர்மானிக்கப்பட்ட 1866 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 3 ஆம் திகதியிலிருந்து இன்று வரைக்கும்கடந்து வந்த வரலாற்றில், நாட்டில் சட்டத்தை நிலைநாட்டிச் சமாதானத்தை நிலை நாட்டவும் அனைத்து மக்களின் உயிர், உடைமைகளைப் பாதுகாப்பது உள்ளிட்ட பணிகளைச் செய்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரும் நினைவுகூரப்பட வேண்டியவர்கள்.

விஞ்ஞான தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்ததன் காரணமாக இலங்கை உட்பட முழு உலகமும் ஒன்றாக உள்ளது.

தற்போது இலங்கை மக்களின் சமூக, பொருளாதார, கலாசார விழுமியங்கள் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதனால் எதிர்காலத்தில் எமது பொறுப்பு விரிவாக்கப்பட்டுள்ளது.

அதனால் பொலிஸார் தமது கடமையில் உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்துப் பொறுப்புக்களையும் கடமை களையும் ஒழுங்கான முறையில் மக்களோடு இணைந்து அன்பாக மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கையை எடுத்தல் எடுத்தல்வேண்டும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (வ-4)

## தமிழ் ஓட்டோச் சாரதிகள் கல்முனையில் ஆர்ப்பாட்டம்



கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட ஓட்டோத் தரிப்பிடத்தில் தமிழ் பிரதேச ஓட்டோக்கள் தரிப்பதைத் தடுத்து நிறுத்தும் வகையில் சகோதர இன ஓட்டோச் சாரதிகள் செயற்படுகின்றமையை கண்டித்து இதற்கான தீர்வை ஜனாதிபதி பெற்றுத்தர வேண்டும் என்று தமிழ் ஓட்டோச் சாரதிகள் சங்கம் கல்முனை பிரதேச செயலகம் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியிருந்தது. இந்தப் பேரணியில் கலந்து கொண்ட பாதிக்கப்பட்ட ஓட்டோ சாரதிகள் சார்பாக சிறிதரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்;

சங்கப் பிரதிநிதிகள் மாநகர முதல்வர் செயலகத்தில் முதல்வரின் செயலாளரைச் சந்தித்து உரையாடினார். இதுகுறித்து முதல்வருடன் தொடர்பு கொண்டு தெரியப்படுத்துவதாகக் கூறிய செயலாளர் ரீ.எல்.எம்.பாறூக் குறித்த பிரச்சினை தொடர்பில் முதல்வரால் தயாரிக்கப்பட்டு- தமிழரசுக் கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராசா, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் கல்முனை மாநகர சபையின் எதிரணித் தலைவர் ஏ.அமிர்தலிங்கம் ஆகியோருக்கு அனுப்பி வைத்திருந்த தீர்வு அறிக்கையின் பிரதியை சங்கப் பிரதிநிதிகளிடம் கையளித்தார். அதேவேளை அவர்கள் முதல்வருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடிய போது;

தான் இந்தப் பிரச்சினை தொடர்பில் தயாரித்து வெளியிட்டுள்ள தீர்வு அறிக்கையை நடைமுறைப்படுத்தத் தயாராக இருப்பதாகவும் அது தொடர்பில் தமிழரசுக் கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராசா, தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் கல்முனை மாநகர சபையின் எதிரணித் தலைவர் ஏ.அமிர்தலிங்கம் போன்றோரின் பதிலை எதிர்பார்த்துக் காத்திருப்பதாகவும் தெரிவித்தார். (வ-10)

## நோயாளர்கள் 20பேருக்கு ஆளுநரால் நிதி உதவி



வலி.வடக்கு, செப்.4

வட மாகாண ஆளுநர் நிதியத்தில் இருந்து வட மாகாணத்தைச் சேர்ந்த 20 நோயாளிகளுக்கு பத்து லட்சம் ரூபா நிதி உதவி வழங்கும் செயற்பாடு நேற்றுப் புதன்கிழமை மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் வட மாகாண ஆளுநர் தலைமையில் மதியம் இடம்பெற்றது.

வட மாகாணத்துக்கு உட்பட்ட மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 20 நோயாளர்கள் குறிப்பாக இருதய நோயாளர்கள் உள்ளடங்கலாக இந்த நிதி உதவியை பெற்றுக் கொண்டார்கள். வட மாகாண ஆளுநர், மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயக் குரு, வலி. வடக்கு பிரதேச செயலாளர், ஆளுநரின் செயலாளர் ஆகியோர் நோயாளர்களுக்கான காசோலைகளை வழங்கினார்கள். (வ-86)



வரலாற்றுப் புகழ் மிக்க தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய வருடாந்த திருவிழாவின் 7 ஆம் திருவிழாவில் அம்பாள் வெளி வீதியுலா வருகிறாள். (வ-86)

## மீனவர்களிடம் கையளிக்கும் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப்.4

காக்கைதீவு, பொன்னாலை, மாதகல் கடற்கரை ஆகிய இடங்களில் இன்றைய தினம் காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை கூறுவிலை மண்டபம், பொது மண்டபங்கள், மீன்பிடி உபகரணங்கள் ஆகியவற்றை மீனவர்களிடம் கையளிக்கும் வைபவங்கள் இடம்பெறவுள்ளன.

இதில் டி.சி.எம்.நிறுவனத்தின் துணைத் தலைவரான அன்ட்ரூமான முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சந்திரகுமார், யாழ்.அரச அதிபர் எஸ். அருமைநாயகம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வார்கள். (க)

## அமரர் தர்மலிங்கம் 29 ஆவது நினைவுதினம் நினைவுகூரல்

வலி.வடக்கு, செப்.4

உடுவில், மானிப்பாய் தொகுதிகளின் நாடாளுமன்ற உறுப்பினராக 23 ஆண்டுகள் தொடர்ந்து மக்களுக்குச் சேவையாற்றிய விஸ்வநாதர் தர்மலிங்கம் 29ஆம் ஆண்டு நினைவுதினம் நேற்று முன்தினம் தாவடியில் நினைவுகூரப்பட்டது.

தாவடியில் அமைந்துள்ள அவரின் நினைவுத் தூபிக்கு அருகாமையில் வலி.தென் மேற்குப் பிரதேச சபை உறுப்பினரும், தர்மலிங்கம் நினைவுக்குழுவின் தலைவருமான கௌரிகாந்தன் தலைமையில் நேற்று முன்தினம் காலை 7மணியளவில் ஆரம்பமாகி நடைபெற்றன. இதன்போது மலரஞ்சலியும் மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டு நினைவுக் கூட்டமும் இடம்பெற்றது.

இதன்போது தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களுள் ஒருவரான பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் பிரதான நினைவுரையை ஆற்றினார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி, லண்டனிலிருந்து வருகை தந்திருந்த அரசியல் பிரமுகர் சிறீ கொங்காதரன், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் குமாரவேல், வலி. தெற்கு பிரதேச சபை தவிசாளர் பிரகாஸ், வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி. நாகரஞ்சனி ஐங்கரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வை. பாலச்சந்திரன், வலி.தென் மேற்கு பிரதேச சபை உறுப் பினர் கணேசவேல், வலி. தெற்கு பிரதேசசபை உறுப்பினர் பரமேஸ்வரலிங்கம், அமரர் வி.தர்மலிங்கத்தின் புதல்வரும், புளொட் தலைவரும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோரும், அமரர் தர்மலிங்க[illegible]தின் ஆதரவாளர்கள், நண்ப[illegible]கள் மற்றும் பெருமளவிலான பொதுமக்களும், இந்த நிகழ்வி[illegible] கலந்து கொண்டனர்.



இதேவேளை- அமரர் வி.தர்[illegible] லிங்கம் ஞாபகார்த்தமா[illegible] யாழ். கோப்பாய் தேசிய கல்[illegible] யியல் கல்லூரியில் நிறு[illegible] பட்டுள்ள அன்னாரது உரு[illegible] சிலைக்குக் கல்லூரியின் பீ[illegible] திபதி அமிர்தலிங்கம் தல[illegible] மையில் மலர் மாலை அ[illegible] விக்கப்பட்டு இரங்கல் கூட்[illegible] இடம் பெற்றது. இதன்போ[illegible] கல் லூரியின் பீடாதி[illegible] அமிர்தலிங்கம், லயன் [illegible] திய கலாநிதி தியாகராஜா, த[illegible] லிங்கம் சித்தார்த்தன் [illegible] யோர் உரையாற்றினர். (வ-8[illegible]

# யுவதியை வன்புணர்ந்து கொன்ற வைத்தியருக்கு சாவுத் தண்டனை

## நீர்கொழும்பு நீதிமன்றம் நேற்று தீர்ப்பு

கொழும்பு, செப். 4

சிகிச்சைக்காக வைத்தியசாலைக்குச் சென்ற யுவதியை வன்புணர்வுக்கு உட்படுத்தி கொலை செய்தமை நிரூபிக்கப்பட்ட நிலையில் கைதுசெய்யப்பட்டிருந்த வைத்தியருக்கு சாவுத் தண்டனை விதித்து நேற்று நீர்கொழும்பு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மொனராகலைப் பகுதியைச் சேர்ந்த 22 வயதான சுமிலா திஸாநாயக்க என்ற ஆடைத் தொழிற்சாலை ஊழியரை 2007 ஆம் ஆண்டு நவம்பர் 12ஆம் திகதி நீர்கொழும்பு வைத்தியசாலையில் வைத்து பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தி மாடியிலிருந்து கீழே தள்ளி கொலைசெய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட வைத்தியர் சுதர்ஷன பாலகே ஜயதிஸ்ஸ என்பவருக்கே இவ்வாறு சாவுத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

நேற்று புதன்கிழமை இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது வைத்தியசாலை ஊழியர் ஒருவர் சாட்சியம் அளிக்கையில், வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட யுவதியைக் கொலை செய்து கார்ட்போர்ட் ஒன்றில் சுற்றி நீர்கொழும்பு வைத்தியசாலையின் ஆறாவது மாடியில் உள்ள அறையொன்றுக்கு சந்தேகநபரான வைத்தியர் இழுத்துச் செல்வதைக் கண்டதாகக் கூறினார்.

சந்தேகநபர் குற்றச்சாட்டுகளை மறுத்துவந்த போதிலும் ஆதாரபூர்வமாகக் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டமையால் நீர்கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி எச்.எச்.ஏ. கபூர் குறிப்பிட்ட நபருக்கு யுவதியை வன்புணர்வுக்கு உட்படுத்தியமைக்காக 15 வருட கடூழியச் சிறைத் தண்டனையும், கொலை செய்தமைக்காக சாவுத் தண்டனையும் விதித்து தீர்ப்பு வழங்கினார்.

# வலிப்பு ஏற்பட்டுச் சிறுவன் சாவு

தென்மராட்சி, செப். 4

4 தினங்களாகக் காய்ச்சல், தடிமன், வயிற்றுளைவு ஏற்பட்ட 4 வயதுச் சிறுவனுக்கு வலிப்பு ஏற்பட்டு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தான். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

கைதடி வடக்கைச் சேர்ந்த செல்வரத்தினம் ஆருரன் (வயது-4) என்னும் சிறுவனே உயிரிழந்தவராவார்.

நேற்று அதிகாலையில் வலிப்பு ஏற்பட்ட நிலையில் சாவகச்சேரி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுப் பின்னர் யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பப்பட்டுச் சிகிச்சை பயனின்றி அங்கு உயிரிழந்த தாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த சாவு தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர். சாவு தொடர்பாக திடீர்ச் சாவு விசாரணை அதிகாரி மூலம் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

(கு-9)

# சப்ரகமுவ மாணவர் அறுவர் ரி.ஐ.டியினரால் கைது

யாழ்ப்பாணம், செப். 4

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் பயிலும் தமிழ் மாணவர்கள் 6 பேர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. இந்தக் கைதைக் கண்டித்து றுகுணு, ரஜரட்ட மற்றும் பெரதெனியா பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முற்பகல் தொடக்கம் மதியம் வரை வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த 6 மாணவர்களும் பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் இரவு விரிவுரைகள் நிறைவடைந்த பின்னர்; விடுதிகளுக்கு திரும்பிக் கொண்டிருந்தபோதே இரவு 7. 45 மணியளவில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் அவர்களைப் பின்தொடர்ந்து சென்று விசாரணை செய்ய வேண்டும் என்றுகூறிக் கைது செய்துகொண்டு சென்றுள்ளனர். மாணவர் களை பல்கலைக்கழகத்தின் வாடி வீட்டில் வைத்து விசாரணைக்குட்படுத்தியுள்ளனர் என்றும் ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதமும் சப்ரகமுவ பல்கலைக் கழகத்தின் சமூக மற்றும் மொழிப் பீடத்தின் முதலாம் ஆண்டில் பயிலும் தமிழ் மாணவர் மீது தாக்குதல் நடத்தி அச்சுறுத்தும் வாசகங்கள் எழுதப்பட்ட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்ததுடன் அந்த பீடத்தைச் சேர்ந்த யோகராஜா நிரோஜன் என்ற மாணவரை கடத்திச் சென்ற பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் அவரை தடுத்து வைத்திருந்தனர்.

பின்னர் மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டங்களை அடுத்து அவர் விடுதலை செய்யப்பட்டார். எனினும் அதற்கு முன்னர் தாக்குதலுக்கு உள்ளான தமிழ் மாணவரை பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் கைது செய்து கடந்த 23 நள்களாக தடுத்து வைத்துள்ளனர்.

(ற-4)

31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

பிறப்பு * 15 * 01 * 1936



இறப்பு * 05 * 08 * 2014

**திருமதி செல்லம்மா (சரஸ்வதி) துரைராசா**

கடந்த 05.08.2014 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்தியம் இன்று (04.09.2014) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(51640)(10.6.3)

"இராஜமாளிகை",
பிரம்படி லேன், கொக்குவில்.

குடும்பத்தினர்.

போட்டிப் பரீட்சை வழிகாட்டிகள் விற்பனையாகின்றன

தொகுப்பு:
த.தவசேகர்

★ கமநல திணைக்கள எழுதுவினைஞர் வழிகாட்டி விலை 300/=

★ 27ஆம், 28ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள SLAS பரீட்சைகளுக்கான அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய வழிகாட்டி விலை 600/=

★ சகல பரீட்சைகளுக்குமான பொது உளச்சார்பு வழிகாட்டி விலை 350/=

★ அரச முகாமைத்துவ உதவியாளர் பரீட்சை வழிகாட்டி புதிய வினாத்தாள் மாதிரிக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டு அடுத்த வாரம் வெளிவரும்

பூபாலசிங்கம், அன்னை, ஸ்ரீலங்கா, தர்க்கா, சிதம்பரப்பிள்ளை, கவிதா, சுஜன், ஜோதி புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம்

ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும், உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. (யாழில் 1976 முதல்). 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள், சரியான உச்சரிப்பு, நேரடியாக பிரெஞ் ஆசிரியரிடம் படிக்கலாம். இலங்கையில் AF மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF A1, A2) ஐ வழங்குகின்றது. (எங்கு படித்தாலும் DELFஐ எமது கிளைகளில் மட்டுமே எழுத முடியும். பரீட்சை கட்டணம் : AF மாணவர்களுக்கு Rs.3500 ஏனையோருக்கு Rs.9000). பிரெஞ்சு மொழிபெயர்புகள், AUDIO CDs & BOOKS இலவசமாக பாவிக்கலாம். யாரும் படிக்கலாம். ஓரிரு மாதங்களும் படிக்கலாம். LETTRE & PHOTOCOPIES இலவசம். உடன் பதியுங்கள் ஆரம்பம்6.9.2014

குறிப்பு :வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு உத்தியோகபூர்வ நிறுவனம் AF மட்டுமே. பொய் விளம்பரங்களை நம்பாதீர்கள்

021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்..

கச்சேரி → புகையிரதகடவை → AF or ஆரியகுளத்திலிருந்து நக்கா றோட் → AF

மிக அற்புதமான அபூர்வமான
பொன்னான உண்மையான வாய்ப்பு

கனடா PR (நிரந்தரக்குடியுரிமை)
உடன் படிக்க உழைக்க
அரியவாய்ப்பு

3 பேருக்கு மட்டுமே. 04.09.2014 வரை மட்டுமே.
தவறவிடாதீர்கள்.
மிகக் குறைவான கட்டணத்துடன் இது சாத்தியமாகின்றது.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090

(51590)(6.4.3)



VACANCIES @ ESOFT
Shaping Lives, Creating Futures.

Join SriLanka's #1

JAFFNA | KILINOCHCHI | NELLIADY

**Lecturers in IT (Full Time)**

Would be responsible to conduct lecturers for Diplomas, Higher Diplomas and Degree Programmes. Must be a graduate in IT/Computing or a higher Diploma holder. Experience is not a must, but would be an advantage. Area of Expertise we are looking for include Programming in JAVA, C#,.Net, ASP.Net, C,C++, Software Engineering, Hardware, Networking & Database Management.
Good perfomers have the opportunity to advance to the level of Programme Manager.

**Business Development Excecutive**

- Generate new Business.
- Handle the customer relationships
- A passion to succeed and archieve targets
- Possition carry a an attractive remuneration Package on par with industry rate.
- Age 22 to 30 years

**Salary Benifits**

Successful candidates will be paid a salary higher than industry rate. other benefits are also available

**How to Apply**

Send us a CV to reach us within 07 Days of this advert, to jaffna@esoft.lk. mentioning the Post and Preferred Branch in the Subject line of your email.

ESOFT Shaping Lives, Creating Futures.

ESOFT METRO CAMPUS - JAFFNA
No.137, K.KS, Road, Jaffna | Tel : 021 222 4142 | 077 309 9 308
web : www.esoft.lk E-mail : jaffna@esoft.lk

A/L நிறுப் பின்னர்

HND கல்வியினை
அனுபவமிக்க விரிவுரையாளர்களிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள்



BTEC edexcel HND
SOFTWARE ENGINEERING
SINESS MANAGEMENT

36+ ஆண்டுகள் ஒருங்கிணைந்த விரிவுரை அனுபவம்

நன்மைகள்
பகுதி நேர அல்லது முழு நேரக்கல்வி
மறைமுக செலவீனங்கள் இல்லை
வேலைவாய்ப்புகளுக்கு பரந்த வாய்ப்புக்கள்
Diploma in English கற்கை நெறி இலவசம்

Edexcel -UK இனால் 2013 ம் ஆண்டிற்கான
தங்கப்பதக்கம் பெற்ற நிறுவனம்

புதிய பிரிவுகள் 14.09.2014 9:00am

Your Career Pathway
HND 18 Months → Top-up Degree 1 Year → Masters 1 Year

Leading to B.Sc from London Metropolition University through ESOFT

ESOFT Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
Sri Lanka's Largest IT Education Network

ESOFT METRO CAMPUS - JAFFNA
No.137, K.K.S Road, Jaffna
Tel: 021 222 4142 | 077 309 9 308

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.